
கோகுலம்

GOKULAM

டிசம்பர் 83 ரூ2/-





ராஜாஜி

பிறந்த நாள் — டிசம்பர் 10

கோகுலம்

மலர்—1 இதழ்—11 1983 டிசம்பர் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ 2/- ஆண்டுச் சந்தா ரூ 24/-

அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு

கோகுலம்

தீபாவளியையும், நேருமாமா பிறந்த நாளாகிய குழந்தைகள் தினத்தையும் குதூகலமாகக் கொண்டாடியிருப்பீர்கள்.

தீபாவளிக்கு ஏராளமான சிறுவர், சிறுமியர் வாழ்த்து அனுப்பியிருந்தார்கள். சிலர் அழகான வண்ணப் படங்களைத் தாங்களே வரைந்து அனுப்பியிருந்தார்கள். உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி.

இந்த இதழைப் புரட்டியதும், சிறிது ஏமாற்றமாகத்தான் இருக்கும். ''என்ன இது! வண்ணப் படங்களைக் காணுமே! இனி மேலும் இப்படித்தான் 'கோகுலம்' வருமோ?'' என்று நினைப்பீர்கள். இந்த ஓர் இதழில்தான் வண்ணப்படங்களை வெளியிட முடியாமல் போய்விட்டது. காரணம் வேறொன்றுமில்லை.

ஒரே நிறுவனத்திலிருந்துதான் 'கல்கி', 'மங்கையர் மலர்', 'கோகுலம்' மூன்றும் வருகின்றன என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். 'கல்கி' தீபாவளி மலர் மிகப்பெரிய அளவில், பல வண்ணப் படங்களுடன் வெளியிட வேண்டியதிருந்ததால், கோகுலத்தை உரிய காலத்தில் வண்ணப் படங்களுடன் வெளியிட இயலாமல் போய் விட்டது. வருத்தப்படாதீர்கள். அடுத்த இதழிலிருந்து மீண்டும் வண்ணப் படங்களைக் காணலாம்.

'குப்புசாமி, அப்புசாமி' பாடல்களைத் தொடர்ந்து 'படித்து மகிழ்ந்தீர்கள். அந்தப் பாடல்களைப் படித்துப் படித்து அவற்றைப் போல எழுதவேண்டும் என்று சில சிறுவர்களும் சிறுமியரும் முயன்றார்கள். செல்வன் பா. ராகவன் செப்டம்பர் இதழிலும், செல்வி ஆண்டாள் பிரியதர்சினி இந்த இதழிலும் எழுதிய பாடல்களைப் படித்தபோது அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. குப்புசாமியும் அப்புசாமியும் இப்படிப்பட்ட இளங்கவிஞர்களுக்கு ஊக்கமளித்திருக்கிறார்களே, அதுவே பெரிய வெற்றி. இன்னும் தொடர்ந்து நான் எழுத வேண்டுமா? மற்றவர்கள் எழுதட்டும். இளங்கவிஞர்கள் மேன்மேலும் உருவாகட்டும். வாழ்த்துக் கூறி வரவேற்போம்.

- அழ. வள்ளியப்பா
கௌரவ ஆசிரியர்



இந்த இதழ் எழுத்தாளர்கள்




கே. ஜெயலட்சுமி (மகேசுவரி)



ஆண்டாள் பிரியதர்சினி




ஈ. எஸ். நரசிம்மன் (ஈ.ஸ்ரீ)



வி. ராதாகிருஷ்ணன்



குறிஞ்சிப்பாடி கணேசன்




செ. வரதராசன் (உமா)

'பரிதி' இரா. வேங்கடேசன்



அட்டைப்பட வண்ணப்படம்: ரவீந்திர பல்லா





பாரத ரத்தினம் ராஜாஜி

பாரத ரத்தினம்!
பாரினில் உத்தமர்!
மாரத வீரர்போல்
மாமதி பெற்றவர்!

செங்கோ லோச்சிய
செம்மைச் செயலில்,
எங்கணும் இவர்க்கே
ஈடிணை யாருளர்?

செய்வதைச் சொல்லுவார்!
சொல்வதில் வெல்லுவார்!
உய்வழி இவையென
உலகினுக் குணர்த்துவார்!

மெய்வழி நடப்பதை
மேம்படப் போற்றுவார்!
பொய்வழி என்றுமே
போகாத இராஜாஜி!

எல்லாப் பொருளும்,
இதன்பால் உளதெனச்
சொல்லுவார் குறளினை,
சுகமாய்ப் படித்தவர்!

எல்லாப் பதவியும்
இவரையே தேடின,
நல்லவர் இவரென
நானிலம் மெச்சிட!

—கோமதி



சார், தபால்!

நவம்பர் இதழ் வெகு சிறப்பாக உள்ளது. நேரு பற்றிய பல செய்திகளும், படங்களும் மிகவும் பயன் தருபவை.

—தெ. முருகசாமி, முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

'பாஸ்போர்ட்', 'விசா' ஏதுவுமின்றிச் சிங்கப்பூரை நேராகக் காணும் உணர்வை ஏற்படுத்திய ஆர். கார்த்திகேயனுக்கு நன்றி.

—இ. ச. கோபுராஜ், கடலூர்.

'இப்படியும் ஒரு பிள்ளை' கதையைப் படித்த தாத்தா என் அப்பாவிடம், ''இவனுக்கு 'கோகுலம்' வாங்கித் தருவதை நிறுத்தி விடாதே'' என்றார்.

—மு. பாபு, திண்டுக்கல்—3.

'பாரதமாதாவுக்கு ஜே!' என்றால் என்ன? என்பதை நேரு மாமா அருமையாக விளக்கியிருக்கிறார். மாணவர்களின் முதல் கடமை, இரண்டாம் கடமை, மூன்றும் கடமை எது என்பதும் நேரு மாமா மூலமாக அறிகிறோம். மிகவும் பயனுள்ள அன்புரைகள்.

—இ. செந்தில், திருவாரூர்.

'கேள்வி நேரத்'தைத் தொடர்ந்து வெளியிடுங்கள். அது எனக்கு நல்ல துணைவனாக இருக்கிறது.

—எஸ். வனஜா (1329) ஆரணி.

சார், வயிற்று வலிக்கு ஏதாவது மாத்திரை இருந்தால், ஒரு டின் அனுப்புங்களேன். என் சிறுவர் சங்க உறுப்பினர்களும் நானும் 'பேகம் கழுதை'யைப் படித்து விட்டுச் சிரிசிரியென்று சிரித்தோம். வயிற்று வலி தாங்க முடியவில்லை.

—த. அருள் சிவபாலன், தலைவர், வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்கம், செங்கல்பட்டு.

பக்கத்துக்குப் பக்கம் 'நேரு மாமா'வைப் பற்றி அரிய கருத்துக்களைத் தந்து, 'இரட்டைத் தீபாவளி' போல் குதூகலம் உண்டாக்கி விட்டீர்கள்.

—சோலை இசைக்குயில், ஜோலார்ப்பேட்டை.

'சின்னஞ்சிறு கிளியே' கதையைப் படித்ததும், தாய் சொல்லின் பெருமையை நன்றாக உணர்ந்தேன்.

—எல். ஜெயராமன் (3436) பம்பாய்—58.

'மிக்மினிக் கதைகள்' நாலைந்துதானா? இன்னும் நிறைய இல்லையே என்று ஏங்கினேன்.

—கோ. ஞானப்பிரகாஷ், அழகியநல்லூர்.

நேருஜி பிறந்த நாளில் பிறந்த குழந்தைகளின் புகைப்படங்களைக் கண்டு மகிழ்ச்சியும் பிரமிப்பும் அடைந்தேன்.

—விஜயா ரங்கநாதன், டோம்பிவிலி.

'இளமையில் இவர்கள்', 'விஞ்ஞான விளையாட்டு' இரண்டையும் நவம்பர் இதழில் காணோமே! மிகவும் உபயோகமான இந்த இரண்டையும் எக்காரணம் கொண்டும் நிறுத்தாதீர்கள்.

—கே. பி. கேசவன், திருவாவடுதுறை.

'புதையல் தீவு'கதையை முன்பே பாடமாக நான் படித்திருந்தாலும், எத்தனை முறை படித்தாலும் அலுப்பு ஏற்படாத வகையில் எச். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தந்திருக்கிறார்.

—ஏ. எம். முஹம்மது நிஸாமுத்தீன், நீடூர்.

'இப்படியும் ஒரு பிள்ளை' முழுநீளச் கதைக்கு ஓவியம் வரைந்தவர் பெயரை வெளியிடவில்லையே! யாரென்று நான் சொல்லட்டுமா?' ஜெயராஜ்தானே?

—எஸ். கனகராஜ் (1174) கன்னியாகுமரி.

(அடே, கனகராஜுக்குக் கெட்டிக்காரன் என்ற பட்டம் கொடுக்க வேண்டியது தான்! —ஆசிரியர்)

'புலியால் ஏற்பட்ட கிலி' வெகு அருமை. 'குப்புசாமி, அப்புசாமியை'ப் படித்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தேன்.

—சி. என். செல்வகுமாரி, மேலக்காவேரி.


தேனி முருகேசனின் 'கேள்வி நேரம்' சிறுவர்களுக்கு மட்டுமல்ல; பெரியவர்களுக்கும் இனிக்கும் தீபாவளி விருந்து. 'திரு.வி.க. சொன்ன செய்தி' குறிப்பிடத்தக்கது.

—தென்றல் ராமலிங்கம், சென்னை—33.



CLARION/NC/8340

மின்மினிக் கதைகள்





ராஜா வேஷம்

கிராமத்தில் நடந்த தெருக் கூத்தில் சாம்பிராணிப் பிள்ளை ராஜா வேஷம் போட்டான். நாடகம் முடிந்ததும், ராஜ உடுப்புடன் வீட்டுக்கு வந்தான்.

அவன் தன் மனைவியிடம், ''நான் யார் தெரியுமா? நான்தான் ராஜா!'' என்றான். மனைவி உடைகளைக் கழற்றி வைக்கச் சொன்னாள். அவன் கேட்கவில்லை.

இரவு ராஜ உடையுடன் படுத்துக் காலையில் எழுந்தான். ''மந்திரியே!'' என்று அழைத்தான். அவன் வீட்டு நாயின் பெயர் 'மந்தி' அது வாலை ஆட்டிக்கொண்டு வந்தது.

''நான் யுத்தத்துக்குப் போகிறேன். வெற்றி மாலை சூடி வருவேன்'' என்று நாயுடன் புறப்பட்டான்.

''ஐயோ! ஊரார் சிரிப்பார்களே! வெளியில் இந்த உடுப்புடன் போகாதீர்கள்'' என்று அவன் மனைவி தடுத்தாள். அவன் ''என்னைத் தடுக்காதே!'' என்று கூறிப் புறப்பட்டுவிட்டான்.

வழியில் ஒரு நரி வந்தது. அது தினசரிப் பத்திரிகைகளைத் தவறாமல் படிக்கும். அது அவனைப் பார்த்து, ''ஐயா, சாம்பிராணி ராஜாவே, நம் தேசத்திலுள்ள ராஜாக்கள் எல்லோருடைய வேஷமும் முடிந்துவிட்டது. பேசாமல் அரண்மனைக்குத் திரும்பும்'' என்றது.

''இது உண்மையா?'' என்று நாய்-மந்திரியைக் கேட்டான். 'ஹூம், ஹூம்' என்று மெதுவாக அது சப்தம் செய்தது.

சாம்பிராணி உடனே வீடு திரும்பினான். ''எல்லா ராஜாக்களும் ஒழிந்தார்கள். நானும் இனிமேல் சும்மா இருப்பேன்'' என்றான்.

அவன் மனைவிக்கு நிம்மதி ஏற்பட்டது!

துளசியும் ரோஜாவும்

மதுராபுரி நந்தவனத்தில் ஒரு விஷ்ணு பக்தர் தினமும் வந்து குடலையில் துளசி பறித்துச் செல்வார். அரண்மனைப் பெண்கள் ரோஜா மலர்களைப் பறித்துச் செல்வார்கள்.

''நீ வெறும் இலையாகப் படர்ந்திருப்பதனால், ராஜகுமாரிகள் நெருங்குவதில்லை'' என்று துளசிச் செடியிடம் திமிராகக் கூறியது ரோஜாப்பூ.

''சுவாமியின் பாதத்தில் என் கொழுந்துகள் போய்ச் சேருகின்றனவே! அதைவிட என்ன வேண்டும்?'' என்றது துளசிச் செடி.

ஒரு நாள் ராஜாவின் சின்னப் பெண் பூப்பறிக்க வந்தாள். ரோஜாப் பூவைப் பறிக்கும்போது செடியிலிருந்த முள் கையைக் குத்திவிட்டது. அவள் கையிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்ட ராஜாவுக்குக்











கோபம் வந்துவிட்டது. ரோஜாச் செடியில் முள் இருப்பது அவருக்குத் தெரியாது. ரோஜா மாலைகளைத்தான் அவர் பார்த்திருக்கிறார்.

''இந்த முள் செடியிலா ரோஜாப்பூ பூக்கிறது? சேச்சே, உடனே இந்த ரோஜாச் செடிகளை வெட்டி எறியுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

கடைசியில், துளசிச் செடி மட்டுமே நந்தவனத்தில் நின்றது!

பிடிபட்ட பாம்பு

'இந்தப் பாம்பை எப்படியாவது பிடித்துவிட வேண்டும்' என்று ஒரு குரங்கும் ஒரு பூனையும் தீர்மானித்தன. புற்றின் அருகிலே காத்திருந்தன. பாம்பு வெளியில் வந்ததும் பூனை பாய்ந்தது. அதன் கழுத்தைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. குரங்கு வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

வெகு நேரம் இப்படிப் பிடித்துக் கொண்டே இருந்தன. இரண்டுக்கும் பசி வந்து விட்டது. 'நான் ஒரே ஓட்டமாக ஓடி ஏதாவது சாப்பிட்டு வருகிறேன்' என்றது குரங்கு.

''முடியாது. நீ போனால் இது வாலால் என்னை வளைத்து நசுக்கிவிடும்'' என்றது பூனை.

சிறிது நேரம் கழித்துப் பூனை, ''நீ கொஞ்சம் பாம்பின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிரு. நான் சாப்பிட்டு வருகிறேன்'' என்றது.

''ஐயோ! பாம்பு என்னைக் கடித்துக் கொன்றுவிடும். முடியாது'' என்றது குரங்கு.


அப்போது ஓர் எலி அந்தப் பக்கமாக ஓடியது. பூனை பாம்பின் கழுத்தை விட்டு விட்டு எலியின் மீது பாய்ந்தது. உடனே பாம்பு குரங்கைக் கடித்துவிட்டுப் புற்றுக்குள் புகுந்து கொண்டது.


குரங்குக்கு விஷம் ஏற ஏற அதற்குப் பூனையின் மேல் கோபம் அதிகரித்தது. உடனே அது பூனையின் மேல் பாய்ந்து அதைக் கடித்துக் கிழித்துக் கொன்றுவிட்டுத் தானும் இறந்தது.

கடைசியில் மிஞ்சியது பாம்பு மட்டும்தான்!

கழுதையும் மூட்டையும்

பெரிய அழுக்கு மூட்டை ஒன்றைக் கழுதையின் முதுகில் ஏற்றினான் சலவைத் தொழிலாளி. பாரம் தாங்காமல் கழுதையின் முதுகு வளைந்தது. நடக்க முடியவில்லை. அடி அடியென்று அதை அடித்து ஓட்டினான் சலவைத் தொழிலாளி.









அப்போது அழுக்கு மூட்டை, ''ஏ கழுதையே, நான் ராஜா மாதிரி உன்மேல் சவாரி செய்கிறேன். நீ அரண்மனைக் குதிரை போல் நடக்க வேண்டாமா?'' என்றது.

ஆற்றை அடைந்ததும் சலவைத் தொழிலாளி மூட்டையை அவிழ்த்தான். அவனும் அவன் மனைவியும் துணிகளைக் கல்லின் மேல் அடி அடி என்று அடித்துத் துவைத்தார்கள். பிறகு, நன்றாகக் கசக்கிப் பிழிந்தார்கள். அதைக் கண்டு கழுதை கேலி செய்தது.

வீட்டுக்கு வந்ததும் ஒவ்வொரு துணியாக எடுத்து மடித்து இஸ்திரி போட்டான், சலவைத் தொழிலாளி. சூடு தாங்காமல் அலறிய துணியைக் கண்டு மேலும் கேலி செய்தது கழுதை.

''நீ கிழிந்து குப்பைத் தொட்டிக்குப் போகும்வரை இப்படித் துன்பப்படத்தான் வேண்டும்'' என்றது கழுதை.

ஆயுத பூஜை

நவராத்திரி வந்தது. பாண்டிய நாட்டின் அரண்மனையில் ஆயுத பூஜை நடந்தது. வில், அம்பு, கத்தி, சூலம், கலப்பை, மண்வெட்டி, சுத்தி, உளி, அரிவாள், ரம்பம், கோடாலி, ராட்டை, தறி இன்னும் பல கருவிகளையும் ஆயுதங்களையும் பூஜையில் கொண்டு வந்து வைத்தார்கள்.

அரண்மனையின் ஒரு மூலையில் துக்கத்தோடு சாய்ந்து கொண்டிருந்தது விளக்குமாறு. துக்கத்திற்கு என்ன காரணம் என்று அதைப் பார்த்து ராஜகுமாரி கேட்டாள்.


''எல்லா ஆயுதங்களையும் கருவிகளையும் பூஜையில் வைத்திருக்கிறார்கள். என்னை மட்டும் மறந்துவிட்டார்களே!'' என்றது விளக்குமாறு.

உடனே விளக்குமாறு, முறம் முதலியவற்றையும் பூஜையில் வைக்கும்படி சொன்னாள் ராஜகுமாரி. சேவகர்கள் தயங்கி ராஜாவிடம் போய்ச் சொன்னார்கள்.

ராஜா, குருவைக் கேட்டார். அவர் ஏடுகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு, ''ராஜகுமாரி சொல்வது சரியே. மக்களுக்குப் பயன்படும் எந்தக் கருவியும் பூஜைக்கு உரியதே!'' என்றார்.

விளக்குமாற்றுக்கும் முறத்துக்கும் சேர்த்துப் பூஜை நடந்தது. அன்று முதல் பல காலம், அந்த நாட்டில் எந்த மூலையிலும் அழுக்கு, தூசி என்பதே இல்லாமல் சுத்தமாக இருந்தது.


ராஜாஜி எழுதி வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள 'குழந்தைகளுக்கான குட்டிக் கதைகள்' என்ற புத்தகத்தில் காணப்படும் சில கதைகளையே இங்கு சுருக்கித் தந்திருக்கிறோம்.





அன்னை மேரியும் அற்புதக் குழந்தையும்

வணங்குவோர்: ஜான் கென்னடி, ஞானசௌந்தரி



1,000 மக்கள் கொண்ட சுதந்திர நாடு!



இத்தாலி தேசத்தின் தலைநகரான ரோம் நகரின் நடுவே ஒரு நகரம் இருக்கிறது. இதன் பரப்பு சுமார் நாலரை லட்சம் சதுர மீட்டர்தான்! இதில் சுமார் 1000 மக்களே வாழ்கிறார்கள். நகரைச் சுற்றிலும் மதில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குள் கிறிஸ்தவக் கோயில்களும் கட்டடங்களும் இருக்கின்றன.

அந்நகரம் ஒரு தனி சுதந்திர நாடாக இருக்கிறது. அந்த நாட்டிற்கென்றே தனிக் கொடி உண்டு: தனி நாணயங்கள் உண்டு. தனி நீதி மன்றம் உண்டு; தனிக் காவல் துறை உண்டு; தனி ஒலிபரப்பு நிலையமும் உண்டு.

ஓர் அரண்மனையும் அங்கு உள்ளது. அது போப்பாண்டவரின் அரண்மனை.

இந்த நகரத்தின் நிர்வாகத்தைக் கவனிப்பவர் போப்பாண்டவர்தான். அவர்தான் அந்த நாட்டின் தலைவர்.

தனி நாடாக விளங்கும் அதன் பெயர் **வாட்டிகன் நகரம்!**



சிறுவர்களுக்குச் சேவை செய்ய வாய்ப்பு

சின்னஞ் சிறு வயதிலேயே சேவை மனப்பான்மை வளர வேண்டும் என்று இளைஞர்களுக்கும் சிறுவர் சிறுமிகளுக்கும் ஆசை இருக்கலாம். இந்த ஆசையைப் பூர்த்தி செய்ய 'சங்கரா வாலண்டியர் சர்வீஸ்' காத்திருக்கிறது. இந்தப் பணி மன்றம் ராஜா அண்ணாமலைபுரத்தில் ஜயேந்திர சுவாமிகளின் நல்லாசியோடு தொடங்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு வயதிலிருந்து சிறுவர்கள் இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்கலாம். பிறருக்கு உதவி புரிவதே இந்தப் பணிமன்றத்தின் நோக்கம்.

பிடியரிசித் திட்டம் காஞ்சி சங்கராசாரிய சுவாமிகளுக்கு மிகவும் பிடித்தமான கைங்கரியம். ஒரு பிடி அரிசி ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் சேகரித்து சிறுதுளி பெருவெள்ளம் ஆகும் என்பதுதான். இந்த அரிசியை வித்யார்த்திகளுக்கும் ஏழைகளுக்கும் விநியோகம் செய்கிறார்கள்.

இந்த வாலண்டியர் சர்வீஸில் சேர்ந்த இளைஞர்கள் தெய்விகக் கூட்டங்களிலும் கோவில் திருவிழாக்களிலும் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவார்கள்.

கலாசார ஒற்றுமைக்கும் நமது இந்து சநாதன தர்மத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் இப்பணி மன்றத்துக்கு உண்டு.

இந்தப் புனிதக் கைங்கரியத்துக்கு மிகுந்த சிரத்தையுடன் பாடுபட்டு வருபவர் கிண்டி இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றி வரும் ஸ்ரீ டி. என். வேங்கடராமன். பல பயிற்சியாளர்களை உருவாக்கி வருகிறார். சேவை மனப்பான்மையும், நம் இந்து தர்மத்தில் அக்கறையும் கொண்ட சிறுவர்கள் இந்தப் பணி மன்றத்தில் பயிற்சி பெறலாம்.

அவரது முகவரி: ஸ்ரீ டி. என். வேங்கடராமன், 6, முதல் கிராஸ் ரோடு, ஐ.ஐ.டி. காம்பஸ், சென்னை-36.

அம்பக்

பெரும்புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் டார்வின் அவர்கள் பிராணிகளைப் பற்றி ஆராய்ந்து அறிந்தவர்.

ஒருசமயம், குறும்புள்ளம்கொண்ட சிறுவர்கள் சிலர் ஒன்றுகூடி, நீல நிற வண்டொன்றைப் பிடித்து, அதன் இறகுகளைப் பிய்த்துவிட்டு, அதற்குப் பதிலாக வண்ணத்துப் பூச்சியின் இறகுகளையும், இன்னும் வெட்டுக்கிளி, கருவண்டு ஆகியவற்றின் உறுப்புக்களையும் அதோடு இணைத்து ஒட்டிக் கொண்டு டார்வினிடம் வந்தனர். ''ஐயா! இதோ பார்த்தீர்களா? புது வகையான பூச்சி!'' என்று காண்பித்தனர்.



டார்வின் அதை வாங்கி நன்றாகப் பார்த்தபின், ''சிறுவர்களே! இதைக் கொல்வதற்கு முன் இது ரீங்காரம் செய்ததா? இல்லையா?'' என்று கேட்டார்.

சிறுவர்கள், ''ஆமாம்'' என்றனர். ''அப்படியென்றால் இதுதான் அசல் ''அம்பக்'' என்றார் டார்வின்.

ஆங்கிலத்தில் 'அம்' என்றால் ரீங்காரம் என்றும் 'பக்' என்றால் பூச்சி என்றும் பொருள். ஆனால், அம்பக் என்று இரண்டையும் சேர்த்து ஒரே சொல்லாகச் சொன்னால் ''முழுப் பொய்'' என்றாகிறது.

பாவம்! டார்வினை ஏமாற்றப் பார்த்த சிறுவர்கள் ஏமாந்தார்கள்.

—முல்லை முத்தையாவின் நகைச் சுவை விருந்திலிருந்து
தகவல்: இ. பொ. நடராசன்.

அசுர உலகம்தான் இது! அதற்காக எல்லோரும் இவ்வளவு வேகமாகவா ஓடவேண்டும்?

திருமுதுகுன்றம் மணிமுத்தாறு பாலம் பக்கத்திலிருந்து இரயில்வே சந்திப்பு நோக்கி அந்த மோட்டார் சைக்கிள் போய்க் கொண்டிருந்தது. அதன் பின் இருக்கையில் ஓட்டுபவரின் பன்னிரண்டு வயது மகன் எழில் பாரதி அமர்ந்திருந்தான்.

மோட்டார் சைக்கிள் சற்று வேகமாகத்தான் போய்க் கொண்டிருந்தது. தன் அப்பா பாஸ்கரனை நோக்கி, 'சற்று மெதுவாகத்தான் போங்களேன்' என்று சொல்ல வெண்டும் என்று நினைத்தான்.

காமராசர் சிலையைக் கண்டதும் பேருந்து நிலையம் நெருங்கி விட்டது என்ற எண்ணம் எழுந்தது.

பஸ் நிலையத்துக்கு அருகே சற்றுத் தூரத்தில் இருக்கும் திரையரங்கிலிருந்து ஓட்டமும் நடையுமாக வந்த மூவரும் மோட்டார் சைக்கிளை நோக்கிக் காட்டுமிராண்டித்தனமாகக் குறுக்கே வந்தனர்.

அவர்களில் ஒருவன் மோட்டார் சைக்கிளில் மோதிக் கீழே விழுந்து விட்டான். பாஸ்கரன் மோட்டார்சைக்கிளை நிறுத்தினார், என்ன ஆனது என்று பார்க்க.

ஆனால், வீழ்ந்தவன் உடனே எழுந்து மற்றவர்களுடன் பஸ் நிலையத்திற்குள் ஓடினான். மூவரும் ஒவ்வொரு பஸ்ஸாகப் பார்த்துக் கொண்டே சென்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த பாஸ்கரன் சாதாரண உடை அணிந்திருந்த ஒரு போலீஸ்காரர். "கீழே விழுந்தும், 'ஏன் மோதினீர்கள்?' என்று ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் போகிறார்களே!" என்று எழில் பாரதி தன் தந்தையை நோக்கிக் கேட்டான்.

"அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டிருக்கலாம். அதனால் போகிறார்கள்" என்று சொன்னார்.

"அவர்களில் யாருமே உங்களை நிமிர்ந்துகூடப் பார்க்கவே இல்லையே, அப்பா!"

"அப்படியானால் நீ என்ன நினைக்கிறாய்?" என்று மகனை நோக்கிக் கேட்டார்.


"அப்பா, அவர்கள் ஏதோ தப்புச் செய்துவிட்டுத் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ஓடுகிறார்கள் என்று நினைக்கிறேன்."

உடனே, "அப்படியும் இருக்கலாம். நீ இங்கேயே இரு. நான் போய் அவர்களைக் கவனித்துவிட்டு வருகிறேன்" என்று பஸ் நிலையத்துக்குள் போனார்.

ஒரு பஸ்ஸிலிருந்து இறங்கி, வேறு ஒரு பஸ்ஸுக்குப் போய்க் கொண்டிருந்தனர் அவர்கள். அவர்கள் அமர்ந்திருந்து இறங்கிய பஸ் கண்டக்டரை

அந்த மூன்று பேர்

குறிஞ்சிப்பாடி கணேசன்



நோக்கி, ''ஏனப்பா அவர்கள் இறங்கி விட்டார்கள்?'' என்றார் அவர்.

''பஸ் புறப்பட எவ்வளவு நேரம் ஆகும்?'' என்று கேட்டார்கள். 'இன்னும் இருபது நிமிஷம் ஆகும்' என்றேன் சார்! இறங்கி விட்டார்கள்!''

''ஓகோ! உடனே செல்லும் பஸ் அவர்களுக்குத் தேவைப் படுகிறது!'' என்று மனத்துள் எண்ணியவாறு அந்த மூவரும் ஏறி அமர்ந்து புறப்படத் தயாராக இருந்த பஸ்ஸை நெருங்கினார்.

அந்தப் பஸ் கண்டக்டரைத் தனியாக அழைத்து, ''அந்த மூவரும் டிக்கட் வாங்கி விட்டார்களா?'' என்று கேட்டார்.

''வாங்கிட்டாங்க சார்! ஆனால், எங்கே போகணும்னு கேட்டேன். இந்த பஸ் எங்கே போகுதுன்னு கேட்டாங்க. திட்டக்குடிக்குன்னேன். 'திட்டக்குடிக்கு மூணு'ன்னு டிக்கெட் வாங்கிட்டாங்க சார்!'' என்றான்.

''அப்படியா? சரி! வண்டியைக் கொஞ்சம் நிறுத்திவை. யாரையும் கீழே இறங்க விடாதே! இது இரகசியமாக இருக்கட்டும்!'' என்று கூறிவிட்டு, 'போலீஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுக்கணுமே! தொலைபேசி வைத்திருக்கும் கடை எங்கிருக்கிறது?' என்று யோசித்தபடியே சில அடிகள் நடந்தார்.


எதிரில் வெள்ளை வண்ணக் காவல் துறை வண்டி வந்தது. அதிலிருந்த அதிகாரிக்கு வணக்கம் செய்து, தாம் சந்தேகப்படும் ஆட்களையும் காரணத்தையும் விளக்கினார்.

மந்திரியானால்....?

ஆசிரியர்: ''நீ மந்திரியானால் என்ன செய்வாய்?

பையன்: ''பள்ளிக்கூடம் வர மாட்டேன், சார்''

-சேலம் புவனேஸ்வரி



அவர்கள் அதே ஆட்களைப் பிடிக்கவே வந்திருப்பதாக விவரம் கூறினர்.

பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், தன் நிலத்தில் விளைந்த நிலக்கடலையைக் கொண்டு வந்து விற்றுவிட்டு ஆயிரத்து இருநூறு ரூபாயுடன் திரைப் படம் பார்க்க வந்தாராம். படம் பார்க்க டிக்கெட் வாங்குவதற்கென்று ஒரு ஓரமாக நின்று தன் இடுப்பில் வைத்திருந்த நோட்டுக் கற்றையில் ஒரு இரண்டு ரூபாயை மட்டும் எடுத்தாராம்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த மூன்று பேர் அவரைப் பின்தொடர்ந்திருக்கின்றனர். தியேட்டருக்குள்ளும் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து படம் பார்த்திருக்கின்றனர்.

இடைவேளைக்குப் பின் அவர்களைக் காணவில்லை. அந்த விவசாயியின் பணமும் காணவில்லை! விவசாயி குய்யோ முறையோ என்று கூத்திக் கலாட்டா செய்யவே, தியேட்டர் மானேஜர், விளக்கைப் போட்டுத் தேடிப் பார்த்திருக்கிறார். ஆள் கிடைக்கவில்லை.

கடைசியாக வெளியில் இருந்த கேட் கீப்பரைக் கேட்டபோது, இடைவேளை முடிந்ததும் மூன்று பேர் தாங்கள் ஸ்ரீமுஷ்ணம் பஸ்ஸுக்குப் போக வேண்டும் என்று கேட்டைத் திறந்து விடக் கேட்டுக் கொண்டதால் திறந்து விட்டதாகவும், அவர்கள் போய் விட்டதாகவும் கூறினான்.

''எங்களுக்குத் தகவல் கிடைத்ததும் புறப்பட்டோம்'' என்று அதிகாரி கூறிக் கொண்டிருக்கும் போதே, வண்டியிலிருந்த சில காவலர்கள் இறங்கி அந்த பஸ்ஸுக்கு பாஸ்கரனை அழைத்துக் கொண்டு போனார்கள்.

அம்மூவரையும் நெருங்கி, ''எந்த ஊர் நீங்கள்? எவ்வளவு பணம் வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர்.

''எங்களிடம் பணம் ஏதும் இல்லை. எங்கள் சொந்த ஊர் வேப்பூர்'' என்று அந்த மூவரில் ஒருவன் சொன்னான்.


அவர்கள் ஏறியிருந்த பஸ்ஸோ திட்டக்குடிக்குப் போவது. வாய் தவறிச் சொந்த ஊரைக் கூறிவிட்டான்.


அவர்களைச் சோதித்தபோது பணம் முழுவதும் கிடைத்து விட்டது.

வேலை நேரம் இல்லாதபோதும் கடமையைச் செய்த காவலர் பாஸ்கரனுக்கும், அவர் மகன் எழில் பாரதிக்கும் மேலதிகாரியிடமிருந்து பாராட்டுக் கிடைத்தது.

திருக்குறள் புதிர்

புதிர்-11





மேலே இருக்கும் இரு படங்களையும் பார்த்தவுடனே உங்களுக்கு இரண்டு குறள் பாடல்கள் நினைவுக்கு வந்திருக்க வேண்டுமே! உங்கள் நினைவிலிருக்கும் பாடல்களை ஒரு தாளில் எழுதிக்கொண்டு 34 ஆம் பக்கம் புரட்டிப் பாருங்கள்.

கிறிஸ்துமஸ் தாத்தா

பால. நடராஜன்

கிறிஸ்துமஸ் திருநாள் இந்நாளில் — நான்
கேட்ட பொருள்கள் பெற்றிடவே
கருத்தர் ஏசு வழிசெய்வார் — எங்கும்
காணு இன்பம் பெற்றிடுவேன்.

கிறிஸ்துமஸ் தாத்தா வந்திடுவார் — அவர்
கீழே இறங்கி வந்திடுவார்.
விரும்பும் பொருள்கள் அனைத்தையுமே — அவர்
வேண்டிய மட்டும் தந்திடுவார்.

தாடி அவரும் வைத்திருப்பார் — உயர்
தங்கம் அவரது குணமேதான்.
வாடி இருக்கும் எங்களையே — அவர்
வந்தே பார்த்து மகிழ்ந்திடுவார்.

தேடி அவரும் வந்திடுவார் — எங்கள்
தெய்வத் தூதர் அவரேதான்!
பாடி அவரை வரவேற்போம் — இப்
பாரில் அவரை வரவேற்போம்.







சிறுவர் நடிக்கும் அமரகவி பாரதி

அமரகவி பாரதியாரின் நினைவு நாள் டிசம்பர் மாதம் 12–ம் தேதி வருகிறது. நாமும் நினைவுகூருவோம்! பாரதியாரின் அழகிய, எளிய– கவிதைகளும் அவரது தீர்க்கமான கருத்துக்களும் குழந்தைகளின் உள்ளங்களில் ஆழப்பதியும் வண்ணம் — அவர் மிகவும் விரும்பிய குழந்தைகளைக் கொண்டே நாடகமாக்கினார் திரு. டி. எஸ். சர்மா அவர்கள். அதில் வெற்றி கண்ட அவர், தற்போது பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரைக் கொண்டு ஒரு திரைப்படமாகவும் தயாரித்து வருகிறார், அவர் தொடங்கியுள்ள 'குழந்தைகள் கலாலயம்' சார்பில்!

பாரதியிடத்தில் அப்படி அவருக்கு என்ன ஈடுபாடு? என்று அவரிடம் விசாரித்தபோது—

''அந்தக் கலையுலகச் சிற்பியின் கருத்துக்கள்— முக்கியமாக தேசபக்தி, தேச ஒருமைப்பாடு, மொழிப்பற்று ஆகியவற்றைக் குழந்தைகளின் மனத்தில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும் என்பதே எண்ணம். இதுமட்டுமல்ல. இன்னும் நமது பல சுதந்திரச் சிற்பிகள், பல தரப்பட்ட முக்கிய துறைகளில், கலைகளில் சிறந்து விளங்கிய மகாபுருஷர்களின் கருத்துக்களையும், சிறு குழந்தைகளின் மனத்தில் எளிதில் பதியும்படி செய்ய வேண்டும் என்றும் ஆவல். ஆனால், அதற்கு என்ன வழி என்று சிந்தித்தேன்.

எத்தனையோ சிறுவர்களிடத்தில் நல்ல திறமை இருக்கிறது. அவர்களின் திறமையை வெளிப்படுத்துவதுடன்— அவர்களின் மூலமாகவே சிறுவர்களிடத்தே கருத்துக்களைப் புரியவைப்பதும் — பதிய வைப்பதும் எளிது அல்லவா? ஏன் பாரதியையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர் தம்முடைய பதினொரு வயதில் கவிதை எழுத ஆரம்பித்தார். அவர் மாபெரும் தேசியக் கவி, உலகக் கவியாளர். என்னுடைய பள்ளி நாட்களிலிருந்தே அதாவது 1940–லேயே பாரதி மீது அளவுகடந்த ஈடுபாடு. அவர் தமிழ் தெள்ளுதமிழ்; தேன் தமிழ்; கேட்கக் கேட்க, படிக்கப் படிக்க இனிக்கும் தமிழ். அவர் ஒரு பல்கலைக் கழகம். கலியுகச் சிற்பி. புரட்சி வீரர் —கர்மயோகி.''

மெய்ம்மறந்து — ஆவேசமான — உணர்ச்சிப் பெருக்கில் பாரதி நினைவுகளில் ஒன்றிவிட்டிருக்கும் அவரை மேலும் கேட்டபோது —

குழந்தைகளை வைத்தே குழந்தைகளுக்காகவே பாரதி படம் எடுப்பதன் நோக்கம் என்ன என்பதை அவர் விளக்குகிறார்:—

நான் செய்வது வியாபாரம் அல்ல. லாபநோக்கல்ல. நான் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனோ... புகழுக்காகவோ செய்யவில்லை. இது ஒரு ஆத்ம திருப்திக்காக— எதிர்காலச் சந்ததிகளை நல்வழிப்படுத்தி — அவர்களுக்கு நமது தேசத்தின் பாரம்பரியத்தை —பண்பாடுகளை— அறியச் செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் என்கிறார் அவர்.

முப்பத்து எட்டுப் பாடல்களை — மணியான குரலில் — ஆங்காங்கே அளவுக்கேற்ப தேவைக்கேற்பப் புகுத்தியிருக்கிறார்.

ஐந்து பாடல்களை விஜய் —சித்தர் என்ற இளைஞர்கள் — ஆம் — குழந்தைகளுக்காக-குழந்தைகளாலேயே இயக்கப்பட்ட திரைப்படம் அல்லவா? — இளைஞர்களே இசையமைத்து வழங்குகிறார்கள்.

இந்த மாபெரும் காரியத்தை — அமரகவியின் வாழ்க்கை வரலாற்றை— பாரதி நூற்றாண்டுவிழா நினைவு நாளன்று 12.12.82 அன்று 'பாஞ்சாலிசபதம்' புகழ் திரைப்பட நடிகர் எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்கள் துவக்கிவைத்து இருக்கிறார்கள்.

இதுவரை பலமுறை நாடக வடிவில் மேடையேறி வெற்றி கண்டுள்ள ''அமரகவி பாரதியார்'' — திரைப்படமாக வெளிவரும் நாளை அவர் எண்ணிக்கொண்டு ஆவலாய் இருக்கிறார்.



டி. எஸ். வி. சர்மா

இந்த நாடகம் தொலைக்காட்சியில் போடப்பட்டுப் பெரும் பாராட்டைப் பெற்றது. பல பத்திரிகைகளும் பாராட்டியுள்ளன.

அவர் முயற்சி வெற்றியடைய, குழந்தைகளின் திறமைகளை நாம் காண — பாரதியைப் பற்றி ஒரு தெளிவான சிந்தனையை நம் தேசத்துக் குழந்தைகள் மட்டுமல்லாது உலக நாடுகளின் சிறார்களும் பெற, கோகுலம் சிறுவர் சங்கச் சார்பில் நாம் கலாலயக் குழந்தைகளை வாழ்த்துவோமா?

—எம். ஆர். ராஜன்

கதை நிகழ்ச்சி



உங்களுக்குக் கதை கேட்பதென்றால், மிகவும் பிடிக்கும். கதையின் மேல் உங்களுக்கு உள்ள ஆர்வத்தை அறிந்து சில சங்கத்தினர்கள் கதை சொல்லும்நிகழ்ச்சிகளை நடத்திமகிழ்ச்சியூட்டி வருகிறார்கள்.

10.9.83-ல் கோணுபட்டிலுள்ள 'கோகுலம் குழந்தை இலக்கியச் சங்கம்' இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்தியது. மலர்ந்த முகத்துடன் இருக்கும் அந்தச்சங்க குழந்தைகளையும், அதன் அமைப்பாளர் பால நடராஜனையும், 'கோகுலம்' கௌரவ ஆசிரியருடன் காணலாம்.

மறக்க முடியாத தீபாவளி

வளவன்

தீபாவளிக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. எல்லாப் பிள்ளைகளையும் போல ரமேஷும் தீபாவளி நாளை ஆவலோடு எதிர் நோக்கியிருந்தான். அன்று காலை ஊரிலிருந்து வந்திருந்த அவன் மாமா பெட்டி பெட்டியாகப் பட்டாசுக் குவியலை வாங்கி வந்திருந்தார். அப்பப்பா...! எத்தனை விதமான வெடிகள், ராக்கெட் வாணங்கள்! இந்த முறை தீபாவளிக்கு ஊரையே அலற அடிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தான் ரமேஷ்.

அவனுடைய தந்தை பெரிய வியாபாரி, ஏற்றுமதித் தொழிலில் லட்சக் கணக்கில் சம்பாதிப்பவர். நினைத்தால் லண்டன், பாரீஸ் என்று பறந்து கொண்டிருப்பவர். அவருடைய ஒரே மகன், செல்லப் பிள்ளை ரமேஷ்! கேட்க வேண்டுமா?

மாலையில் டெல்லிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவன் தந்தை ரமேஷை அழைத்தார். ''ரமேஷ்! நான் ஊருக்குப் போய்விட்டு தீபாவளி அன்று அதிகாலையில் திரும்புவேன். உன் மாமாவிடம் பணம் கொடுத்திருக்கிறேன். உனக்கு வேண்டிய டிரஸ்ஸையெல்லாம் அவருடன் சென்று வாங்கிக் கொள்'' என்றார்.

அன்றுதான் தீபாவளி! விடிந்தும் விடியாத அந்த வைகறைப் பொழுதில் ஊரெல்லாம் வெடி முழக்கத்துடன் சிறுவர்கள் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். ரமேஷின் நண்பர்கள் அவனைத் தேடிக் கொண்டு வந்தனர். ஆனால், ரமேஷ் மட்டும் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் பெற்றோருக்கு ஆச்சரியமாயிருந்தது. எப்போதும் தீபாவளியன்று அந்தத் தெருவிலேயே எல்லோருக்கும் முந்தி வெடி வெடிப்பவன் ரமேஷ். காலை மூன்று மணிக்கே எழுந்து விடும் ரமேஷ் இப்படித் தூங்குவது அவர்களுக்கு வியப்பளித்தது.

''ரமேஷ்! கண்ணு ரமேஷ்! எழுந்திருப்பா! உன் நண்பர்கள் வந்திருக்காங்க'' என்று அவனை எழுப்பினார் அவன் தாய்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு சோம்பல் முறித்தபடி ரமேஷ் வெளியே வந்தான். அங்கே நண்பர்கள் எல்லோரும் வந்திருப்பதைக் கண்டான். பாஸ்கர், ரவி, சேகர், சங்கர், கண்ணன், ராமு, ஷீலா, மது... எல்லோரும் ஒரே குரலில் ''ரமேஷ்! உனக்குத் தீபாவளி வாழ்த்துக்கள்'' என்று கோரஸ் பாடினர்.

ரமேஷுக்கு வெட்கமாயிருந்தது. ''கொஞ்சம் பொறுங்கடா. இதோ நொடியில் வருகிறேன்'' என்று உள்ளே ஓடினான். ரமேஷின் அம்மா, அவன் நண்பர்களுக்குத் தீபாவளி 'ஸ்வீட்' கொடுத்தாள்.

அதற்குள் ரமேஷ் குளித்து விட்டு ரொம்ப எளிமையான ஆடையணிந்து வெளியே வந்தான். அவன் கையில் சிறிய அட்டைப் பெட்டி ஒன்றிருந்தது.



''என்ன ரமேஷ்! பட்டாசு கொளுத்த ஆரம்பிக்கலாமா?'' என்று ஆவலுடன் கேட்டான் சங்கர்.

''ஓ! இதோ!'' என்று தன் கையிலிருந்த பெட்டியைத் திறந்தான் ரமேஷ். உள்ளே கொஞ்சமே கொஞ்சம் வெடிகள், இரண்டு மூன்று பூ கம்பிப் பெட்டிகள், சக்கரம், மத்தாப்பு இருந்தன. அவன் நண்பர்கள் திகைத்தனர்.

''என்ன ரமேஷ், விளையாடுகிறாயா?'' என்று கேட்டான் கண்ணன். சிரித்துக் கொண்டே கம்பி மத்தாப்பு ஒன்றைக் கொளுத்திய ரமேஷ்,



''விளையாட்டில்லே கண்ணா! உண்மையைத்தான் சொல்கிறேன். இந்தத் தீபாவளிக்கு என்னிடம் உள்ள பட்டாசு இவ்வளவுதான்'' என்றான்.

டில்லியிலிருந்து அதிகாலையில் திரும்பி வந்த ரமேஷின் தந்தை இதையெல்லாம் அருகேயிருந்து கேட்டுக்கொண்டிருந்தார். அவருக்கும் வியப்பாகத்தான் இருந்தது. ரமேஷை அருகே அழைத்தார்.

''என்ன ரமேஷ்! உன் மாமா வாங்கி வந்த பட்டாசுகளை எல்லாம் ஏன் கொளுத்தவில்லை? அவைகளை உன் நண்பர்களோடு வெடிப்பது தானே?'' என்றார்.

''அது வந்துப்பா... எங்கிட்டே இருப்பது இந்த வெடிகள் மட்டுந்தான்'' என்று தயக்கத்தோடு கூறினான் ரமேஷ்.

'என்ன ஆயிற்று இந்தப் பையனுக்கு! ஏன் இப்படி மட்டமான துணியில் 'டிரஸ்' வாங்கியிருக்கிறான்?' என்று புரியாமல் திகைத்தார் அவன் தந்தை.

அப்போதுதான் அங்கே வந்த ரமேஷின் மாமா அந்தக் குழப்பத்தைக் கண்டு சிரித்தார்.

''ரமேஷ் சொல்வது உண்மைதான்! அவனிடம் இருப்பது இந்தப் பட்டாசு மட்டும்தான்'' என்று சொன்னார்.

பிறகு உள்ளேயிருந்து ஒரு செய்தித் தாளைக் கொண்டு வந்து ரமேஷின் தந்தையிடம் கொடுத்தார்.

அதிலிருந்த ஒரு விளம்பரத்தைச் சுட்டிக் காட்டினார்.

''அன்புள்ளங்கொண்டோரே! எங்களுடைய ஆசிரமத்தில் இருநூறுக்கும் அதிகமான அனாதைக் குழந்தைகள் உள்ளனர். ஆதரவற்ற அந்தக் குழந்தைகள் தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட உதவி செய்ய வேண்டுகிறோம். அவர்களுக்கு உங்களால் இயன்ற அளவு துணிமணிகள், இனிப்புகள், பட்டாசுகள் போன்றவற்றை அன்புடன் அளித்து, அவர்கள் இதயங்களிலும் ஒளியேற்ற உதவுங்கள்.''

விளம்பரத்தைப் படித்த ரமேஷின் தந்தை, ''இதை எதற்கு என்னிடம் கொடுத்தாய்?'' என்று கேட்டார்.

ரமேஷின் மாமா சிரித்துக் கொண்டே விளக்கினார்.

''இந்த விளம்பரத்தை ரமேஷ் படித்திருக்கிறான். அந்த அனாதைக்

குழந்தைகளுக்கு ஏதாவது உதவி செய்ய எண்ணினான். என்னிடம் இதைப் பற்றிக் கூறினான். நாங்கள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். நேற்று மாலை அந்த ஆசிரமத்திற்குப் போனோம். ரமேஷ் தனக்கென வைத்திருந்த பட்டாசுகள் எல்லாவற்றையும் அந்த அனாதைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டான். அதோடு அவன் கடையில் பார்த்து வைத்திருந்தானே ரெடிமேட் ஆடை, அதையும் வாங்க வேண்டாமென்று சொல்லி, அதற்கான விலை ரூபாய் முந்நூறையும் அந்தப் பிள்ளைகளுக்குத் துணிகள் வாங்க நன்கொடையாகக் கொடுத்து விட்டான்'' என்றார்.

ரமேஷின் தந்தை பூரித்துப் போனார். ரமேஷைத் தட்டிக் கொடுத்தார். ''வெல்டன் மை பாய்! நான் பெருமைப்படுகிறேன்'' என்று பாராட்டினார். ரமேஷின் தாய் பாசத்தோடு தன் மகனை அணைத்துக் கொண்டாள்.

''புறப்படு ரமேஷ்! நாம் எல்லோரும் அனாதைப் பிள்ளைகளோடு தீபாவளியைக் கொண்டாடுவோம்'' என்றார் ரமேஷின் தந்தை. ''நாங்களும் வருகிறோம்'' என்று ரமேஷின் நண்பர்களும் புறப்பட்டனர். ரமேஷின் தாய், கூடை நிறைய 'ஸ்வீட்,' காரம் பொட்டலங்களை எடுத்துவந்தார்.

ரமேஷைக் கண்டவுடன் ஆனந்தமாகப் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்த அந்த அனாதைக் குழந்தைகள் அவனைச் சூழ்ந்து கொண்டு மகிழ்ச்சியுடன் தீபாவளி வாழ்த்துக்களைக் கூறினார்கள். ரமேஷும் அவன் நண்பர்களும் இனிப்பை வழங்கினர். அவர்களோடு சேர்ந்து பட்டாசுகளை வெடித்தனர். அவர்களுக்கு அது மறக்க முடியாத தீபாவளியாய் அமைந்தது.



குக நானூறு

'அகநானூறு', 'புற நானூறு' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். 'குக நானூறு' என்று கேள்விப்பட்டதுண்டா?

குகன் (முருகன்) மீது 400 பாடல்கள் கொண்ட ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார் திருச்சி பரதன். அதற்குப் பெயர்தான் 'குக நானூறு'. 'அப்பாவின் ஆசை', 'பலாப் பழம்' என்ற சிறுவர் நாடகங்களை எழுதிப் பரிசுகள் பெற்றதோடு ஏராளமான குழந்தைப் பாடல்களையும் எழுதியவர் அவர்.

'குக நானூறு' புத்தகத்திலுள்ள பாடல்களைப் பல மேடைகளில் பல இசைக் கலைஞர்கள் அழகாகப் பாடி வருகிறார்கள். சமீபத்தில் தஞ்சை அரண்மனை சங்கீத மகாலில் 50-வது இசை நிகழ்ச்சி நடந்தது. அதில் 50 குழந்தைகள் கலந்து கொண்டு அருமையாகப் பாடியது மிகப் பொருத்தமாக இருந்தது. இதில் இன்னொரு பொருத்தமும் இருந்தது. 50-வது இசை நிகழ்ச்சி நடந்த நாளில்தான் திருச்சி பாரதனுக்கு 50-வது வயது தொடங்கியது!



இருவகைப் போட்டிகள்



நேருஜி பிறந்த நவம்பர் 14–ஆம் தேதியை நாடெங்கும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடினார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் கொண்டாடினார்கள்.

சென்னை ரோட்டரி சங்கமும், ஃபிலிப்ஸ் இந்தியாவும் இணைந்து இரண்டு வகைப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி மிகவும் சிறப்பாக அந்த நாளைக் கொண்டாடியிருக்கின்றன.

நேருஜிக்கு மிகவும் பிடித்தமான ஓவியப் போட்டியையும், அவரது லட்சியங்களுக்கு ஏற்ற வகையில் பேச்சுப் போட்டியையும் நடத்தினார்கள்.

காலையில் நடந்த ஓவியப் போட்டியில் 7 வயது முதல் 12 வயதுக்கு உட்பட்ட சுமார் 80 குழந்தைகள் கலந்து கொண்டு, தங்களின் கைவண்ணத்தையும், கற்பனைத் திறமையையும் காட்டினார்கள்.

மாலையில் நடந்த தமிழ்ப் பேச்சுப் போட்டியிலும் ஆங்கிலப் பேச்சுப் போட்டியிலும் பல பள்ளிக் கூடங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பல நல்ல கருத்துக்களை வெளியிட்டார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்குச் சென்னை தொலைக்காட்சி இயக்குனர் திரு. ஆர். எஸ். சாடேகர் சுழற்கோப்பைகளையும், கண்கவர் பரிசுகளையும் வழங்கினார். அவர் குழந்தைகளின் ஓவியத் திறமையும், பேச்சுத் திறமையும் நன்கு வளர்ந்து நாட்டுக்குப் பயன்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

நைனிட்டால்!

இப்பெயரைக் கேட்டதும் சிலருக்கு, 'இது ஒரு கோடைக்கால மலை வாசஸ்தலம்!' என்ற எண்ணம் வரும்.

வேறு சிலருக்கு 'அமரர் நேரு ஆங்கில ஆட்சியின் போது சிறைப் பட்டிருந்த ஊர் இது!' என்ற நினைவு வரும்.

ஆனால், கதிரவனின் உள்ளத்தில் எழும் உணர்வுகளே வேறு!

நைனிட்டால் என்றதும் அவனுக்கு 'ரோபாட்'டின் (இயந்திர மனிதனின்) நினைவுதான் வரும். காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் கதையை மேலே படியுங்கள்.

சென்ற மாதம் கதிரவனும் அவனுடைய அப்பாவும் வடக்கே இன்பச் சுற்றுலா சென்றிருந்தார்கள். நைனிட்டால் மாவட்டத்தில் அவர்கள் பார்த்த இடங்கள் பல. ஜிம் கார்பட் தேசியப் பூங்காவில் உறுமும் புலிகளை அவர்கள் உற்று நோக்கி வியந்தார்கள். ராணிக் கேட் பழத் தோட்டத்தில் பழமரங்களைப் பார்த்து அவர்கள் பரவசம் அடைந்தார்கள்.

இறுதியாக அவர்கள் நைனி ஏரிக்கு வந்து சேர்ந்தார்கள். நைனி ஏரியின் நடுவில் படகு நீரைக் கிழித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. கதிரவனின் அப்பாவே படகைச் செலுத்திக் கொண்டிருந்தார். அவருக்கு எதிர்த்தாற்போல அவரைப் பார்த்த வண்ணம் கதிரவன் அமர்ந்திருந்தான்.

சுற்றிலும் பச்சை ஆடை தரித்த மலைகள், மேலே திரண்டிருந்த கரு மேகக் கூட்டங்களைப் பார்த்து நையாண்டி செய்தன! அது பொறுக்க மாட்டாமல் மேகங்கள் கண்ணீர்த் துளிகளைத் தூறலாகச் சிந்தின! இதனால் ஏரியெங்கும் எழிற்கோலங்கள் போடப்பட்டன!

ஏரிக்காட்சியின் அழகில் ஈடுபட்டிருந்த கதிரவனின் கண்கள் திடீரென்று அச்சத்தால் அகல விரிந்தன. ஏன் தெரியுமா?

அவர்கள் படகைத் துரத்திக் கொண்டு மற்றொரு படகு பின்னால் வந்து கொண்டிருந்தது. துரத்திக் கொண்டு வந்த படகை 'ரோபாட்' ஒன்று செலுத்திக் கொண்டு வந்தது! அப்படகில் நன்றாகச் சாய்ந்துகொண்டு வானை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார் குறுந்தாடிக்காரரர் ஒருவர்!

''அதே ரோபாட்! அதே விஞ்ஞானி!'' என்று கதிரவனின் உதடுகள் முணுமுணுத்தன. உடனே அவன் முதல்நாள் சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்.


ராணிக்கேட் பழத்தோட்டம்!

கதிரவனும் அவன் அப்பாவும் தோட்டத்தின் நடுவிலிருந்த பூச்செடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவேளை அது!


திடீரென்று பின்னால் 'கொர்.... கொர்!' என்று யாரோ உறுமும் குரல் கேட்டது. கதிரவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது! திடுக்கிட்டு அவன் திரும்பிப் பார்த்தான்.

ஒரு ரோபாட் மிக அண்மையில் நின்று கொண்டிருந்தது! அதன் கைகளில் ஒரு பூங்கொத்து சிரித்துக் கொண்டிருந்தது. கதிரவனை நோக்கி

நைனி ஏரியில் ஒரு ரோபாட்



எம். சோலையன்



"அந்த ஆபீஸ்லே என்னடா திருட்டுப் போச்சாம்?"

"'திருடர்கள் ஜாக்கிரதை'னு எழுதிவச்சிருந்த போர்டைக் காணோமாம்"

-ஆர். எஸ். சுப்பிரமணியன்

அப்பூங்கொத்தை நீட்டியது அந்த ரோபாட்.

கதிரவன் தயங்கினான்.

ரோபாட்டின் பின்னால் நின்றிருந்த குறுந்தாடி மனிதர், "பயப்படாதே தம்பி! பூங்கொத்தை வாங்கிக்கொள்! சிறுவர்கள் என்றால் ரோபாட்டிற்கு மிகவும் பிடிக்கும்!" என்று கூறினார்.

அவனுடைய அப்பாவும் தைரிய மூட்டவே, அவன் அப்பூங்கொத்தை வாங்கிக் கொண்டான். பிறகு அக்குறுந்தாடி மனிதர் ரோபாட்டைப் பற்றி அவர்களிடம் விளக்கமாய்ப் பேசினார்.

அக்குறுந்தாடி மனிதரின் பெயர் விவேக்! அவர் ஒரு விஞ்ஞானி! அதைவிட வியப்பை அளித்தது அவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரே என்ற செய்தி! அவர் ரோபாட்டுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். பல்வேறு வகையான வேலைகளைச் செய்ய அவர் பத்து வகை ரோபாட்டு களை உருவாக்கியிருந்தார்.

அவர் உருவாக்கிய ரோபாட்டு களுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பு உண் டாம். அதாவது, அவற்றுக்கு மனித னுக்குரிய உணர்வுகளும் உண்டாம்.

அவர்கள் சந்தித்த ரோபாட்டின் பெயர் 'ரோ—பத்து' என்பதாகும். விஞ்ஞானி விவேக்கிற்கு கார் டிரைவ ராக அது பணிபுரிந்து வந்ததாம்!

பழத்தோட்டத்தைச் சுற்றிப்பார்த்த பிறகு விஞ்ஞானி தம் காரில் ஏறிக் கொண்டார். ரோ—பத்து டிரைவர் இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டு காரை 'ஸ்டார்ட்' செய்தது! இதனைக் கண்ட கதிரவன் மூக்கில் விரலை வைத்தான். அவன் முகத்தில்புகையைக் கக்கியவாறு கார் முன்னேறிச் சென்றது!

"அப்பா! இந்தியாவில் கூட இப்படி அதிசயங்களை நிகழ்த்தக் கூடிய விஞ் ஞானிகள் இருக்கிறார்களா?" என்று கேட்டான் கதிரவன்.

"என்ன, இப்படிக் கேட்டுவிட் டாய்? அண்மையில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சந்திரசேகரும் இந்தியாவில் பிறந்தவர்தானே! மறந்து விட்டாயா? இந்தியர்கள் திறமையில் யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல!" என்று கூறினார் அப்பா.

எது எப்படியிருந்த போதிலும் கதிரவனுக்கு அந்த ரோபாட்டை நினைத்தாலே அச்சமாகத் தான் இருந்தது! அதன் முகத்தோற்றத்தை ஏனோ அவன் வெறுத்தான்!

பழைய நினைவுகளிலிருந்து கதிரவன் மீண்டு சுய உணர்வு பெற்றபோது ரோ—பத்து செலுத்திய படகு மிக அண்மையில் வந்திருந்தது. இரு படகு களும் கிட்டத்தட்ட உரசிக் கொள்ளும் நிலை!

படபடக்கும் நெஞ்சத்துடன் ரோ—பத்தையே உற்று நோக்கினான் கதிரவன். அவனுடைய அப்பாவோ முன்னேக்கியே பார்வையைச்செலுத்திக் கொண்டிருந்தார்.

திடீரென்று ரோ—பத்தின் முகக்குறி களில் ஏதோ மாற்றம் புலப்பட்டது. கதிரவனுக்கு அச்சம் அதிகமாகியது. அவன் அஞ்சியது போலவே ரோ-பத்து ஒரு துடுப்பை மேலே உயர்த்தியது. அப்படகில் இருந்த விஞ்ஞானி விவேக் அதைக் கவனிக்காமல் வானத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். ஒருவேளை மேகக் கூட்டங்களைக்

கிறிஸ்துமஸ்

Christ என்றால் கிறிஸ்து. Mass என்றால் ஆராதனை. இரண்டையும் சேர்த்தால், Christmas — அதாவது 'கிறிஸ்து ஆராதனை' என்று பொருள். இயேசுநாதர் பிறந்த நாள் என்று கருதப்படும், டிசம்பர் 25ஆம் நாளில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடுகின் றனர். பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளிலும் கிறிஸ்து பிறந்த இதே நாளைக் கொண் டாடுகிறார்கள். ஆனால், அவர்கள் அதை 'கிறிஸ்துமஸ்' என்று அழைப்பதில்லை. வேறு பெயர்களால் அழைக்கிறார்கள்.

கொண்டு ஏதேனும் புதிய ரோபாட்டை உருவாக்கத் திட்டமிட்டாரோ என்னவோ!

ஆனால் இது என்ன விபரீதம்! ரோ—பத்து மேலே உயர்த்திய துடுப்பை அப்பாவின் தலைக்கு நேராகக் கீழே இறக்குவதேன்?

''அப்பா! ஆபத்து! ரோ—பத்து! ஆபத்து!'' என்று அலறியபடி கண்களை இறுக மூடிக் கொண்டான் கதிரவன்.

அடுத்த கணம் —

''மடேல்!'' என்ற ஒலி கிளம்பியது! அவன் அச்சத்தால் மயங்கிப் படகில் சாய்ந்தான்!

மீண்டும் கண்களைத் திறந்தபோது ஏரிக்கரையில் அப்பாவின் மடியில் படுத்திருப்பதை அவன் உணர்ந்தான்.

கண்களைக் கசக்கிக் கொண்டு அவன் விழித்துப் பார்த்தான். ''அப்பாவிற்கு ஆபத்து எதுவும் இல்லையே?''

''அப்பா! ஆபத்து! பத்து! பத்து!'' என்று திக்கித் திணறியபடி உளறினான் அவன்.

''பயப்படாதே, கதிரவா! ஆபத்து ஒன்றுமில்லை! நாம் இந்த ரோ—பத்திற்கு மிகவும் நன்றி கூற வேண்டும். என்னுடைய உயிரைக் காப்பாற்றியதே இந்த ரோ—பத்துதான்!'' என்று கூறியபோது ஒன்றும் புரியாமல் மலங்க மலங்க அவன் விழித்தான்.


சற்றுத் தள்ளி நின்றிருந்த விஞ்ஞானி விவேக் அருகே வந்தார்.

''ஆமாம், தம்பி! உங்க அப்பாவின் முதுகுக்குப் பின்னாலே படகிலே நல்ல பாம்பொன்று படம் எடுத்தபடி இருந்தது! அதை நாம் யாரும் கவனிக்கவில்லை! ஆனால் ரோ—பத்து அதைத்தான் துடுப்பால் அடித்துக் கொன்றிருக்கிறது. நான் உருவாக்கிய ரோபாட்டுக்கு மனிதனைப் போல் உணர்வுகளும் உண்டு என்று சொன்னேன் அல்லவா? அதுதான் தக்க சமயத்தில் உயிர் காத்திருக்கிறது!'' என்று பேசி முடித்தார் அவர்.


'ஆகா! ரோ—பத்தைப் பற்றித் தவறாக எடை போட்டு விட்டோமே!' என்று கதிரவன் வருந்தினான்.

அடுத்தகணம் அவன் துள்ளியோடிச் சென்று தூரத்தில் நின்றிருந்த ரோ—பத்தின் கையைக் குலுக்கி நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். அப்போது கைகொஞ்சம் வலிக்கத்தான் செய்தது.

இருந்தாலும், ''ரோ—பத்து இருக்குமிடத்தில் ஆபத்து இல்லை!'' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.



கைவிசிறி



தூங்கும் காற்றைத் தட்டி யெழுப்பத்
துணையாய் முன்னிற்கும்
தேங்கும் காற்றை அசையச் செய்யும்
சின்னக் கைவிசிறி!

மின்சா ரத்தின் செலவில் லை, இதன்
விலையும் மிகமலிவு;
அன்பாய்த் தருதல் முடியும், அதனால்
ஆறுத லும்பெறலாம்.

கையை முன்னும் பின்னும் அசைத்தால்
காற்றைச் சீண்டிவிடும்;
மெய்தான், தீயைத் தூண்டும் விசிறி
வெம்மை தணித்துவிடும்.

குளிரில் அனலை வளரச் செய்து
கோடையில் மென்காற்றாய்
மிளிரக் கண்டோம்; அடடா,
தொண்டுள்
மேன்மை விசிறிக்கே!

'பரிதி' ஆர். வேங்கடேசன்

எங்கே போகிறான்?




வெள்ளை நீலச் சட்டைபோட்டு
வேலன் எங்கே போகிறான்?
பள்ளி சென்று முதல்வகுப்பில்
படிப்ப தற்குப் போகிறான்!

குட்டி மானைப் போலத்துள்ளிக்
கொண்டெட தற்குப் போகிறான்?
எட்டு மணிக் கெல்லாம் பள்ளி
இருப்ப தற்குப் போகிறான்!

சிப்பாய் போலக் கம்பீரமாய்
சிந்தித் தேனோ போகிறான்?
அப்பா வைப்போல் விஞ்ஞானியாய்
ஆவேன் என்று போகிறான்!

கொஞ்சும் ரோஜா போல்முகத்தைக்
குளிர வைத்தேன் போகிறான்?
அஞ்ச வில்லை; வீட்டுப்பாடம்
அவன் முடித்துப் போகிறான்!

'குன்றக்குடியான்'



பள்ளிக்கூட மாற்றம்

பொன்மணிதாசன்

“டேய் முரளி, அந்தப் பேனாவைக் கொஞ்ச நேரம் கொடு'' என்று கேட்ட ரவியை வெறுப்போடு பார்த்தான் முரளி.

முரளி நடுத்தரக் குடும்பத்தினரிடையே கொஞ்சம் வசதி படைத்த வீட்டுப் பையன். அப்பா ஓர் அலுவலகத்தில் குமாஸ்தா. நிரந்தரமான வருமானம். ஒரே பையன் முரளி என்பதால் அவன் போக்கிற்குச் செல்லம் கொடுத்து வளர்த்திருந்தார்கள்.

முரளி பள்ளிக்கூடத்திற்குப் போகும் போது ஒரு ரூபாய் எடுத்துக் கொண்டு போவான். தனக்குத் துதி பாடும் சக மாணவர்களுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுப்பான். அந்தச் சின்னஞ்சிறிய பள்ளியில் உள்ள மாணவர்கள் பள்ளி நேரம் போக முரளியைச் சுற்றி நிற்பது அதனால்தான்.

தன்னிடம் இல்லாத பொருளை முரளியிடம் இரவல் வாங்கி ஏழை மாணவர்கள் தங்கள் நிலைமையைச் சமாளிப்பதுண்டு. அந்தப் பழக்கத்தின் அடிப்படையில்தான் ரவியும் முரளியிடம் பேனா சற்று இரவல் கேட்டான்.

இத்தனை நாட்களும் இரவல் கொடுத்து வாங்கிக் கொண்ட முரளி, ஏனோ இன்று, ‘இரவல் கேட்கும் இந்த ஏழை மாணவர்களின் தொல்லை அதிகமாகி விட்டது' என்று மனத்துக்குள் வருந்தினான்.

ஆயினும் ரவியிடம் பேனா தர முடியாது என்று சொல்லத் தைரியமில்லாதவனாக, தன் பையிலிருந்த பேனாவை ரவியிடம் கொடுத்து மீண்டும் பெற்றுக் கொண்டான் முரளி. அன்று மாலை ஒரு முடிவோடு பள்ளியை விட்டுப் புறப்பட்டான்.

முரளியின் முகத்தில் என்றுமே காணாத ஒரு மாற்றத்தைக் கண்ட முரளியின் தந்தை அதற்கான காரணம் அறிய முற்படும்போது, ‘அப்பா, எனக்கு இந்தப் பள்ளியில் படிக்கவே பிடிக்கவில்லை. நகரத்திலிருக்கும் பெரிய பள்ளியில் படிக்கவே நான் விரும்புகிறேன்.' என்று கூறினான் முரளி.

முரளியின் தந்தை முதலில் சற்று யோசித்தாலும், ஏதோ தனக்குள் எண்ணிக் கொண்டு மறு நாளே அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். நகரத்தில் இருந்த ஒரு பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார் முரளியை. தினமும் முரளி பஸ்ஸிலே 10 கிலோ மீட்டர் தூரம் போய்ப் படித்துவந்தான்.

ஒரு மாதம் சென்றிருக்கும். ஒரு நாள் தன் தந்தை ஓய்வாக இருக்கும் சமயம் பார்த்து, பேச்சை ஆரம்பித்தான் முரளி:

''அப்பா, எனக்கு நகரத்துப் பள்ளிக்கூடத்திலே படிக்க விருப்பமில்லை.

என்னைப் பழையபடி நம் கிராமத்துச் சின்னப் பள்ளிக்கூடத்திலேயே சேர்த்து விடுங்கள்'' என்றான்.

முரளியின் தந்தைக்குக் கோபம் கோபமாக வந்தது. செல்லப் பிள்ளை யான முரளி மீது அந்தக் கோபத் தைக் காட்ட விரும்பாமல் நிதான மாகக் கேட்டார்.

''ஏண்டா முரளி, நீதானே நகரத் துப் பள்ளியில் படிக்க வேண்டும் என் றாய். பின்பு ஏன் மறுபடியும் பழைய படி கிராமத்துப் பள்ளியில் சேர்த்து விடச் சொல்லுகிறாய்?'' என்றபோது,

''அப்பா, என்னை மன்னித்து-விடுங்கள். கிராமத்துப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் நம்மை விட ஏழை மாணவர்களாக இருப்பதால், அவர்களை விட வசதியுடைய என்னிடம் அடிக்கடி பென்சில் கொடு, பேனு கொடு, பேப்பர் கொடுன்னு தொந் தரவு செய்யறாங்களே என்கிற ஆத் திரத்தில்தான் அப்படிச் சொன்னேன். ஆனால், இந்த நகரத்துப் பள்ளிக் கூடத்தில் படிக்கின்ற மாணவர்களைப் பார்க்கும்போது எனக்கு என்னவோ-போல இருக்குதுப்பா! ஏனென்றால், அங்கே படிக்கின்ற மாணவர்கள் நம்மை விடப் பணக்கார வீட்டுப் பிள்ளைகளாக இருப்பதுதான். தினசரி அந்த மாணவர்கள் காரிலும், ரிக்ஷா விலும் வந்து இறங்குவதுடன் அஞ்சு, பத்து என்று செலவும் செய்கிறார்கள். அதைப் பார்க்கும்பொழுது எங்கே அவர்களிடம் நான் ஏதாவது இரவல் வாங்கும்படி ஆகிவிடுமோ என்ற பயம்....'' என்றான் முரளி.

முரளி சொன்ன வார்த்தைகளில் தெரிந்த உண்மையை உணர்ந்த முரளி யின் தந்தை, பழைய பள்ளிக்கூடத் திற்குச்சென்று, நடந்தவற்றைத் தலைமை ஆசிரியரிடம் கூறி, முரளியை மீண்டும் கிராமத்துப் பள்ளியிலேயே சேர்த்து விட்டார்.

நாடோடிப் பாடல்களைத் தேடிப் பிடியுங்கள்!



கடந்த 11 மாதங்களாகத் தொடர்ந்து பல நாடோடிப் பாடல் களை நீங்கள் 'கோகுல'த்தில் படித்து மகிழ்ந்து வருகிறீர்கள். இன்னும் நம் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நீங்கள் பாடுவதற்கு ஏற்ற எத்த னையோ நாடோடிப் பாடல்கள் இருக் கின்றன. அவற்றை நீங்கள் தேடிப் பிடிக்க வேண்டும். நாடோடிப் பாடல்கள் நம் நாட்டின் உயர்ந்த சொத்து. அந்தச் சொத்து அழிந்து அல்லது மறைந்து போக நாம் விட லாமா?

உங்கள் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, வயதான உறவினர் அல்லது தெரிந்தவர்களிடம் கேட்டுப்பாருங்கள். சின்ன வயதிலே அவர்கள் பல நாடோடிப் பாடல்களைப் பாடியிருப் பார்கள். அவை அவர்களுக்கு இப் போதும் நினைவில் இருக்கலாம். அவர்கள் பாடுவதைக் கேட்டு, அப் படியே எழுதி, கோகுலத்திற்கு அனுப் புங்கள். அனுப்பியவர் பெயருடன் வெளியிடுவோம்.

—ஆசிரியர்.

சாத்தப்பனின் சீட்டு



எம்.ஆர்.ராஜன்

சாத்தப்பன் சீட்டுப் பிடிப்பவன். தனிப்பட்ட முறையில் அவன் பிடித்து வரும் சீட்டில் டீக்கடை நாயர், மேஸ்திரி முருகேசன், பெட்டிக்கடை பாதுஷா, சைக்கிள் ஷாப் சண்முகம் மற்றும் பால்காரக் கண்ணம்மா, வீடு வாசல் பெருக்கும் வேலம்மா, இலை தைத்து விற்கும் லட்சுமி எல்லோருமே சேர்ந்திருந்தனர்.

பால்காரக் கண்ணம்மாதான் கூடவே தனக்குத் துணையாக இருக்கட்டும் என்று வேலம்மா, லட்சுமியைச் சேர்த்தாள். அப்படி இப்படி வீட்டில் புருஷனுக்குக்கூடத் தெரியாமல் வாரா வாரம் ஐந்து ரூபாய் சீட்டுக் கட்டி வந்தார்கள். அதற்காக அவர்கள் சீட்டுப் பணம் வாங்குவதற்குக்கூட சாத்தப்பனை வீட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்லி வைத்திருந்தனர்.

கடைசிவரை சீட்டு எடுக்காமலேயே இருந்தார்கள், கண்ணம்மா, வேலம்மா லட்சுமி மூவரும். சீட்டுக் காலம் நாற்பது வாரங்களும் ஓடிவிட்டன. சாத்தப்பன் சீட்டுப் பணம் இதோ தருகிறேன், அதோ தருகிறேன் என்று சொல்லிச் சாக்குப் போக்குக் காட்டிவந்தான். மேலும் இரண்டு மாதங்களாயிற்று. சாத்தப்பன் பணம் தருவதாயில்லை. வீட்டில் யாருக்கும் தெரியாமல் பணம் கட்டி வந்தார்களா, வெளியில் யாரிடமும் சொல்ல முடியவில்லை. 'வயதான பெண்மணிகள்தானே இவர்கள் என்ன செய்து விடப் போகிறார்கள்?' என்று சாத்தப்பன் மெத்தனமாக இருந்து விட்டான்.

சிக்கலான வழக்குக்குத்தான் இருக்கவே இருக்கிறானே சின்னான்! மூன்று பேருமாக ரகசியமாய்ப் போய்ச் சின்னானிடம் தாங்கள் ஏமாற்றப்பட்டதைச் சொல்லிப் பணத்தைத் திரும்பப் பெற வழி கேட்டார்கள்.

சின்னான் சொன்னான்: ''சாத்தப்பன் உள்ளத்தில் கொடியவன். உதட்டளவில் இனியவன். முரடன். அவன் போடும் துணியளவு வெளுப்புக்கூட அவன் மனம் இல்லை. அவன் ஏதோ ஒரு கட்சியின் பேரைச் சொல்லி மோசடி செய்து கொண்டிருக்கிறான். தனிப்பட்ட முறையில் அவனைப் பகைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. அதனால் பஞ்சாயத்தில் வழக்குத் தொடரலாம். அதுதான் வழி.''

'சரி, நம் வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தாலும் சரி, பணம் போய்விடக் கூடாதே' என்று ஒப்புக் கொண்டனர், லட்சுமி, கண்ணம்மா, வேலம்மா மூவரும்.

வழக்குத் தொடர்ந்தாயிற்று. சாத்தப்பன் தன் கட்சிக்கு மூன்று சாட்சிகளைத் தயார் செய்து வைத்திருந்தான். சீட்டுப் பணம் பைசாக் கூடப் பாக்கி

நான்தான்



என் நண்பன் இரு காதுகளையும் நன்றாக மூடிக் கொள்ளச் சொன்னான். நான் மூடிக் கொண்டேன். அவன் என்னைச் சீண்டும்போது நான், ''நான்தான்'' என்று கத்த வேண்டும் என்றான். அப்படி நான் அவன் சீண்டும்போது ''நான்தான்'' என்று கத்தினேன்.

''நான்தான்'' என்று கூறியவுடன் அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் சிரித்தார்கள். நான் என்ன என்று கேட்டேன். என் நண்பன் நான் காதை மூடிக் கொண்டிருக்கும்போது ''இவ்வுலகில் பெரிய முட்டாள் யார்?'' என்று கேட்டானாம். கேட்டு விட்டு, என்னைச் சீண்டியிருக்கிறான். நான் உடனே 'நான்தான்' என்றேன். இதைக் கேட்டு மற்றவர்கள் சிரிக்காமல் இருப்பார்களா?

-க. செந்தில்குமார் (2123).

யில்லாமல் கொடுத்து விட்டதாகச்சாட்சிகள் கூறினார்கள். தனிப்பட்ட நபர் நடத்தும் சீட்டுத்தானே! ரசீதும் கிடையாது. ஒரு சான்றும் கிடையாது. எல்லாம் நம்பிக்கையின் அடிப்படையில் நடந்த வியாபாரம்தான். செய்வதறியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள் பஞ்சாயத்துக்காரர்கள்.

நாட்டாண்மைக்காரர் வழக்கை ஒத்திவைத்தார். அன்றிரவு ரகசியமாகச் சின்னானைத் தன் வீட்டுக்கு வரவழைத்து விவரத்தைச் சொன்னார். சின்னான் ஒன்றும் தெரியாதவன் போல் கேட்டுக் கொண்டிருந்தான். ஓர் உபாயம் சொல்லிக் கொடுத்தான். ''பலே பலே... அற்புதமான யோசனை'' என்று தம்மையும் அறியாமல் சின்னானைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே உரக்கக் கத்திவிட்டார் நாட்டாண்மை.

டிருந்தது. அங்கிருந்த யாருக்குமே அந்தப் பேப்பரில் என்ன கேட்கப்பட்டிருந்தது என்று தெரியாது.

பத்து நிமிட நேரம் பொறுத்து பேப்பர்கள் திரும்பப் பெறப்பட்டன.

அவற்றில் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட தேதிகளும் விதமும் வெவ்வேறாக இருந்தன.

நாட்டாண்மைக்காரருக்குத் தீர்ப்புச் சொல்வது ரொம்பச் சுலபமாகிவிட்டது. அவர் சொன்ன தீர்ப்பு:

''லட்சுமி, கண்ணம்மா, வேலம்மா மூவரும் சாத்தப்பனிடம் சீட்டுக் கட்டியது உண்மை. ஆனால் சாத்தப்பன் அவர்களுக்குச் சீட்டுப் பணம் திருப்பித் தரவில்லை என்பது, சாத்தப்பனும் அவனுடைய சாட்சிகளும் ரகசியமாக எழுதிக் கொடுத்துள்ள விவரங்களிலிருந்து



மறுநாள் பஞ்சாயத்துக் கூடியது. லட்சுமி, கண்ணம்மா, வேலம்மா, மற்றும் சாத்தப்பன், அவனுடைய சாட்சியங்கள், கிராமத்துப் பெரிய தனக்காரர்கள் எல்லாம் வந்திருந்தனர். சின்னான் ஒன்றும் அறியாதவன் போல் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான்.

நாட்டாண்மைக்காரர் கையிலிருந்த பேப்பர் கத்தையைச் சாத்தப்பனிடமும் அவன் சாட்சியிடமும் கொடுத்தார். கூடவே ஒரு கேள்விப் பேப்பரையும் கொடுத்தார். அதில் சீட்டுப் பணம் அந்த மூன்று பெண்மணிகளுக்கு எந்தெந்த நோட்டுக்களாக எந்த எந்த நாட்களில் கொடுக்கப்பட்டன என்ற விவரம் தெரிவிக்குமாறு கேட்கப் பட்

தெரிய வருகிறது. எனவே சீட்டு முடிந்த தேதியிலிருந்து வழக்கு முடிந்து தீர்ப்பு வழங்கப்பட்ட நாள்வரை வட்டியும் சேர்த்து, மேலும் வழக்காட நேர்ந்த செலவையும் சேர்த்துச் சாத்தப்பன் பதினைந்து தினங்களுக்குள் கொடுக்க வேண்டும்.''

நாட்டாண்மைக்காரரின் தந்திரமான விசாரணையையும், நியாயமான தீர்ப்பையும் எல்லோரும் பாராட்டினர்.

நாட்டாண்மைக்காரர் சின்னானை அழைத்து அடக்கத்துடன் சொன்னார்:

''இந்த வழக்கைத் தீர்த்து வைக்க வழி சொல்லித் தந்ததே இந்தச் சின்னான்தான்.''

சிக்கலான வழக்கைத் தீர்க்கச் சின்னானை விட்டால் யாரால் முடியும்?

நீச்சல் போட்டி

குண்டுமணி

நீச்சல் போட்டிகளில் தனியாகவும் குழுவாகவும் போட்டியிடலாம். குறிப்பிட்ட தூரத்தை எந்த நீச்சல் வீரர் முதலில் சென்றடைகிறாரோ அவரே வெற்றியாளர்.

ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சல் தான் அதிக அளவு பந்தயங்களைக் கொண்டு இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. நீச்சல்குளம் 50 மீட்டர் பரப்பளவு கொண்டு எட்டுப் பாதைகள் நூலிழைகளால் பிரிக்கப் பட்டிருக்கும். நீச்சல் வீரர்கள் அவரவர்கள் பாதையிலேயே முன்னேற வேண்டும்.

நீச்சலுக்குக் குறைந்த அளவு ஆடைகள் அணிவது வழக்கம். சிலர் தொப்பியும் அணிவது உண்டு.

நீச்சல் போட்டிகளை நிர்வகிக்க ஒரு ரிபரியும், ஸ்டார்ட்டரும் ஆறு நீதிபதிகளும் இருப்பார்கள். மின்விசை நேரக் கணக்கு உபயோகப்படுத்தப் படும்.

ரிபரிதான் நீச்சல் போட்டியை நிர்வகித்து ஒழுங்கு முறையைக் கையாள்பவர்.

ஸ்டார்ட்டர் ஆட்டத்தை நேரத்தில் தொடங்குவதோடு அந்தந்த நீச்சல் வீரர்கள் அவர்களுக்குக் குறிப்பிட்ட எண் வழிப்பாதையில் நிற்கிறார்களா என்பதையும் கண்காணித்துக் கொள்வார்.


ஸ்டார்ட்டர் விசில் அடித்தோ, துப்பாக்கியைச் சுட்டோ, 'போ' என்ற வார்த்தையை உபயோகித்தோ போட்டியைத் தொடங்கி விடுவார்.

இரண்டு தப்பான போட்டித் தொடக்கங்களை ஸ்டார்ட்டர் பொறுத்துக் கொள்வார். மூன்றாவது தப்பான தொடக்கத்துக்குப் பொறுப்பான நீச்சல் வீரரை நிராகரித்து விடும் உரிமை உண்டு.

வெகுவேகமாக நீச்சலடிக்கும் வீரர்களுக்கு மத்தியப் பாதையில் இடம் ஒதுக்கீடு செய்வார்கள். மற்ற நீச்சல் வீரர்கள் பிற பாதைகளில் பங்கீடு செய்யப்படுவார்கள். அநேகமாக வேகம் குறைந்த நீச்சல் வீரர்கள் நீச்சல் குளத்தின் இறுதிப் பாதைகளில் ஒதுக்கப்படுவார்கள்.

ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சல் வகைகள் பல விதங்கள், 100 மீட்டர்: 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர் ப்ரிஸ்டைல் போட்டிகள்; 100 மீட்டர், 200 மீட்டர் ப்ரெஸ்ட் ஸ்டிரோக், 100 மீட்டர், 200மீட்டர் பட்டர்ப்ளை ஸ்டிரோக், 100 மீட்டர், 200 மீட்டர் பேக் ஸ்டிரோக், 100, 200 மீட்டர் ரிலே போட்டிகள் ஆகியவை:

எந்த நீச்சல் வீரராவது மற்றொரு நீச்சல் வீரரின் நீச்சலுக்கு முட்டுக் கட்டை போட்டால் அவர் நிராகரிக்கப்பட்டு விடுவார்.



ஒரு நீச்சல் வீரர் தான் தொடங்கிய பாதையை விட்டு விலகி மற்றொரு பாதையில் சென்று இறுதிக் கட்டத்தை அடைந்தால் அவர் வெற்றி செல்லாது.

ஒரு போட்டி நடக்கும்போது நீச்சல் வீரர் குறுக்கிட்டு இடையூறு விளைவித்தால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

எகிப்தியர்கள் நைல் நதியில் நீந்தி அந்தக் காலத்தில் நீச்சல் கலையில் தேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். பாம்பீ சிதைவுற்ற சிற்பங்களில் நீச்சலடிப்பவர்களைப் பற்றிய சிற்பங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

நீச்சலடிப்பவர் இரண்டு வகையான விஷயங்களை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். நீச்சலடிக்கும் போது மூச்சு விடுவது எப்படி, நீரில் எப்படி முழுகாமல் எழுந்து நிற்பது ஆகியவை. நீச்சலடிக்கும் தருணம் சரியாக மூச்சு இழுத்து வாங்குவது அவசியம் என்பதைதெரிந்து கொள்ள வேண்டும். இயற்கையாகச் சுவாசிப்பது ஒருபுறமிருக்க நீரில் நீச்சலடிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய முறையை அறிந்து கொள்ளுதல் அவசியம். நீச்சலடிக்கும்போது சுவாசப்பை கடினமாக இயங்கிக் கொண்டிருக்கும். கஷ்டமான மூச்சு இழுப்பு நீச்சலடிக்கும் போது மார்பு, வயிற்றுத் தசைகளைச் சோர்வடையச் செய்யும். உடம்பும் சீக்கிரம் சோர்வுறும். ஆரம்பப் பயிற்சியாளர்கள் நீச்சல் பயிலும் போது குறைந்த காற்றைச் சுவாசப்பைக்குள் இழுத்துக் கொள்ள வேண்டும். நீரில் இருக்கும் போது இயற்கை சுவாசத்துக்கு இந்தப் பயிற்சி உதவும்.



முதல் கிறிஸ்துவக் கோயில்

இப்போது நமது தமிழக அரசின் தலைமைச் செயலகம் இருக்கிறதே செயின்ட் ஜார்ஜ் கோட்டை, இதற்குள் ஒரு கிறிஸ்துவக் கோயில் இருக்கிறது. இந்தியாவிலேயே ஆங்கிலேயர்களால் முதன் முதலாக கட்டப்பெற்ற கிறிஸ்துவக் கோயில் இதுதான்!

நீச்சல்போட்டிகள் 1896–ம் வருஷம் ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெற்றன. பல வருஷங்களுக்கு ஆங்கிலேய ஆஸ்திரேலிய, அமெரிக்க நீச்சல் கலைஞர்களே வெற்றி சாம்பியன்களாக விளங்கினர். 1932–ம் வருஷம்தான் ஜப்பானிய நீச்சல் கலைஞர்கள் திடீரென்று உலக அரங்கில் முன்னணிக்கு வந்து வியப்பை உண்டாக்கினர்.

அமெரிக்கர்களுக்கு நீச்சல் கலையில் விருப்பம் ஏற்பட்டது 1900–ம் ஆண்டில்தான். இங்கிலீஷ் கால்வாயைக் கடப்பதென்பது போட்டியாளர்களுக்குரிய ஆசை.

மெட்லி நீச்சல் பந்தயத்தில் மூன்று தரமான நீச்சல் கலைகளான ப்ரீஸ்டைல், பேக் ஸ்ரோக், ப்ரெஸ்ட் ஸ்டிரோக் ஆகியவை அடங்கியிருக்கும்.

அமெரிக்க நீச்சல் வீரர்களில் புகழ் பெற்றவர் ஜானி வெயிஸ்முல்லர். இவர் பல உலக ரிக்கார்டுகளை முறியடித்தவர்.

புகழ்பெற்ற நீச்சல் வீராங்கனைகளில் ஹெலன் மாடிசன் ஒருவர்.

முதல் உலகப் போருக்குப் பின்னால் நீச்சல் போட்டிகளுக்கு ஏகக் கிராக்கி. அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் இந்தக் கலையின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தியிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தினர் நீச்சல் வகுப்புகள் நடத்தி, நீர்மேலுள்ள பயத்தைப் போக்கினர். அதோடு உயிர் பாதுகாப்பாளர்களைப் பயிற்றுவித்துப் பயமற்ற விளையாட்டாக நீச்சல்கலையை உருவாக்கினர்.

உடல் ஆரோக்கியத்துக்கு நீச்சல் பயிற்சி மிகவும் உதவுகிறது.

தமிழ்நாட்டில் மிஸ் ரமாநரசிம்மன் நீச்சல் போட்டிக்கான ரங்காராவ் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். அமராவதியில் சர்வ கலாசாலைகளுக்கான நீச்சல் போட்டியில் ஒரு தங்கப் பதக்கம், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், மூன்று பித்தளைப் பதக்கங்களைச் சூடியவர். எத்திராஜ் கல்லூரி மாணவியான மிஸ் ரமாநரசிம்மன் பல ராஜ்ய நீச்சல் ரிக்கார்டுகளைக் கண்டவர்.

புதுதில்லி ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் டால்கோட்ரா நீச்சல் குளத்தில் நடைபெற்ற நீச்சல்போட்டிகளைக் காணத்தான் ரசிகர்கள் திரளாக வந்திருந்தனர். நீச்சல் கலை பயின்றவர்களுக்கு உயிரைக் காப்பாற்றித் தரும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்; உதவி புரியும் வாய்ப்புமுண்டு.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

968. டி. வாசுதேவன், 17, ராஜா காடு தெரு, எஸ். கே. சி. ரோடு, ஈரோடு-1.
969. சி. எஸ். மோகன், 13-பி, முருகேச நாயக்கர் நகர், சென்னை-24.
970. என். ராஜ்குமார் 59, மாரியம்மன் கோயில் தெரு, சீனிவாசபுரம், ராம்நகர், கோவை-9.
971. ர. காந்திமதிநாதன், டி-2, மதுரை சாலை, வட்டம் 13, நெய்வேலி-3.
972. ஆர். சீனிவாசன், சி-24, எல். ஐ. ஜி. காலனி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி-2.
973. பி. சிவசுப்பிரமணியன், 5, ஐந்தாவது தெரு, மெடிகல் காலேஜ் ரோடு) தஞ்சை.
974. வெ. காளிராமசாமி 1/1, முத்துப்பட்டணம் 2-ஆம் வீதி, காரைக்குடி.
975. என். சௌந்தர்யா, 15, 1-வது மெயின் ரோடு, சி. ஐ. டி. காலனி, சென்னை-4.
976. ஆர். பத்மநாபன், த/பெ. க. இராம ஐயர், கல்படி கிராமம், அம்மாண்டிவிளை அஞ்சல் - 629 204.
977. எஸ். மாணிக்கம், சி-18/5, வைகை நகர் காலனி, ஆரப்பாளையம், மதுரை-10.
978. செ. செந்தில்வேள், 1-ஏ, உடையார் தெரு, திருவாரூர்.
979. க. சிவகுமார் 342, இடையர் வீதி, கோவை-1.
980. எஸ். தாணம்மை, C/o. வி. சுப்பிரமணிய பிள்ளை, நடுத்தெரு, இரவிபுதூர்-629 402
981. ஆர். வாணிஸ்ரீ, 27, பிரிட்டோ காலனி, திருச்சி-2.
982. வி. சந்திரசேகரன், S/o. வி. விஜயபாஸ்கர ஐயர், வடக்குத் தெரு, சேங்கனூர், நன்னிலம் தாலுகா.
983. வி. ஸ்ரீதர், S/o. எஸ். வெங்கடாசலம், தலைமை ஆசிரியர், விஜயபுரம், சின்ன சேலம்-606 201.
984. ஆர். இந்திரா, S/o. எஸ். இராமசாமிப் பிள்ளை, அனுமந்தபுரம், பேரூர்-605202
985. என். விஜயகுமார், 46, பாளம் பஜார், உறையூர், திருச்சி-620 003.
986. வி. எஸ். மணியன், 538, அப்பாதுரை நகர், மதுரை-18.
987. இரா. பால்சுப்பிரமணியன், 4/84-ஏ, அஞ்சலகத் தெரு, வீரசிகாமணி.
988. சௌ. சுரேஷ்குமார், த. பெ. எண். 58, தஞ்சாவூர்-1.
989. பி. கீதா, பிளாட் நம்பர் 14, சாமுண்டீஸ்வரி நகர், குரோம்பட்டை, சென்னை-44.
990. கோ. ஸ்ரீதேவி 24, ராஜாஜி தெரு, தாம்பரம், சென்னை-45.
991. த. பிரியதர்சினி, 22, அம்மன் கோவில் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை-56.
992. Ku. Praba Subramanian, House No. 9, Sangam Chawl No. 8, Sitabardi, Nagpur-440012
993. வி. உஷா, 114, பிரட்ஸ் ரோடு, சேலம்-1.
994. பா. பிரபாகரன், 25, அருணாசல ஈஸ்வர கோயில் தெரு, புதுவண்ணை, சென்னை-81.
995. எஸ். சீனிவாசன், 8, மேல அக்ரஹாரம், மணச்சநல்லூர், திருச்சி-5.
996. சு. பிரபு 7 (மாடி) டவுன் ஹால், ஆறாவது தெரு, அரக்கோணம், வ. ஆ. மாவட்டம்.
997. த. கணேஷ்குமார், 103, கே. டைப் காலனி, ஆர். ஆர். நகர், விருதுநகர்-626 204
998. வி. சிவகுமார் ஸ்ரீமீனாட்சி இல்லம் 25, சுப்பிரமணியபுரம் 2-வது வீதி, காரைக்குடி-2.
999. ஆர். வேலு, C-20, Mangment Road Block No. 2, Neyveli-1.
1000. எஸ். கணேஷ், 28, பெரிய சன்னதி தெரு, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.
1001. கெ. இராஜஇராஜேஸ்வரி, 18, முத்துசாமி வீதி, ஓடக்காடு, திருப்பூர்-2.
1002. ஆர். ஜி. சிவபாஸ்கரன், 31-ஏ, அக்ரகாரம், விஜயபுரம், திருவாரூர்.
1003. ஆர். வி. ராஜகோபாலன், 7, தட்டான் படுகை தெரு, கும்பகோணம்-1.
1004. ஏ. எஸ். ஆராவமுதன், 31, தெற்கு அக்ரகாரம், காட்டுப்புத்தூர், திருச்சி மாவட்டம்.
1005. இரா. சரவணன், த/பெ. இராமமூர்த்தி, கீழப்பனையூர்-614 708.
1006. ஆர். ராஜா, 32, வைத்தியராம் தெரு, சென்னை-17.
1007. என். பத்மா 1, நீர்வண்ணன் 2-வது தெரு, லக்ஷ்மிபுரம், குரோம்பேட்டை, சென்னை-44.
1008. வத்சலா ஸ்ரீநிவாசன், பிளாட் எண் 15, பாலாஜி நகர், விருகம்பாக்கம், சென்னை-92
1009. ந. சீனிவாசப்பெருமாள், 12-ஏ, மணி காம்பவுண்ட், வைகை வடகரை, ஆழ்வார்புரம், மதுரை-2.
1010. க. சாரதா, பிளாட் எண். 1047, ஏ. எல். முதலியார் சாலை, மேற்கு கருணாநிதிநகர், சென்னை-78.
1011. எஸ். சங்கரநாராயணன், 265, யாதவாள் தெரு, ஆதம்பாக்கம், சென்னை-88.
1012. ஆர். பாலசந்தர், 29, பண்டரி நாதன் தெரு, கரூர்-1.
1013. பி. எஸ். அத்தியப்பன், S/o. சுப்பராயக் கவுண்டர், பாசா சாயபுக்காடு, உமையாள்புரம் போஸ்ட், சேலம் மாவட்டம்.
1014. எம். அனுராதா, 4/6, பத்தாவது வார்டு, தாரமங்கலம்-636 502.




1015. ஜி. பாலாஜி, 25, சன்னதி தெரு, திருவாரூர்.
1016. எஸ். சீனிவாசராவ், 1/54, அனுமார் கோயில் தெரு, பாலூர், பண்ருட்டி தாலுகா.
1017. வி. பாலவேணுகோபால், 11, ஐந்தாவது குறுக்குத் தெரு, மரவனேரி, சேலம்–7.
1018. இ. வாசுவெங்கட், 1, ஸ்டேட் பாங்க் காலனி, அம்மாபேட்டை, சேலம்–3.
1019. ஹேமா பாலசுப்பிரமணியன், எப்–19 புதுக்காலனி, மேட்டூர் அணை–1.
1020. எஸ். மோகனு, 119, மெயின் ரோடு, உத்தமபாளையம்–626 533.
1021. ந. யசோதா 52 தாயுமானவர் தெரு, வெங்கடேச காலனி, பொள்ளாச்சி.
1022. பி. எஸ். அனுராதா, 32–பி, செக்காரத் தெரு, இடைப்பாடி–637 101.
1023. ந. மீனு, 9–பி, தேரு தெரு, சக்தி வேலம்மாள் நகர், எஸ். எஸ். காலனி, மதுரை-16.
1024. ந. ஹரிஹரன், 41, பட்டர் வொர்த் ரோடு, திருச்சி–2.
1025. ஜி. ராமநாதன், S/o. ஏ. கணேசன், பேராசிரியர், சரஸ்வதி நாராயணன் கல்லூரி மதுரை–22
1026. பி. பெரியசாமி, 31–பி, தண்டு மாரியம்மன் கோவில், 2–வது தெரு, திண்டுக்கல் ரோடு, மதுரை–1.
1027. பி. எஸ். ஆர். கிருஷ்ணன், சி–42, பிருந்தாவன் தெரு, திருநகர், மதுரை–6.
1028. சிவ. மீனாட்சிசுந்தரி, 3, முதலியார் முதல் தெரு, சங்கரன்கோவில்–627 756.
1029. சி. ரா. ஹேமலதா, 5/7, கீச்சான் தோட்டம், ஞானம்பிகை மில்ஸ் அஞ்சலகம் கோவை–29.
1030. சி. கிருத்திகா 2–சு, 4–பி, சர்ச் காலனி, மேட்டூர் அணை–1.
1031. பி. சுமதி, 3, நியூ நாடார் காலனி, வடலூர்–607 303.
1032. ஜெ. பாலா, 18, சாராயக் காரத் தெரு, விருத்தாசலம், தெ. ஆ. மாவட்டம்.
1033. ம. கௌரிசங்கர், 83, முத்துசாமி கவுண்டர் வீதி, கருவம்பாளையம், திருப்பூர்–1.
1034. பி. கே. சுபாஷிணி, 12, கிருஷ்ணசாமி தெரு, ஈரோடு–4.
1035. கே. அருண்செல்வன், 153, தேவதாசன் தெரு, நாகர்கோவில்.
1036. எஸ். வி. நீலகண்டன், 33, மடப் தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோயில்.
1037. எஸ். வினோத்குமார், 24, காவேரித்தெரு, ராஜாஜி நகர், சென்னை–49.
1038. எஸ். லாவண்யா, 14–ஏ, லோகமான்ய வீதி, ஆர். எஸ். புரம், கோவை–2.
1039. ஆர். வெங்கடராகவன், 14, தியாகராய கிராமணி தெரு, சென்னை–17.
1040. ஆர். ஸ்ரீவத்சன், 14, தியாகராய கிராமணி தெரு, சென்னை–17.
1041. பி. மம்தாதேவி, 10, இராஜாபாதர் தெரு, திருப்பத்தூர்–635 601.
1042. M. Varalakshmi, 1214, Lakshmi bai Nagar, New Delhi-110 023
1043. இரா. மாரியப்பன், 13, கூரைப் பிள்ளையார் கோவில் தெரு, பழைய பாளையம், இராஜபாளையம்.
1044. ஸ்ரீ. ராஜேஷ், 3118, கிழக்கு 2–ஆம் தெரு, புதுக்கோட்டை.
1045. Jagadish, GI-967, Sarojininagar, New Delhi-23
1046. R. Sithiranayagam, Kadamane P.O., M.H. Division, (Via) Soklaspura Hassan Dt-573127)
1047. சி. சிவகுமார், 5, புதுத்தெரு, கதிர்காமம், பாண்டிச்சேரி–625 009.
1048. டி. ராமஜெயம், 1/103, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை–24.
1049. ந. சங்கரன், 1, தாகூர் ரோடு, நிலமங்கை நகர், ஆதம்பாக்கம், சென்னை–88.
1050. தோ. ஜெயலக்ஷ்மி, 68, புதுக்கிராமம், தூத்துக்குடி–3.
1051. ஆர். வெங்கடேசன், 15, சிங்காரவேலு உடையார் தெரு, மன்னார்குடி–614 001.
1052. ஜெ. பாலசுப்பிரமணியன், 4, சன்னதித் தெரு, திருவாரூர்.
1053. ச. கோமதி, 17, தாண்டவராயப் பிள்ளை தெரு, நாகப்பட்டினம்.
1054. மு. வேல்முருகன், 37–ஏ, மேல ஒத்த சரகு, மயிலாடுதுறை–609 003.
1055. ஆர். பானு C/o. அஜந்தா ஸ்டுடியோ, சேலம்–5.
1056. எம். பழனி, பிளாட் எண். 76, ஜெயராம்நகர், கொளத்தூர், வில்லிவாக்கம், சென்னை–99.
1057. எஸ். உமாமகேஸ்வரி, ஐ–60, அண்ணாநகர், சென்னை–102.
1058. ஏ. எஸ். சிவகுமார், 10, எஸ். பி. ஜி. சர்ச் சந்து, மதுரை–1.
1059. வி. ராமபிரபா, 7–ஏ, புதுத்தெரு, ராமேஸ்வரம்.
1060. கே. ஆனந்த், 309, ஆர்க்காடு ரோடு, சென்னை–24.
1061. கு. செல்லையா, 9, அனந்தபுரம் தெரு, தென்காசி.
1062. நா. கணேசன், S/o. அ. நாகராஜன், இந்திரா தெரு, அண்ணாநகர், செக்காலை, காரைக்குடி.
1063. உ. சண்முகம், S/o. எம். உமாமகேஸ்வரன், தெற்கு வீதி, சட்டநாதபுரம், தஞ்சை மாவட்டம்.
1064. ரா. ரமாபிரபா, பிளாட் எண். 1, அண்ணா தெரு, ஐயப்பநகர், திருச்சி–21.
1065. எல். கே. பாலாஜி, 12, புதிய அக்ரகாரத் தெரு, நல்லான் பட்டறை, வேலூர்.
1066. பா. இராசகோபாலன், பாலாஜி நிலையம், பவர் ஹவுஸ் காலனி, கிருஷ்ணகிரி–635 001
1067. எம். சரவணகுமார், 18, போலீஸ் காலனி தெரு, எண். 3, சிங்கநல்லூர், கோவை.
1068. கே. தமிழ்ச்செல்வன், சி/61, வனக்கல்லூரி குடியிருப்பு, ஆர். எஸ். புரம், கோவை 2

(இன்னும் வரும்)

டேவிட் காப்பர் பீல்டு

உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை – 9

மூலம் : சார்லஸ் டிக்கன்ஸ்
தமிழ்ச் சுருக்கம்:
எச். கிருஷ்ணமூர்த்தி



என் குழந்தைப் பருவ நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். முதல் நினைவுகள் என் அம்மாவைப் பற்றியவை. அம்மாவின் பெயர் கிளாரா. அவளுடைய அழகான தலைமுடியும், இளமையான முகமும் தெளிவாக நினைவுக்கு வருகின்றன. என்னை வளர்த்த பணிப் பெண் பெகோட்டி. அவளுடைய சிவந்த குண்டு முகம் நன்றாக ஞாபகம் இருக்கிறது.

நான் பிறந்ததுமே என் அப்பா இறந்து விட்டார். அவருக்கு மிஸ் பெட்சி டிராட்வுட் என்று ஓர் அத்தை இருந்தாள். ரொம்பக் கோபக்காரி. என் அம்மாவுக்குப் பெண் குழந்தை பிறந்தால், அதை வளர்ப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக அந்த அத்தை சொல்லியிருந்தாளாம். ஆனால் நான் பிறந்தேன். அன்று கோபித்துக் கொண்டு போனவள்தான். பிறகு அத்தை திரும்பி வரவே இல்லை. எங்களுக்கு வேறு உறவு இல்லை.

எங்களுடைய வீடு பெரியது. அம்மா, பெகோட்டி, நான் — மூவரும் அதில் மகிழ்ச்சியாக இருந்தோம். கோடை நாட்களில் தோட்டத்தில் ஓடி விளையாடினோம். குளிர் நாட்களில் கூடத்தில் நெருப்புக்கு அருகில் விளையாடினேன். அம்மாவோ, பெகோட்டியோ துணை இருந்தனர்.

ஒரு நாள் மாலை நேரம். நன்றாக நினைவிருக்கிறது. பெகோட்டியோடு நான் வழக்கம் போலக் கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்தேன். அண்டை வீட்டிற்குப் போயிருந்த அம்மா நேரங் கழித்துத் திரும்பினாள். உயர்ந்த உடையும், கறுப்பு முடியும், குறுந்தாடியும் கொண்ட அந்த அண்டை வீட்டுக்காரர் அம்மாவுக்குத் துணையாக வந்து விடை பெற்றுச் சென்றார்.

அவருடைய பெயர் மிஸ்டர் மர்டு-ஸ்டோன். அன்று முதல் அவர் அம்மாவைப் பார்க்க அடிக்கடி வந்தார். அம்மா அவருடைய பேச்சுக்களை ரசித்ததாகத் தெரிந்தது. ஆனால், எனக்கு அவரைப் பிடிக்கவே இல்லை.

பெகோட்டியின் அண்ணா யார்மௌத்தில் (Yarmouth) இருந்தார். அவளும் நானும் அங்கு போகப் புறப்பட்டோம். அம்மா அழுதுகொண்டே விடை கொடுத்தாள். அப்போது அங்கு வந்த மிஸ்டர் மர்டுஸ்டோன் அழுவதற்காக அம்மாவைக் கோபித்துக் கொண்டார்.

கோச் வண்டியில் ஏறி யார்-மௌத்தை அடைந்தோம். பெகோட்டியின் மருமான் எங்களை வரவேற்றான். அவன் பலசாலி. ஆறடி உயரம். எங்களுடைய பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு என்னையும் முதுகில் ஏற்றிக் கொண்டான்.

அவர்களுடைய வீடு புதுமையாக இருந்தது. கடற்கரையில் இருந்த ஒரு பழைய படகுக்குக் கூரை போட்டு அதை ஒரு வீடாக மாற்றியிருந்தனர். கடல், கப்பல், மீனவர்கள் நிறைந்த அந்தச் சூழ்நிலை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

''..கு வீட்டில் எமிலி என்ற சிறுமி இருந்தாள். அவள் என்னைக் கடற்கரைக்கு விளையாட அழைத்துப்போனாள். இரண்டு வாரங்கள் இனிதாகக் கழிந்தன. வீடு திரும்பினோம்.

* * *

கதவைத் தட்டி அம்மாவைக் கூப்பிட்டேன். ஒரு புதிய வேலைக்காரன் கதவைத் திறந்தான்.

''அம்மாவுக்கு என்ன ஆயிற்று?'' என்று அருகிலிருந்த பெகோட்டியிடம் கேட்டேன்.

''மிஸ்டர் டேவிட், உனக்கு ஒரு அப்பா வந்திருக்கிறார்'' என்றாள் பெகோட்டி.

என் முகம் வெளுத்தது. கைகால்கள் நடுங்கின. பெகோட்டி நல்ல வார்த்தை சொல்லி அன்பாக என்னை உள்ளே அழைத்துப் போனாள்.

என்னைக் கண்டதும் அம்மாவால் தன் உணர்ச்சிகளை அடக்க முடியவில்லை. அருகில் இருந்த மிஸ்டர் மர்டு ஸ்டோன் அம்மாவைத் தேற்றினார். பிறகு என்னை வரவேற்றார். அம்மாவும், நானும் மௌனமாக அமர்ந்திருந்தோம். அவர் எங்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் ஆனதும் அங்கிருந்து நழுவி நான் மாடிக்குப் போனேன்.

* * *

மிஸ்டர் மர்டு ஸ்டோனிடமிருந்து ஒரு சின்ன உதவியோ, ஆறுதலோ எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, ஒரு பிள்ளை தன் அப்பாவை நேசிப்பது போல என்னால் அவரை நேசிக்கமுடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நான் அவரை வெறுக்கத் தொடங்கினேன்.

சில நாட்களுக்குப் பிறகு அவருடைய தங்கை மிஸ் மர்டு ஸ்டோனும் எங்களுடன் தங்கினார். அவள் எப்போதும் கடுகடுவென்று இருந்தாள். இருவருமே மிகக் கொடூரமானவர்கள்; கர்விகள். மற்றவர்களை அடக்கியாள விரும்பினர்.

மிஸ்டர் மர்டு ஸ்டோன், விடுதியோடு கூடிய பள்ளியில் என்னைச் சேர்க்க விரும்பினார். அம்மா ஒப்புக்கொண்டாள். விடுதிக்கு அனுப்புவதற்கு முன், பாடங்களை வீட்டிலேயே அம்மா சொல்லிக் கொடுத்தாள். எனக்குப் படிப்பு வேகமாக வரவில்லை. சில வேளைகளில் தவறாகச் சொன்னேன். சில வேளைகளில் விழித்தேன். அம்மா சலித்துக் கொண்டாள்.

நான் படிக்கும் அறையில் மிஸ்டர் மர்டு ஸ்டோனும், அவருடைய தங்கையும் எப்போதும் இருந்தனர். என் தவறுகளைக் கண்டு அவர்கள் கோபமடைந்தனர். என் பாட நேரத்தில் தான் அவர்கள் என்னை எப்படி வளர்க்க வேண்டும் என்று அம்மாவுக்குப் போதித்

திருக்குறள் புதிர் – விடை

புதிர்-11

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து (879)

முள் மரத்தை, சிறு செடியாக இருக்கும்போதே பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால், அது வளர்ந்து மரமான பின், அதை வெட்டுகின்றவர் கையையே துன்புறுத்தும்.

புதிர்-12

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று (931)

வெற்றியைத் தேடித் தந்தாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது. சூதாட்டத்தில் வென்றவை யாவும், மீனை விழுங்கப்போய்த் தூண்டிலில் அகப்பட்டுக்கொண்ட மீனைப் போல ஆகும்.



தனர். படிக்கும் நேரம் நரக வேதனையாக இருந்தது. நான் பாடங்களைச் சரியாகச் சொல்லா விட்டால் மிஸ்டர் மர்டுஸ்டோன் கையில் கிடைத்த புத்தகத்தை எடுத்து என்னை அடித்தார். அவர் அவ்வாறு செய்யச் செய்ய என் சோர்வு அதிகமாக வளர்ந்தது.


இறந்துபோன என் அப்பாமாடிஅறையில் சில கதைப் புத்தகங்களை வைத்திருந்தார். மனம் துன்பப்படும்போதெல்லாம் நான் அந்த அறைக்குச் சென்று கதைகள் படித்தேன். ஒவ்வொரு கதையைப் படிக்கும்போதும் அந்தக் கதையின் நாயசனாகவே என்னைக் கற்பனை செய்து கொண்டேன். அது தான் எனக்குக் கிடைத்த ஒரே ஆறுதல்.

வழக்கம் போல் ஒரு நாள் அம்மாவின் அறைக்குப் படிக்கப் போனேன். மிஸ்டர் மர்டு ஸ்டோன் கையில் ஒரு நீண்ட பிரம்புடன் தயாராக இருந்தார். ''டேவிட்! இன்றைக்குப் பாடங்களை ஒழுங்காகச் சொல்லா விட்டால் உதை விழும்!'' என்று அவர் மிரட்டினார். நான் படித்த பாடங்கள் உண்மையாகவே மறந்து போயின. என்னால் எதையும் சரியாகச் சொல்ல முடியவில்லை. என் பரிதாப நிலையைக் கண்டு அம்மா அழத் தொடங்கினாள்.

''கிளாரா! நீ தைரியமாக இரு. இவன் வேண்டுமென்றே சண்டித்தனம் செய்கிறான். இவனை நான் வழிக்குக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி என்னை மாடிக்கு அழைத்துச் சென்றார். அடிப்பதற்காகப் பிரம்பை ஓங்கினார்.

''ஐயா, ஐயா, நான் நிஜமாகவே நன்றாகப் படித்தேன். ஆனால், பயத்தினால் எல்லாம் மறந்து விட்டது. தயவு செய்து என்னை அடிக்காதீர்கள்.'' என்று கெஞ்சினேன். என்னுடைய பேச்சை அவர் லட்சியம் செய்யவில்லை. பிரம்பு என் மீது விழுந்தது. அதே சமயத்தில் வெடுக்கென்று நான் அவருடைய கையைக் கடித்தேன். அவ்வளவுதான்! ஆவேசம் வந்தவர்போல் அவர் என்னை அடித்து நொறுக்கிவிட்டார். பிறகு, அறையில் என்னை அடைத்துக் கதவைப் பூட்டினார். நான் அழுது கொண்டே தரையில் கிடந்தேன். அந்த நிகழ்ச்சியை நினைத்தாலே என் உடம்பு நடுங்குகிறது.

ஐந்து நாட்கள் அந்தச் சிறையில் இருந்தேன். மிஸ் மர்டு ஸ்டோன் வேளா வேளைக்கு வந்தாள். என்னுடைய உணவை மௌனமாக உள்ளே வைத்து விட்டுக் கதவைப் பூட்டிச் சென்றாள். ஐந்தாம் நாள் யாரோ என்னை ரகசிய



மாகக் கூப்பிடும் குரல் கேட்டது. கதவில் இருந்த சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்தேன்.

''யாரது? பெகோட்டியா?'' என்று கேட்டேன்.

''ஆமாம் டேவிட், நான்தான்'' அவள் பதிலளித்தாள்.

''அம்மா ரொம்பக் கோபமாக இருக்கிறாளா?''

''இல்லையே.''

''என்னை என்ன செய்யப் போகிறார்கள்?''

''லண்டனுக்கு அருகில் உள்ள ஒரு பள்ளிக்கு உன்னை அனுப்பப் போகிறார்கள்.''

''எப்போது?''

''நாளைக் காலை. என்னை மறக்க மாட்டாயே, டேவிட்? நான் உனக்குக் கடிதம் எழுதுவேன்''

''நன்றி, பெகோட்டி.''

* * *

அடுத்த நாள் மிஸ் மர்டுஸ்டோன் கதவைத் திறந்து நான் விடுதிக்குப் போக வேண்டும் என்றாள். வருத்தத்தோடு அம்மாவிடம் விடை பெற்றேன். மிஸ் மர்டுஸ்டோன் என்னைக் கோச்சு வண்டியில் ஏற்றி அனுப்பினாள். நான் ஒரு கெட்ட பிள்ளை என்று அவர்கள் அம்மாவிடம் சொல்லியிருந்தனர். அழுதுகொண்டே நான் வண்டியில் போனேன். சிறிது தூரம் போனதும் திடீரென பெகோட்டி தோன்றி என் கையில் கொஞ்சம் தின்பண்டங்களையும் பணத்தையும் வைத்துவிட்டுப் போனாள். அவற்றின் மீது ''டேவிட்டுக்கு, மிக்க அன்புடன்'' என்று அம்மாவின் எழுத்துக்கள் காணப்பட்டன.

* * *

''சேலம் இல்லம்'' என்பது பள்ளியின் பெயர். ஆசிரியர் மிஸ்டர் மெல் என்னை வரவேற்றார். அது விடுமுறைக் காலம். விடுதி வெறிச்சென்றிருந்தது. சிறுவர்கள் வீடு சென்றிருந்தனர். எனக்குத் தண்டனையாக நான் மட்டும் அங்கு அனுப்பப் பட்டிருந்தேன். குப்பையும் கூளமும் நிறைந்து பள்ளி அசுத்தமாக இருந்தது.

ஒரு வகுப்பறையில் நுழைந்து சுற்றிப் பார்த்தேன். ''இவன் கடிப்பான். ஜாக்கிரதை!'' என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட அட்டை என்னைக் கவர்ந்தது. பயங்கரமான நாய் இருக்குமோ என்ற அச்சத்துடன் சுற்றிலும் நோக்கினேன். ஆசிரியர் மெல்ல உள்ளே வந்தார். ''ஐயா, கடிக்கிற நாய் இங்கே இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''இங்கே நாய் இல்லை. ஒரு சிறுவன் தான் இருக்கிறான். நீதான் அது. உன்னுடைய முதுகில் இந்த அட்டையைக் கட்ட வேண்டும் என்பது எனக்கு உத்தரவு. வேறு வழியில்லை'' என்று சொல்லிக் கொண்டே, அவர் அந்த அட்டையை எடுத்து என் முதுகில் கட்டினார். நான் எங்கே போனாலும் அந்த அட்டை என் முதுகின் மேலேயே இருக்க வேண்டும் என்று எச்சரித்தார். என் மனம் அப்படியே நொறுங்கிப் போய் விட்டது.

* * *

விடுமுறை முடிந்தது. தலைமை ஆசிரியர் மிஸ்டர் கிரீக்கிளும், மற்ற ஆசிரியர்களும் பள்ளிக்குத் திரும்பினர். சிறுவர்கள் நிறைந்ததும் பள்ளிக்கூடம் களை கட்டியது. முதலில் வந்த டிராடில்ஸ் என்ற சிறுவன் என்னிடம் வந்து விசாரித்தான். என் முதுகில் தொங்கிய அட்டையின் கதையைக் கேட்டு அவன் சிரித்தான். மற்ற சிறுவர்களுக்கும் அதை எடுத்துச் சொன்

னான். நான் எதிர்பார்த்ததை விட அவர்கள் என்னிடம் அதிக அன்பாக இருந்தனர். ஸ்டீர் போர்த் என்பவன் மாணவர் தலைவன். அவன் என் அட்டையைக் கண்டு, ''இது கொடுமையான செயல்'' என்றான். அவனை எனக்கு மிகவும் பிடித்தது. பள்ளியைப் பற்றி அவனுடன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

முதல் நாள் தலைமை ஆசிரியர் கையில் ஒரு நீண்ட பிரம்புடன் வகுப்புக்கு வந்தார். அவர் புதிதாகச் சேர்ந்த சிறுவர்களைப் பார்த்து, ''பாடங்களைக் கவனமாகப் படியுங்கள். இல்லாவிட்டால் பிரம்படி கிடைக்கும்'' என்று எச்சரிக்கை செய்தார். பிறகு என் அருகில் வந்து, ''ஓ, நீதான் கடிக்கிற சிறுவனா? நான் அடிக்கிற ஆசிரியராக்கும்! எங்கே, கையை நீட்டு பார்க்கலாம்!'' என்று சொல்லி, நான் கண்ணீர் சொரியும்வரை என்னைப் பிரம்பால் விளாசினார். இப்படி ஒவ்வொரு சிறுவனாக அவர் 'விசாரித்து விட்டு' வெளியே போகும்போது அநேகமாக எல்லோரும் அடி தாங்காமல் அழுது கொண்டிருந்தனர்.



குளிர்கால இரவுகள், மங்கிய விளக்கொளி, கிழிந்த புத்தகங்கள், பிரம்படி, கண்ணீர் விடுதல் — ஆகியவற்றைத் தவிர, என் பள்ளி நாட்களைப் பற்றிச் சொல்வதற்கு விசேஷமாக வேறொன்றுமில்லை.

* * *

விடுமுறை வந்தது. அம்மாவைப் பார்க்கும் ஆசையும், மிஸ்டர் மர்டுஸ்டோனைச் சந்திக்கும் அச்சமும் என்னை அலைக்கழித்தன. தயக்கத்தோடு வீட்டின் உள்ளே நுழைந்தேன். மெல்லிய குரலில் பாடிக் கொண்டே அம்மா ஒரு பச்சிளங் குழந்தையைச் சீராட்டிக் கொண்டிருந்தாள். அருகில் சென்றேன். 'டேவிட்!' என்று சொல்லி அன்போடு அம்மா என்னை அழைத்தாள்.

''இதோ பார்! உன் சின்னத் தம்பி. அவனுக்கு முத்தம் கொடு'' என்றாள். கொடுத்தேன். பெகோட்டி என்னை வரவேற்றாள். அம்மா மெலிந்து பலவீனமாகக்காணப்பட்டாள். பெகோட்டி வழக்கம்போலச் சுறுசுறுப்பாக இருந்தாள். அன்றைய தினத்தை நாங்கள் சந்தோஷமாகக் கழித்தோம்.

வெளியூர் போயிருந்த மிஸ்டர் மர்டு ஸ்டோனும், அவருடைய தங்கையும் மறு நாள் காலையில் திரும்பினர். அவரிடம் எனது பழைய நடத்தைக்கு மன்னிப்புக் கேட்டேன். அடுத்த சில நாட்கள் மௌனமாகக் கழிந்தன. விடுமுறை முடிந்ததும் பள்ளிக்குப் புறப்பட்டேன். வீட்டு வாசலில் கோச்சு வண்டி நின்றது. ஏறிக்கொண்டேன். வேலிக்கு மேலே அம்மா குழந்தையைத் தூக்கிக் காண்பித்தாள். வண்டி நகர்ந்தது. விடுதிக்குப் போன பிறகு என் கனவில் அதே காட்சியில் அம்மா அநேக நாட்கள் வந்தாள்.

* * *

எனக்கு ஒன்பதாவது பிறந்த நாள் வந்தது. வீட்டிலிருந்து பரிசுகள் வரும் என்றுஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். தலைமை ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். அவருடைய மனைவியார் மிகுந்த அன்போடு என்னைத் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டாள். அவருடைய கையில் ஒரு கடிதம் இருந்தது. ''டேவிட்! உனக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டும். நீ அம்மாவைப் பார்த்தபோது அவருடைய உடம்பு எப்படி இருந்தது?'' என்று விசாரித்தார். அடுத்து அவர் என்ன சொல்லப் போகிறார் என்று நான் ஊகிப்பதற்குள், ''உன் அம்மா இறந்து விட்டார்'' என்று சொன்னார்.

துக்கம் தாங்காமல் நான் அழுதேன். தொடர்ந்து அழுதேன். மிஸஸ் கிரீக்கிள் என்க்கு ஆறுதல் சொன்னார். ஆசிரியர்களிடமும், தோழர்களிடமும் சொல்லிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டேன்.

* * *

பெகோட்டி எனக்கு ஆறுதலாக இருந்தாள். அம்மாவும், குழந்தையும் இறந்துபோன விவரங்களைச் சொன்னாள். அம்மாவின் காரியங்கள் முடிந்தன.

மிஸ்டர் மர்டு ஸ்டோன் பெகோட்டியை வேலையிலிருந்து நீக்கினார். அவள் அண்ணன் வீட்டுக்குச் சென்றாள். அங்கு அவளுக்குத் திருமணம் நடந்தது. நானும் திருமணத்திற்குப் போயிருந்தேன்.

மிஸ்டர் மர்டு ஸ்டோன் என்னையும் பள்ளியிலிருந்து நிறுத்தினார். ''இனி நீ உழைத்துப் பிழைக்க வேண்டும்'' என்றார். லண்டனில் அவருக்குத் தெரிந்த ஒரு ஒயின் வியாபாரியிடம் என்னை வேலைக்கு அமர்த்தினார். நான் லண்டனுக்குப் பயணமானேன்.

* * *

அந்த ஒயின்கடை ஆற்றுக்கு அருகில் இருந்தது. கடையில் ஒரே புழுதி, புகை, அழுக்கு. என்னையும் சேர்த்து மொத்தம் நான்கு சிறுவர்கள் பணி செய்தனர். பாட்டில்களைச் சுத்தம் செய்தல், பெயர்ச் சீட்டுக்களை ஒட்டுதல், ஒயின் பாட்டில்களைப் பீப்பாயில் வைத்துக் கட்டுதல் — முதலியவை எங்களுடைய தினசரி வேலைகள். மற்ற மூன்று சிறுவர்களுக்கும் எழுதப் படிக்கத் தெரியாது. வாயில் வந்தபடி கொச்சையாகப் பேசினர். அவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை.

மிஸ்டர் மிகாபெர் என்பவரின் வீட்டில் நான் தங்க ஏற்பாடாகியிருந்தது. முதல் நாள் அவர் என்னை அழைத்துப் போனார். தன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் என்னை அறிமுகம் செய்வித்தார். எனக்கென்று ஒரு சிறிய அறையைக் கொடுத்தார்.

மிகாபெர் ஒரு வேடிக்கையான மனிதர். அவர் கடனில் மூழ்கியிருந்தார். அவரால் பணத்தைச் சேமிக்கவும் முடியவில்லை; கடனை அடைக்கவும் முடியவில்லை. கடன் தொல்லைகள் அதிகமாகும்போது, ''இதோ, இப்போதே தூக்குப் போட்டுக் கொள்ளப் போகிறேன்'' என்று கவலையோடு சொல்லுவார். ஆனால் சிறிது நேரம் கழித்து நன்றாக உடை அணிந்து கொண்டு சந்தோஷமாகப் பாடிக் கொண்டிருப்பார்.

என்னுடைய உணவை நானே தயாரித்துக் கொண்டேன். எனக்கு வாரத்திற்கு ஏழு ஷில்லிங் சம்பளம். சிக்கனமாக அதை எப்படிச் செலவழிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. உடைகள் கிழிந்தன. பசியும், குளிரும் என்னை வாட்டின. அந்தக் கஷ்டங்களைச் சமாளிக்க வழி தெரியாமல் விழித்தேன்.

கடன் கொடுத்தவர்கள் மிகாபெர் மீது வழக்குத் தொடுத்தனர். அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவருடைய மனைவி வீட்டிலிருந்த மிச்சம் மீதிப் பொருள்களையும் விற்றாள். உணவுக்கு வேறு வழியில்லாமல் போகவே குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவளும் சிறைக்குச் சென்றாள். சிறைக்கு அருகிலேயே ஒரு அறை எடுத்துக்

கொண்டு அடிக்கடி அவர்களை நான் சந்தித்தேன்.

மிகாபெர் விடுதலையானார். அவருக்கு வெளியூரில் வேலை கிடைத்தது. குடும்பத்தோடு புறப்பட்டார். நான் தனியாக விடப்பட்டேன். வேறு யாருடனும் தங்க எனக்குப் பிடிக்கவில்லை. வேலையும் பிடிக்கவில்லை. யோசித்தேன். மிஸ் பெட்சி டிராட்வுட் என்ற அத்தையின் நினைவு வந்தது. யாரிடமும் சொல்லாமல் லண்டனை விட்டு ஓடிப்போய் அத்தையின் உதவியைக் கேட்கத் திட்டமிட்டேன்.

* * *

பெகோட்டிக்குக் கடிதம் எழுதி, அத்தையின் விலாசமும், கொஞ்சம் பணமும் பெற்றேன். அத்தை டோவர் கடற்கரை அருகில் வசித்தாள். பெட்டியையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு டோவருக்குப் புறப்பட்டேன். வழியில் என் உடைமைகள் எல்லாம் பறிபோயின. இருந்தாலும் பழைய வேலைக்குத் திரும்பிப் போக மனம் வரவில்லை.

டோவருக்குக் கால் நடையாகவே பயணம் செய்தேன். அணிந்திருந்த துணிகளை ஒவ்வொன்றாக விற்று உணவு வாங்கினேன். இரவில் ஆற்றங்கரையில் உறங்கினேன். குளிர் நடுக்கியது. பசியும் களைப்பும் துளைத்தன. கால்கள் வலித்தன. சட்டை கிழிந்து தொங்கியது. கையில் காசில்லை. நான் பரிதாபமாகக் காணப்பட்டேன்.

டோவரை அடைந்து அத்தையைப் பற்றி விசாரித்தேன். எல்லோரும் என்னை ஒரு பிச்சைக்காரன் என்று எண்ணி ஒதுக்கினர். கடைசியில் ஒருவர் உதவினர். அத்தையின் வீட்டை அடைந்தேன். சின்ன வீடு. அழகிய தோட்டம். நான் உள்ளே நுழைந்ததும் நல்ல உடையணிந்த உயரமான ஒரு பெண் வெளியே வந்தாள். ''பையன்களெல்லாம் இங்கே வரக் கூடாது. போ, போ'' என்று என்னை விரட்டினாள். அவள்தான் அத்தை என்று புரிந்துகொண்டேன்.

''நான் பிறந்த அன்று என் அம்மாவைப் பார்க்க வந்தீர்களே அத்தை! நான்தான் அந்த டேவிட் காப்பர்பீல்டு, அம்மா இறந்து விட்டாள். உங்களைப் பார்ப்பதற்காக ஆசையாக ஓடிவந்திருக்கிறேன்'' என்று சொல்லி அழுதேன்.

அத்தை ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு எனக்கு உதவச் சொன்னாள்.



அவன் என்னைக் குளிப்பாட்டி, எனக்கு உடையும், உணவும் அளித்தான். என்னுடைய கஷ்டங்களை அத்தைக்குச் சொன்னேன். உடனே அவள் மிஸ்டர் மர்டு ஸ்டோனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். கடிதம் கிடைத்ததும் அவர் நேரில் வந்தார்.

''டேவிட் ஒரு கெட்ட பிள்ளை. வேலையிலிருந்து ஓடிவிட்டான். அவனை வளர்ப்பது கஷ்டம். இருந்தாலும் அவன் இப்போது என்னோடு வருவதானால் அழைத்துப் போகிறேன். இல்லாவிட்டால் இனிமேல் அவனை வீட்டில் சேர்க்க மாட்டேன்'' என்று கண்டிப்பாகக் கூறினார். அத்தை என்னைப் பார்த்தார்.

''மிஸ்டர் மர்டு ஸ்டோனுக்கு என்னிடம் அன்பே இல்லை. நீங்களே என்னை வைத்துக் கொள்ளுங்கள்,

அத்தை'' என்று கெஞ்சினேன். உடனே அவர் கோபித்துக் கொண்டு புறப்பட்டார். அன்று முதல் நான் அத்தை வீட்டில் வளர்ந்தேன். அத்தையும், பணியாளர்களும் என்னிடம் அன்பாக இருந்தனர்.

காண்டர்பரியில் பிரபலமாக இருந்த டாக்டர் ஸ்ட்ராங்கின் பள்ளியில் அத்தை என்னைச் சேர்த்தாள். இருப்பிடமும் உணவும் விக்பீல்ட் என்ற வக்கி

ராமு: என் தம்பி சில சமயங்களில் ஒரு மணி நேரத்திற்குள் நான்கைந்து துணிகளைக்கூட மாத்திடுவான்!

சோமு: உடை மாத்திறதிலே அவனுக்கு அவ்வளவு மோகமா? அவனுக்கு என்ன வயசு?

ராமு: எட்டு மாதங்கள்.

ஆர். எஸ். சுப்பிரமணியன்



லின் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டன. வக்கீலுக்கு ஆக்னஸ் என்ற அழகிய பெண் இருந்தாள். அவள் தான் வீட்டைக் கவனித்து வந்தாள். எனக்கு வேண்டிய உதவிகளையும் செய்து வந்தாள். என்னையும் அவர்களுடைய குடும்பத்தில் ஒருவனாக எண்ணி என் நலனில் அக்கறை காட்டினாள். முதல் மாணவனாகத் தேறிப் பள்ளிப் படிப்பை முடித்தேன்.

என்னுடைய மேல் படிப்புக்கு அத்தை ஆவன செய்தாள். நான் சட்டத் துறையில் பயிற்சி பெற உரிய தொகையைக் கட்டினாள். லண்டனில் இருந்த சட்ட நிபுணர்களின் நிறுவனத்தில் சேர்ந்தேன். மிஸ்டர் ஸ்பென்லோ அதன் தலைவர். அவருக்கு ஒரு அழகு மகள். பெயர், டோரா. அவளை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நாங்கள் இருவரும் விரைவில் நண்பர்களானோம்.

திடீரென்று அத்தை தன் சொத்துக்களை இழந்தாள். எனக்குக் கை ஒடிந்தது போல ஆகிவிட்டது. ''வாழ்க்கையில் கஷ்டம் வந்தால் சோர்ந்து விடக் கூடாது. தைரியமாகச் சமாளிக்க வேண்டும்'' என்று அத்தை எனக்குப் புத்திமதி கூறினாள்.

அத்தையை என்னுடனேயே தங்கும்படி கேட்டுக் கொண்டேன். சட்டப் பயிற்சி போக மற்ற நேரங்களில் வேறு வேலைகளைச் செய்து பணம் சம்பாதித்தேன். பத்திரிகை நிருபராகப் பணியாற்றினேன். கதைகள் எழுதினேன். பணமும், புகழும் என்னைத் தேடி வந்தன. பிறகு, என் மனத்திற்குப் பிடித்த டோராவை மணந்து கொண்டேன். துரதிர்ஷ்டவசமாக டோரா சில நாட்களில் நோயுற்று மாண்டாள். அவளுடைய நினைவு என்னை மிகவும் பாதித்தது.

எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. ஐரோப்பாவில் மனம் போனபடி சுற்றினேன். சுவிட்சர்லாந்தை அடைந்தேன். அங்கிருந்த பனி படர்ந்த மலைச் சிகரங்களும், பள்ளத் தாக்குகளும் என் மனத்திற்கு ஆறுதலை அளித்தன. எனக்குப் பல ஆறுதல் கடிதங்கள் வந்தன. அவற்றில் ஒன்று ஆக்னஸ் எழுதியது. மேலும், ''துன்பங்களை நாம் வெல்ல வேண்டும். துன்பங்கள் நம்மை வெல்ல விடக் கூடாது'' என்று அடிக்கடி அத்தை சொன்ன அறிவுரையும் நினைவுக்கு வந்தது. ஆகவே மனத்தைத் தேற்றிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

என் வாழ்க்கையில் சோதனை நேரும் போதெல்லாம் ஆக்னஸ் எனக்கு உறுதுணையாக இருந்து உதவியிருக்கிறாள். எங்களுக்குத் தெரியாமலேயே நாங்கள் ஒருவரையொருவர் மனப்பூர்வமாக விரும்பியிருக்கிறோம். அதை முழுமை செய்யும் வகையில் நாங்கள் இருவரும் வாழ்க்கையில் இணைந்தோம்.

Charles Dickens ஆங்கிலத்தில் எழுதிய David Copper Field என்ற கதையின் சுருக்கமே இது.


வேலாயுதத்தால் கொல்லாமல் வேறு ஆயுதத்தால் கொல்ல முடியுமா என்று அவரை கூடவிருக்கும் சிங்கமுகன். பன்னிரு கரத்திலும் ஆயுதம் தரித்த முருகனுக்கு அது ஒருசோதனையா?
இந்தா! குலிசாயுதம் உன்னைக் கொன்று மீளட்டும்.
ஆ!
வெற்றி வேல் வீரவேல்
கதை: சுகிசிவம்
படம்: வினு
10
சிங்கமுகன் மாண்டான்
ஐயோ! இதுபோல் தம்பி இப்பிறவியில் இனி கிடைக்க மாட்டானே!
நானே போருக்குப் புறப்படுவேன்
எதிர் வந்தவர்க்கு எமனுக்கு கடும்போர் இட்ட சூரபன்மன் முருகவேள் முன்பு வந்தான்.
பாலகனே! இப்போதே உன்னைக் கொல்லுவேன்.
அறநெறி அற்றவனே! இன்றே நீ அழிந்தாய்.



அம்புகளின் மழைக்கு
ஆகாயம்
பிணமலைகள்
இரத்த ஆறுகள்
மண்ணில் மட்டுமன்றி விண்ணிலும் கடும்போர்.
இந்தச் சக்கரப்படை உன்னை அழிக்கும்.
வருக படையே வருக!
தோல்வியால் தளர்ந்தான் சூரன்
அண்டத்திலிருந்து அண்டம் தாவிய சூரனை ஆண்டவன் விடவில்லை.
அம்மா! இறந்தவரை எழுப்ப ஒரு வழி இல்லையா?
மகனே, அழிவு வந்தும் அறிவு வரவில்லையே! தலைவிதியை வெல்ல முடியுமா? போரை நிறுத்து.



தாயே! உபதேசம் போதும் உதவிதான் வேண்டும்.
பெரும் புறக்கடல் அருகே அருகசித்த மந்த்ர கூடம் என்ற மலை உள்ளது. கொண்டு வந்தால் இறந்தவர் எழுவார்கள்.
இப்போதே என் தேரை அனுப்புவேன்.
இந்திர ஞாலத்தேரில் மந்தரமலை வந்தது. இறந்தவர் எழுந்தனர். அசுரப்படை பாய்ந்தது. தேவர் படை ஓய்ந்தது.
ம்.. எழுந்தவரை எல்லாம் இந்த உருத்திரப்பாசுபதப்படை அழிக்கட்டும்.
அழிந்தது அசுரப் படை தனியொருவனாகத் தனித்தான் சூரபன்மன் இந்திர ஞாலத் தேரையே போரிட ஏவினான்
தேவரைச் சிறை எடுத்துத் தேர் பறந்தது. தேவாதிதேவன் கணை சாதைத் தந்தது..
இந்திர ஞாலத்தேரே! இனி நீ நம்பக்கம்.
ஆ! சூரன் சக்கரவாகப் பறவையாக மாறிப் போரிடுகிறான்... ஓடுங்கள்.
சுவாமி! பறவையை பறவையால் வீழ்த்துங்கள்.


அழிந்தது சக்ரவாகம்....
நான்கு நாட்கள் யுத்தம் நடந்தது. பூமியாக, நீராக, காற்றாக, சூரன் கொண்ட மாயாவேடங்களை கணைகளால் அழித்தார் கந்தவேள். முருகன் வலிமையை உணராத சூரன், மூவராக தேவராக, பலப்பல வடிவாகி படை எடுத்தான். தான் யார் என்பதைச் சூரனுக்கு உணர்த்தத் திருவுள்ளம் கொண்டார் முருகன்.
உயிர்க்குலம் முழுவதையும் உள்ளடக்கி, அண்டங்கள் அனைத்தையும் அளந்து பெருருவுடன் நின்றார் முருகப் பெருமான். அவ்வண்ணமே அவரைக் காணும் ஆற்றலையும் சூரனுக்கு அருளினார். சூரன் தவம் தான் என்னே!
ஆ! பாலகன் என்று ஏமாந்தேன்! இவன் மூலநாயகன்: மூர்த்திகளின் மூர்த்தி! இவரே கடவுள்.
ஆயிரம் கோடி மன்மதர்கள் சேர்ந்தாலும் இந்த அழகிற்கு இணையாகுமா? எனக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறதே! என் தம்பியும், தூதுவனும் அன்று சொன்னது உண்மையிலும் உண்மை! இவரே கடவுள்! இவரே இறைவர். என் மனம் உருகுகிறதே!
ஆதி அந்தம் இல்லாத ஜோதி இவர். கால்களால் வலம் வந்து கைகளால் தொழுது, தலையால் வணங்கி நாவால் புகழ்ந்து, இவருக்கு அடிமையாக இருப்பதுதான் நல்வாழ்வு. என் தீமைகள் நீங்கி இவரை வணங்க வேண்டுமென்று எண்ணுகிறேன். ஆனால், ஆனால்...
அது என்ன... ஆனால்?
தொடரும்

விஞ்ஞான விளையாட்டு

ஆர். பி. சாரதி


இன்னொரு ஊற்று!

செப்டம்பர் மாத கோகுலத்தில் வெளியான செயற்கை ஊற்றைச் செய்து பார்த்தீர்களா?

நான் ஒரு மாணவனிடம் சரியாக மாட்டிக் கொண்டேன்.

அவன் கேட்டான். ''ஊற்று நீர் என்றாலே பூமியிலிருந்து பீறிட்டுக் கொண்டு வரவேண்டாமா? மேலிருந்து ரப்பர் குழாயில் நீரைக் கொண்டு வராமல் ஊற்று அமைக்க முடியாதா?''

நான் திடுக்கிட்டேன்! இதுவரை நான் இப்பகுதியில் எழுதுபவை எல்லாம் பல அறிவியல் காட்சிகளில் மாணவரைக் கொண்டு செய்து காட்டியவை... நேரில் கண்டவை... கண்டவர் சொல்லிக் கேட்டவை... படித்தவைதாம்! நான் சொன்னேன். ''உண்மையான ஊற்றுக்கள் பூமிக்கடியிலிருந்து நீர் பீறிட்டு வருபவைதாம்... அப்படியும் ஒன்றிரண்டு ஊற்றுக்களைச் சில கண்காட்சிகளில் பார்த்திருக்கிறேன். ஆனால்.....''



நான் முடிக்கு முன்பே, அந்த மாணவன் சொன்னான், ''நான் ஒரு ஆர்டீஷியன் ஊற்று அமைக்கட்டுமா?''

'சரி' என்றேன்.

முதலில் ஒரு வாயகன்ற பெரிய பிளாஸ்டிக் பேசின்... சற்று உயரமானது. அதனடியில் முதலில் நல்ல களிமண்ணைக் கொட்டிப் பரப்பினான். அதன் மேல் சலிக்காத பொடிப் பொடிக் கற்கள் கலந்த சரளை மணல்...

மறுபடியும் மேற்பரப்பில் களிமண்...

அதன் நடுவில் இருபுறமும் ஓட்டையுள்ள மெல்லிய கண்ணாடிக் குழாயை மெல்ல மெல்லச் செருகி நட்டு வைத்தான்.


வாளியில் தண்ணீர் கொண்டு வந்து, குவளையால் முகந்து முகந்து ஊற்றினான்! தண்ணீர் கீழே இறங்கியது!

சிறிது நேரம் சென்றது... அடியில் சென்ற நீர் மெல்ல மெல்லக் குழாய் வழியே மேலே ஏறி, ஊற்றாகப் பீறிடவும் ஆரம்பித்தது!

''இது இயற்கை ஊற்றாக இல்லையா?'' என்று கேட்டான் அந்த மாணவன். ஆனால், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இன்னொரு மாணவன் சொன்னான்: ''செப்டம்பர் கோகுல இதழ் செயற்கை ஊற்றுக்கு மறைவாக மாடித் தொட்டியிலிருந்து

கீழே ஒரு குதிரை நிற்கிறது. அதைச் சுற்றி 22 ஆங்கில எழுத்துக்கள் இருக்கின்றன. மொத்தம் உள்ள ஆங்கில எழுத்துக்களில் மீதம் உள்ள எழுத்துக்களைக் கொண்டு குதிரையின் எஜமானரைக் கண்டு பிடிக்க வேண்டும். எங்கே. முயன்று பாருங்கள்:

கருத்து: பி.கே. பாவா,
கல்கத்தா-18



தண்ணீர் வந்தது. நீ வாளியிலிருந்து முகந்து ஊற்றினாய் அவ்வளவுதானே!'

நான் என்ன சொல்ல?

ஒலியோ ஒலி!

ஒலி அலைகள் திறந்தவெளிக் காற்றில் • தெளிவாக விரையுமா, ஊடகம் மூலம் விரையுமா?

பண்டைக் காலத்தில் பகைவரின் குதிரைப்படைகள் வருவதைப் பூமியில் காதை வைத்துக் கேட்டுப் பார்த்து உணர்வார்களாம்.

பாக்கெட் கடிகாரத்தின் 'டிக்டிக்' ஒலியைக் கேட்டுப் பார்ப்போமா? உன் நண்பன் கையில் அதை வைத்துக் கொண்டு நிற்கட்டும். சற்றுத் தள்ளி நின்று கொண்டு நீ கேட்டுப்பார்!

மறுபடியும் நீண்ட மேஜைமீது அதை வைத்துவிட்டுச் சற்றுத் தள்ளிக் காதை மேஜை மீது படும்படி வைத்துக் கேட்டுப் பார்! இப்போது இன்னும் தெளிவாகக் கேட்கிறதா?

ஒரு பெரிய கார்டு போர்டு அட்டையை ஒரு ஃப்ரேமில் வைத்து ஒரு ஸ்டான்டில் 'கைகாட்டி' போல் அமைத்துக் கொள்!

முன்னதாகவே சற்று மெல்லிய கார்டு போர்டு அட்டையில் இரண்டு நீண்ட குழாய்கள் செய்து கொள். ஓரங்கள் இறுக்கமாகப் படிந்து ஒட்டிக் கொள்ளும் வகையில் செயற்கை ரசாயனப் பசை ஸ்டிக்கர் டேப்பால் ஒட்டி விடுங்கள். ஒலி குழாய் உள்ளே மட்டும் செல்ல வேண்டுமல்லவா?

ஒரு குழாயை உன் நண்பனிடம் கொடு. ஒன்றை நீ வைத்துக் கொள்!


உன் நண்பன் குழாயின் ஒருமுனை அட்டையில் நன்கு பதிய வைத்து மறுமுனை வாயில் பொருந்தப் பேசட்டும்! நீ மற்றொரு குழாயின் ஒருமுனையை,

அதே அட்டையில் சற்றுத் தள்ளிப் பதிய வைத்து இன்னொரு முனையை உன் காதில் வைத்துக் கேள்!

பேசுவதைத் தெளிவாகக் கேட்க முடிகிறதா?

இதே முயற்சியை வேறு விதமாகவும் செய்து பார்க்கலாம்.

ஒரே ஒலி வேறு வேறு விதமாகக் கேட்க வைக்கும் விளையாட்டு ஒன்றைக் காண்போமா?



எண்ணெய் சிந்தாமல் ஊற்றப் பயன்படும் புனல் ஒன்றின் அடிக் குழாய்ப் புறத்தில் சாரணர் ஊதல் ஒன்றை இறுக்கமாகச் செருகுங்கள். புனல் அடிக்குழாய் அதற்கு ஏற்பப் பெரிதாய் இருக்க வேண்டும்! புனலின் அகன்ற வாய்ப்புற விளிம்பில் மிகச் சிறு ஓட்டை போட்டுக் கொள்ளுங்கள்!

மெல்லிய, ஆனால் உறுதியான கம்பி ஒன்றால் புனல் வாய் ஓட்டையையும், சாரணர் வளைய ஊதலையும் இணைத்து விடுங்கள்! இணைப்பும் உறுதியாக இருக்கட்டும்! இப்போது கம்பியைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வெட்ட வெளிக்கோ, வீட்டு மொட்டை மாடிக்கோ வாருங்கள்!

கம்பியைப் பிடித்துக் கொண்டு ஒருவர் சுழற்ற வேண்டும் ஜாக்கிரதையாக! ஊதல் ஒலியை வெவ்வேறு இடத்திலிருந்து உண்டாக்கவேண்டும். ஒருவர் எதிர்ப்புறத்தில், ஒருவர் பின்புறத்தில், இன்னொருவர் வலப்புறத்தில், மற்றொருவர் இடப்புறத்தில் என்று நாற்புறமும் நிற்கட்டும்! சுழற்றும் புனல் யார் மீதும் படாமல் நிற்க வேண்டும்.


ஒலி எப்படிக் கேட்கிறது என்று சொல்லுங்கள்! ஒருவர் மாற்றி ஒருவர் சுழற்றுங்கள்... இடம் மாற்றி இடம் நில்லுங்கள்!

ஓரிடத்தில் சைரன் ஒலி போலக் கேட்கும்!


இன்னொரு இடத்தில் ஒரே ஓர் ஒலிதான் கேட்கும்!


இது வேடிக்கையாக இருக்கும்!

இதை Doppler's Effect என்று சொல்வார்களாம் அறிவியல் பாடத்தில்! நமக்கு இது நல்லதொரு விஞ்ஞான விளையாட்டு!



பறவைகள் பலவிதம்!





★ ஆட்டப்புரு:— இப்புரு சாதாரணப் புருக்களை விடச் சற்றுப் பெரிதாக இருக்கும். இதன் தோகை ஜப்பான் பெண்கள் வைத்திருக்கும் விசிறியைப் போல் அழகாக இருக்கும். நாற்பது நாட்களுக்கு ஒருமுறை இரண்டு நாட்களுக்கு ஒன்று வீதம் முட்டைகள் இடும். முதல் நாள் இட்ட முட்டையில் ஆண் குஞ்சும், இரண்டாம் நாள் இட்ட முட்டையிலிருந்து பெண் குஞ்சும் வெளி வரும். இந்த முட்டையை நாம் கையில் எடுத்துப் பார்த்து விட்டு வைத்தால் அம்முட்டையைப் புரு அடைகாப்பதில்லை.

★ சமாதானத்திற்காகப் புருவைச் சின்னமாக வரைந்தவர் உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிகாஸோ.

★ ஆந்தையைப் பழைய ரோமானியர்கள் அதிகம் வெறுத்தார்கள். துரதிர்ஷ்டப் பறவையாக நினைத்தார்கள். கையில் சிக்கும் ஆந்தையைத் தீயிட்டு, அதன் சாம்பலை தைபர் நதியில் கரைத்தார்கள்.


★ ரஷ்யாவில் ஒரு வகைக் காக்கை இருக்கிறது. இது நாயைப் போலவே கத்தக் கூடியது. சில மரங்களின் அருகே நாய் குரைக்கும் சப்தம் கேட்டுக் கிட்ட நெருங்கிப் பார்த்தால் அம்மரத்தில் காகமே இருக்கும்.


★ நம் தேசியப் பறவை மயில். இலங்கையின் தேசியப் பறவை மைனா.

★ பிரிட்டனில் ஒரு பறவை இருக்கிறது. இது 'டீச்சர், டீச்சர்' என்று ஒலிப்பதைப் போல் கத்துகிறது. அதனால் இப்பறவைக்கு ''டீச்சர் பேர்டு' என்று பெயர்.


★ ஜேக்டால்: இது ஒரு குருவியின் பெயர். இது காக்கையைப் போலவே இருக்கும். இக்குருவி மிகவும் புத்திசாலி. எதையாவது சொல்லிக் கொடுத்தால், உடனே அதைப் பிடித்துக் கொள்ளும். இவைகளை ஐரோப்பிய நாடுகளில் அதிகம் காணலாம்.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்





எஜமானரின் பெயர்?
விடை: RAMU



அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி,
கொள்ளைக் கூட்டத்தை
எப்போ நீயும் பிடிப்பா யப்பா?
எனக்குச் சொல்லிடு.

குப்புசாமி:

முப்பத் தெட்டுப் பேரி டத்தில்
முகவரி கேட்டேன்.
இப்போ இந்த நிமிஷம் வரையில்
எவரும் தரவில்லை.

அப்புசாமி:

வீட்டு விலாசம் காட்டு கின்ற
'விசிட்டிங் கார்டை'யே
விட்டுச் செல்ல வில்லை யோஅத்
திருட்டுப் பயலுமே?

குப்புசாமி:

அப்பு சாமி சார், எனக்கோர்
எண்ணம் தோணுது.
கப்பு வுடைய அப்பா அதற்குச்
செலவு செய்வரோ?

அப்புசாமி:

என்ன செலவு என்று நீயும்
எடுத்துக் கூறினால்,
இன்றே உனக்குப் பணத்தை நானே
எடுத்து நீட்டுவேன்.

குப்புசாமி:

'திருட்டுக் கூட்டத் தலைவ னேநீ
இருக்கும் இடத்தையே
தெளிவாய் எனக்கே எழுதி அனுப்பு
இரண்டே நாட்களில்'

அப்புசாமி:

செய்தித் தாளில் விளம்ப ரங்கள்
செய்வேன் இதனைப்போல்.
கையில் பதிலும் கிடைக்கும்; உடனே
கள்வர் கிடைப்பரே!

குப்புசாமி:

வீட்டு விலாசம் தருவதோடு
திருட்டுப் பொருள்களும்
வீட்டில் சேர்த்து விடுவான்; நீயும்
காத்துக் கொண்டிரு!

ராமன் செய்த சேவை



ஜி. ஏகலைவன் (937)

சேடூர், ஒரு பெரிய கிராமம்.

அந்தக் கிராமத்தின் உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்து வந்தான் ராமன்.

ராமன் படிப்பிலும், பொதுச் சேவை செய்வதிலும் மிகவும் கெட்டிக்காரன்; நல்ல திறமைசாலி. அவன் எல்லா ஆசிரியர்களிடமும் நல்ல முறையில் பழகி, அவர்களின் அன்பைப் பெற்றிருந்தான்.

தலைமை ஆசிரியர் தவமணி, அவனைத் தம்முடைய பிள்ளையைப் போல் கருதி, பாசம் செலுத்தி வந்தார்.

விளையாட்டிலும், பேச்சுப் போட்டியிலும் ராமன்தான் முதல் மாணவனாகத் திகழ்ந்தான்.

அன்று—

தலைமை ஆசிரியர் தவமணி, கண் கலங்கினார்.

பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவு செய்தித் தாளில் வந்தது. பள்ளியிலேயே, ராமன்தான் முதல் மாணவனாகத் தேறியிருந்தான். இப்பேர்ப்பட்ட நல்ல மாணவன், தன்னைவிட்டுப் பிரிகிறானே என்ற கவலை தலைமை ஆசிரியரை அழ வைத்தது.

உயர்நிலைப் பள்ளியிலிருந்து, மேல்நிலைப்பள்ளி செல்லத் தயாராய்க் காத்திருந்தான் ராமன்.

சான்றிதழ்கள் வாங்கிச் செல்ல, காலை 9 மணிக்கே வந்து விட்ட ராமன், பள்ளி திறக்கும் வரை சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. பறவைகளின் எச்சத்தில் எங்கோ சிதறிய வேப்பங்கொட்டையில் முளைத்திருந்த சின்னச் சின்னச் செடிகளைப் பிடுங்கிக் கொண்டு வந்தான். பள்ளியின் நுழைவாயில் ஓரத்தில்... கையால் சின்னச் சின்னக் குழிகளைத் தோண்டி அவற்றில் அந்தச் செடிகளை நட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது... அவனோடு படிக்கும் அவன் வகுப்பு மாணவர்களில் ஒருவனான ராகவன் அங்கு வந்தான்.

ராகவனைப் பார்த்த ராமன்,

''பள்ளி திறக்க இன்னும் ஒரு மணி நேரமிருக்கே! அதுவரை சும்மா தானே உட்கார்ந்திருக்கப் போகிறோம். வா... ராகவன், இந்த வேப்பங்கன்றுகளை நடுவோம்...'' என்று கூப்பிட்டான்.

''டேய், ராமா! நாம்தான் இந்தப் பள்ளியை விட்டுப் போகிறோமே! இனிமேல் நமக்கென்ன...? இனியேல் இந்தப் பள்ளியில் புதிதாய்ச் சேருபவர்கள் செய்யட்டுமே... இதை நாம் ஏன் செய்யணும்...?'' என்றான் ராகவன்.

''டேய்... ராகவா! இதுவரைக்கும் மற்றவர்கள் வைத்து, வளர்த்துக் காப்பாற்றிச் சென்ற மர நிழல்களில் தானே நாம் உட்கார்ந்து படித்தோம். அவர்களும் உன்னைப் போல் எண்ணியிருந்தால்?... யாருக்குமே நிழல் கிடைத்திருக்காது. சுகாதாரமான காற்றை நாம் சுவாசித்திருக்க முடியாது. நீ பிறக்கும்போது உனக்குத் தேவையான பொருட்களுடனா பிறந்தாய்...? இல்லையே! இப்போது, நமக்கு மற்றவர்கள் செய்து வைத்திருப்பது போல... நமக்குப்பின் வருபவர்களுக்கு நாம் செய்து வைக்க வேண்டாமா? தேவையான போது பார்த்துக் கொள்ளலாம் என்று அவர்களும் உன்னைப்போல எண்ணி இருந்திருந்தால், யாருக்கு எதுதான் கிடைக்கும்...? இன்று பாடுபட்டால்தானே நாளை பயன் கிடைக்கும்...?''

ராமன் ராகவனிடம் கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டே வந்த தலைமை ஆசிரியர், ராமனின் சேவையையும், அவன் ராகவனுக்குச் சொன்ன அறிவுரையையும் கேட்டு மகிழ்ந்தார்.

''ராகவா! நீயும் ராமனைப் போல் பொதுச் சேவைக்காகப் பாடுபட வேண்டும். தன்னலம் கருதக் கூடாது...'' என்றார்.

ராகவன், தன் அறியாமையை நினைத்து வெட்கித் தலைகுனிந்தான்.

பிறகு—

இருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி, ராமனுக்கு ஐம்பது ரூபாய் பணமும் பரிசளித்து, அவனை வாழ்த்தி, வழியனுப்பினார் தலைமை ஆசிரியர்.

ராமனின் பிரிவு, தலைமை ஆசிரியருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

அமரதத்தன் ஓர் அரசகுமாரன். காசிப்பட்டணத்தை அரசாண்ட பிரமதத்தனின் ஒரே மகன்.

அவன் பதினாறு வயதாகும் வரை தனது தேசத்திலேயே கல்வி கற்றான்.

அவனை மேலும் படிக்க வைக்க, மன்னர் பிரமதத்தர் தட்சசிலத்திலுள்ள ஞானாசிரியர் போதிசத்துவரிடம் அனுப்பி வைத்தார்.

அந்தக் காலத்தில் அரசர்கள், தங்கள் பிள்ளைகளைக் குருகுலவாசம் செய்ய வெளியூர்களுக்கு அனுப்பி வைப்பது வழக்கம். அப்பொழுதுதான் ராஜா வீட்டுப் பிள்ளை என்னும் அகந்தையையும் ஆடம்பரத்தையும் விட்டு நீதியையும் நேர்மையையும் கடைப்பிடிப்பார்கள் என்பது அவர்கள் எண்ணம்.

அமரதத்தன் போதிசத்துவரிடம் கல்வி பயிலும் நல்வாய்ப்பைப் பெற்றான்.

ஆற்றங்கரைக்குக் குளிக்கச் செல்லும்போதெல்லாம் போதிசத்துவர் அவனை உடன் அழைத்துச் செல்வார்

அன்று நதிக்குச் செல்லும் வழியில் கிழவி ஒருத்தி வேர்க்கடலைகளைக் காய வைத்துக் கொண்டிருப்பதை இருவரும் பார்த்துக் கொண்டே சென்றார்கள்.

ஆற்றில் குளித்து முடித்து அவசர அவசரமாக அமரதத்தன் கரையேறி விட்டான். ஆசானைப் பார்த்தான். அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார்.

இதுதான் தருணம் என்று வேர்க்கடலை உலர்த்தும் இடத்துக்கு அவன் வேகமாக வந்து விட்டான்.

கடலையை ஆசையோடு வாரி வாய் வலிக்கும் வரை தின்றான். கிழவி இதைப் பார்த்து விட்டாள்.

'பாவம், பசிபோல் இருக்கிறது!' என்று அவனைக் கண்டும் காணாதவள் போல் இருந்து விட்டாள்.

மறுநாளும் இதே போல் நடந்தது. சின்னப் பிள்ளைதானே என்று விட்டு விட்டாள்.

மூன்றாவது நாளும் வேர்க் கடலையைத் திருடித் தின்னும்போது, கிழவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அவனைக் கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டாள்.

அமரதத்தனைக் காணாமல் ஆற்றங்கரை யெங்கும் தேடியவாறே ஆசிரியர் வந்து கொண்டிருந்தார்.

கிழவி, அமரதத்தனைப் பிடித்து வைத்து ஆவேசமாகத் திட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்துக் குருதேவர் திடுக்கிட்டார்.

''ஏண்டா! படிக்கிற பையனா நீ! உனக்குத் திருடத்தான் வாத்தியார் கத்துக் கொடுத்தாரா?'' என்று கிழவி கோபமாகக் கேட்டது போதிசத்துவரின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் இருந்தது.



''அம்மா! இவனை மன்னித்து விடுங்கள். இனி இவன் இவ்வாறு செய்யாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று அமரதத்தனை அங்கிருந்து அவசரமாக இழுத்துச் சென்றார் குரு தேவர்.

தண்டனையாக அமரதத்தனுக்கு ஐந்நூறு அடிகள் கொடுத்தார்.

ஆசிரியரிடம் அடிபட்டதை அமரதத்தனால் மறக்கவே முடியவில்லை. நெஞ்சில் ஒரு முள்ளாக இந் நிகழ்ச்சி அவனை உறுத்திக் கொண்டே இருந்தது. குருநாதரைப் பழி வாங்கக் காலத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தான்.

ஆண்டுகள் பல கடந்தன. அமரதத்தன் காசிப்பட்டணத்தின் அரசனாக முடிசூட்டப்பட்டான்.

ஒரு நாள் முத்துப் பல்லக்கு ஒன்று போதிசத்துவரின் பர்ணசாலைக்கு வந்தது.


அமரதத்தனின் அழைப்பை ஏற்று அவர் அரண்மனைக்குப் புறப்பட்டார்.

எப்படிச் சேருவது?

பெரியவர்: ஓடும் காரிலே ஏறுவது தப்பு தம்பி.

பையன்: அப்படின்னா... ஓடாத காரில் ஏறினால்.. எப்படிப் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவது?

-சேலம் புவனேஸ்வரி



கொலு மண்டபத்தில் தன் குருநாதரைத் தனி ஆசனத்தில் அமர்த்தி வைத்தான் அமரதத்தன்.

''குருநாதரே! ஒரு நாள் வேர்க்கடலையை எடுத்துத் தின்றதற்காக என்னை அடித்து அவமானப்படுத்தினீரே நினைவிருக்கிறதா? அதற்காக இப்போது உங்களைத் தூக்கிவிடப் போகிறேன்! என்ன சொல்கிறீர்கள்?''

அரசனின் சிறுபிள்ளைத் தனமான பேச்சைக் கேட்டுப் போதிசத்துவர் அதிர்ச்சி அடைந்தார். என்றாலும் குரு தேவர்ஒருவாறு சமாளித்தவாறே பேசத் தொடங்கினார்.

''அமரதத்தா! ஆத்திரத்தால் அறிவிழந்து விடாதே! அன்று உன்னை நான் அடித்துத் திருத்தாமல் விட்டிருந்தால், இன்று நீ அரசனாகியிருப்பாயா? எண்ணிப் பார்! நீ அரசன் மானாயிற்றே:உன்னை அடித்துத் திருத்தக் கூடாது என்று நான் இருந்திருந்தால் இன்று நீ கொள்ளைக்காரனாக — கொடிய வஞ்சகனாக — கொலைகாரனாகத்தான் மாறி இருப்பாய்?

''குரு துரோகம் பொல்லாதது; குருவைக் கொன்றவன் என்ற கொடும் பழிக்கு ஆளாகாதே!

''தான் செய்த தவற்றுக்காகத் தண்டிக்கப்பட்ட நல்லவர்கள், தண்டனையை உணர்ந்து, தவற்றுக்காக வருந்தித் திருந்துவார்கள்.

''உனக்கு ஞானம் வழங்கியதற்காக என்னைக் கொலை செய்யப் போகிறாய் என்றால், அந்தச் சாவை நான் வரவேற்கிறேன் அமரதத்தா!''

குணமென்னும் குன்றேறி நின்ற போதிசத்துவர் குமுறும் எரிமலையானார். மனக் கொதிப்பை எரிமலைக் குழம்பாகக் கொலு மண்டபத்தில் பாய விட்டார்.

புயலுக்குப் பின் நிலவும் அமைதி அப்பொழுது அரசவையை ஆட்சி செய்தது.

ஆசிரியரின் சொல் வீச்சுக்கள் ஆயிரம் அம்புகளின் வீச்சாக அமரதத்தனின் நெஞ்சைக் குத்திக் கிழித்தன.

அமரதத்தன் அரியணைப் படிகளை வேகமாகக் கடந்து வந்தான்.

தன்னுடைய அறிவுக் கண்களைத் திறந்த ஆசானின் திருவடி முன் மண்டியிட்டான்.

போதிசத்துவர் அமரதத்தனை மார்புற அணைத்துக் கொண்டார்.

அன்று முதல் அமரதத்தனின் ராஜ குருவாகி போதிசத்துவர் அவனை நல்வழிப்படுத்தினார்.





ரவியின் அக்காவுக்கும் அத்தானுக்கும் இதுதான் தலை தீபாவளி. அக்கா போன வாரமே வந்து விட்டாள். 'ஆபீஸ் வேலை அதிகம். எப்படியும் தீபாவளியன்று அதிகாலையில் வந்து சேருவேன்' என்று அத்தான் சொல்லி அனுப்பியிருந்தார். மணி ஏழு ஆகியும் அவர் வந்தபாடில்லை. வீதியையும் கடிகாரத்தையும் ரவி மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ரவியின் அப்பா நாலு மணிக்கே எழுந்து பஸ் ஸ்டாண்டுக்குச் சென்றார். இன்னும் வரவில்லை.

''பாவம், நீயும் அதிகாலையிலே எழுந்து எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சுட்டு எதுவும் சாப்பிடாமல் அத்தானை ஆவலா எதிர்பார்க்கிறாய்... சரி, இந்தா ஒரு ரூபாய். கடைக்குப் போய் இலை வாங்கி வா'' என்கிறாள் அக்கா.

நெய்க் காராபூந்தி

கதை: ஏ.ஸ்ரீ. சித்திரம்: ஜெயந்தி






சரியாக மணி ஏழரை. மாப்பிள்ளை மாமனார் வீட்டுக்குள் நுழைகிறார். 'முகப்பில் யாரையுமே காணோமே! சரி, எல்லோரும் பின் பக்கம் இருக்கலாம்' என்று நினைத்து நாற்காலியில் உட்காருகிறார்.

'இது என்ன! கமகமன்னு வாசனை வருதே!... இதோ இந்த அறையிலேயிருந்துதான் வருது!... இப்போ யாரும் வரல்லியே!' என்று சுற்று முற்றும் பார்க்கிறார்.

அறைக்குள் நுழைந்ததும் ''ஆஹா! எத்தனை வகைப் பலகாரங்கள்!... அடடே! அதோ எனக்குப் பிடித்த நெய்க் காராபூந்தி! ஒரு கை பார்க்கலாம்... ஒரு கை என்ன, இரு கைகளையுமே போட்டு அள்ளலாம்; வாய்க்குள் தள்ளலாம்'' என்று அள்ளுகிறார்.



காராபூந்தியை அவர் வாய்க்குள் திணித்ததும் வெளியில் ஏதோ சப்தம் கேட்கிறது. உடனே, மெல்ல வெளியில் வந்து நல்ல பிள்ளை மாதிரி நாற்காலியில் உட்காருகிறார். வாயில் போட்ட காராபூந்தியை வயிற்றுக்குள் தள்ளப்பார்க்கிறார். வாய் நிறைய இருக்கிறதே! எப்படி முடியும்?



அப்போது மாமனார் உள்ளே நுழைகிறார். ''அடடே, மாப்பிள்ளை இங்கே உட்கார்ந்திருக்கீங்களா? உங்களுக்காக பஸ் ஸ்டாண்டிலே இரண்டு மணி நேரமாக் காத்திருந்தேன். நீங்க வழியிலே இறங்கிக் குறுக்கிலே சுருக்கா வந்திருக்கணும். அப்படித்தானே?'' என்று கேட்கிறார். மாப்பிள்ளை எப்படிப் பதில் சொல்லுவார்? வாய் நிறையத் தான் காராப்பூந்தி இருக்கிறதே!



'என்ன மாப்பிள்ளை! பதிலே இல்லே'' என்று கேட்டுவிட்டு மாப்பிள்ளையின் முகத்தைப் பார்க்கிறார். உடனே, ''அடடே, இது என்ன! இந்தக் கன்னம் வீங்கியிருக்குது!... ஐயையோ! அந்தக் கன்னமும் வீங்கியிருக்குதே! பொண்ணுக்கு வீக்கமா?'' என்று அலறுகிறார் மாமனார்.

மாப்பிள்ளை ஆஞ்சநேயர் மாதிரி—ஒத்தூதுகிறவர் மாதிரி வாயை வைத்



துக்கொண்டு மௌனமாக இருக்கிறார்.

''ஐயோ! லட்சுமி! சாந்தி! இங்கே வந்து மாப்பிள்ளையின் கன்னத்தைப் பாருங்களேன். பூரி மாதிரி உப்பியிருக்குதே!'' என்று கதறுகிறார் மாமனார்.

ரவியின் அம்மா லட்சுமியும், அக்கா சாந்தியும் ஓடிவந்து, பார்த்துத் திடுக்கிடுகிறார்கள். 'ஓ'வென்று கூச்சலிடுகிறார்கள்.



கூச்சலைக் கேட்டுப் பக்கத்து வீட்டுக்காரரெல்லாம் வந்து கூடிவிடுகிறார்கள்.

''இதோ நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்'' என்கிறார் மாமனார்.

''டாக்டர் எதுக்கு? மந்திரிக்கிற மன்னார்சாமியைக் கூப்பிடுங்கோ'' என்கிறாள் ஒரு பாட்டி.

''அதெல்லாம் எதுக்கு? பச்சிலை மருந்தை அரைத்துத் தடவினால் வீக்கம் பறந்து போயிடும்'' என்கிறாள் இன்னொரு அம்மா.



இலை வாங்கப் போன ரவி திரும்பி வருகிறான்.

''ஹய்யா அத்தான் வந்தாச்சு! ஏன் அத்தான் இவ்வளவு லேட்?'' என்று கேட்கிறான்.

''டேய், அத்தானைத் தொந்தரவு பண்ணாதே! பாவம், அவர் கன்னம் ரெண்டும் வீங்கிக் கஷ்டப்படுகிறாரு'' என்று எச்சரிக்கிறார் அவன் அப்பா.

''ஐயோ! அத்தானோடை குஷியாச் சாப்பிடலாம்னு இருந்தேனே! இப்படி ஆயிடுச்சே!'' என்று வருத்தப்படுகிறான் ரவி.



'' சரி, எவ்வளவு நேரம் பட்டினி கிடக்கிறது! ஏதாவது சாப்பிடலாம்'' என்று அறைக்குள் நுழைகிறான் ரவி.

''அட, இது என்ன! நெய்க் காரா பூந்தியைக் கோபுரம் மாதிரி அம்மா கொட்டி வச்சிருந்தாளே! அதிலே ஒரு பெரிய பள்ளம் இருக்கிறதே!'' என்று கூறி, யோசனையில் ஆழ்ந்து விடுகிறான் ரவி.



''ம்... புரிஞ்சு போச்சு. நல்லாப் புரிஞ்சு போச்சு... அதுதான் ஆஞ்சநேயர் மாதிரி 'உம்'முன்னு மூஞ்சியை வச்சிருக்காரா நம்ம அத்தான்! இதோ இப்பவே குட்டை வெளிப்படுத்துகிறேன்!'' என்று கூறிக் கொண்டே வெளியில் ஓடி வருகிறான்.



ஓடிவந்த ரவி, அத்தானின் அருகிலே செல்கிறான். அவருடைய மூக்கைக் 'கப்' பென்று கெட்டியாகப் பிடித்துக்கொள் கிறான். அத்தான் ரவியின் கையைப் பிடித்துத் தள்ளப் பார்க்கிறார். ரவி விடவில்லை. மூக்கைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறான். மூச்சு விட வேறு வழி யில்லாததால், அத்தான் வாயைத் திறக்கிறார். 'ஹா..ஹ..ஹா!' காராபூந்தி வெளியே வந்து விழுகிறது.



''அடடா, காராப்பூந்திதான் வாய்க் குள்ளே இருந்ததா? பயந்தே போயிட் டோம்.!'' என்று எல்லோரும் ஒரே சமயத்தில் அலறுகிறார்கள்.

''மாப்பிள்ளைக்கு நெய் காராபூந்தி பிடிக்கும்னுதானே ஒரு பெரிய சட்டி நிறையச் செய்து வச்சேன். அவசரப் பட்டுட்டாரு'' என்கிறாள் மாமியார்.



''என்னைத் தனியே விட்டிருந்தால் எப்பவோ ஓழே துப்பியிருப்பேன். ஆனா நீங்கதான் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகராமே என்னைச் சுத்தி உட் கார்ந்துட்டீங்களே!'' என்று வாயி லிருந்த காராபூந்தி வெளி வந்ததும் மாப்பிள்ளை கூறுகிறார்.

''அதனாலேதான் துப்பவும் முடி யாம, விழுங்கவும் முடியாம அத்தான் விழிச்சுக்கிட்டிருந்திருக்கிறாரு'' என் கிறான் ரவி.



''ரவி, நீ கெட்டிக்காரன்தான்டா. ஒண்ணு மூக்காலே மூச்சு விடணும்: இல்லே வாயாலே மூச்சு விடணும். இதை நல்லாத் தெரிஞ்சுதான் என் மூக்கைப் பிடிச்சு, வாயைத் திறக்க வச்சுட்டாய்'' என்று ரவியைப் பாராட் டுகிறார் அத்தான்.

''சரி, வாங்க அத்தான். குளிச்சுட்டு நெய்க் காராப்பூந்தியை ஒரு கை... ரெண்டு கை ஆடத்து! ஒரு கை பார்க் கலாம்'' என்கிறான் ரவி.



பாமாக்கண்ணு

ஆண்டாள் பிரியதர்சினி

'குப்புசாமி அப்புசாமி'யைத் தொடர்ந்து 'அய்யாசாமி அழகு சாமி' கவிதை வெளியிட்டது கண்டேன். இரண்டிலும் ஆண்களே பாத்திரங்களாக வந்ததால் இப் பாடலை எழுதி யனுப்பியுள்ளேன்!

பாமாக் கண்ணு:

கோமாக் கண்ணு! கோமாக் கண்ணு!
கோயில் செல்வோமா? — சாமி
கும்பிட் டேதான் சுண்டல் வாங்கிக்
குதூக லிப்போமா?

கோமாக்கண்ணு:

பாமாக் கண்ணு! ஒளியும் ஒலியும்
பார்க்கப் போகிறேன்! — சுண்டல்
பாட்டி வாங்கிக் கொண்டு தருவாள்!
பார்! நான் தின்கிறேன்!

பாமாக்கண்ணு:

சுண்டல் பாட்டி தருவாள் என்று
சொல்கின் றாயேநீ! — நேரில்
துதிக்கச் சென்றால் இறைவன் அருளைப்
பெறலாம் அல்லவா?

கோமாக் கண்ணு:

கண்டு நேரில் வணங்கச் சென்றால்
கால்கள் வலிக்குமே! — ஒளிஒலிக்
காட்சி வெள்ளிக் கிழமை தோறும்
கண்டால் இனிக்குமே!

(ஒரு மணி சென்ற பின்)

பாமாக் கண்ணு:

சென்று வணங்கித் திருநீறு உனக்கும்
சேர்த்து வாங்கினேன்! — சுண்டல்
தின்னு முன்னே விபூதி பூசு,
திரைப்படம் பார்த்தவளே!

கோமாக்கண்ணு:

நன்று; நன்று! கரண்ட் இல்லாமல்
நான்படம் பார்க்கவில்லை! — இருளில்
நான்இங்கி ருந்தேன்! இறைவனைக்
காணும்
நற்பயன் சேர்க்கவில்லை!

கோமாக்கண்ணு!



பெரிய மனுஷன்

— மகேசுவரி —

சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு முறை ஒலித்துவிட்டு நின்றது. சுரேஷுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக யோசித்துக் கொண்டிருக்கிறான். உருப்படியாக ஒரு 'ஐடியா' வும் தோன்றவில்லை அவனுக்கு.

''சுரேஷ்!'' என்றழைத்தபடி வந்துவிட்டான் வரதன்.

''காசு கிடைக்கலே வரதா. எங்கம்மா திட்டறாங்க...'' அழாத குறையாகச் சொன்னான் சுரேஷ்.

''உங்கம்மாவிடம் எதுக்குன்னு சொல்லிக் கேட்டாய்?'' மெதுவான குரலில் கேட்டான் வரதன்.

''சினிமாவுக்குப் போகணும் என்றுதான் சொன்னேன்...''

''வடிகட்டின முட்டாள்டா நீ! 'சினிமாவுக்குப் போகணும்' என்று சொல்லிக் கேட்டால், எந்த அம்மாவாச்சும் காசு கொடுப்பாங்களா?'' சிரித்தான். வரதன்.

''பரீட்சை முடிந்ததும் எங்கம்மா, நான் கேட்காமலேயே கொடுத்தாங்களே...?''

''பரீட்சை முடிந்து ஒரு வாரம் கூட ஆகல்லேயே...! இதற்குள் இன்னொரு சினிமாவுக்கு அனுப்புவாங்களா?''

''உனக்குக் காசு கிடைத்ததா வரதா?''

''ஓ! இதோ பார்...'' இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றைச் சட்டைப் பைக்குள்ளிருந்து வெளியே எடுத்துக் காட்டினான் அவன்.

''உன் அம்மா ரொம்ப நல்லவங்களா இருப்பாங்க போலிருக்கு! நீ கேட்ட போதெல்லாம் காசு கொடுக்கிறாங்களே...?''

''கேட்கிறபடி கேட்டால், எல்லா அம்மாவும் கொடுப்பாங்களடா சுரேஷ்! உனக்குக் கேட்கத் தெரியவில்லை...''

''நீ எப்படிக் கேட்டாய்? கொஞ்சம் சொல்லேன்...?'' என்று கெஞ்சினான் சுரேஷ்.

''வீட்லே நிறைய 'ஹோம் ஒர்க்' செய்யச் சொல்லிக் கொடுத்திருக்கிறாங்க. கணக்கு நோட்டும் சயன்ஸ் நோட்டும் தீர்ந்து போச்சு. வேறு வாங்கணும்.... காசு கொடும்மா என்று கேட்டேன். 'டக்' என்று எடுத்துக் கொடுத்தாங்க...'' பெருமிதம் பொங்கச் சொன்னான் வரதன்.

''அப்புறமா 'நோட்டு எங்கே?' என்று கேட்டால்...?''

''ராமு வீட்டில் இருக்கிறது. சீனு வாங்கிக் கொண்டு போயிருக்கான் என்று கதைவிட வேண்டியதுதான்! இது கூடவா உனக்குத் தெரியாது?'' கேலி செய்தான் வரதன்.

''கொஞ்சம் இருடா...'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனான் சுரேஷ்.

திரும்பி வந்த போது அவன் கையிலும் ஒரு இரண்டு ரூபாய் நோட்டு இருந்தது.

''எப்படிடா...?'' ஆச்சர்யத்துடன் கேட்டான் வரதன்.

''எங்கப்பாவிடம் போய் நீ சொன்ன மாதிரியே நான் கேட்டேன். உடனே எடுத்துக் கொடுத்து, 'வெய்யிலில் அலையாமல் 'ஹோம் ஒர்க்'கை எல்லாம் ஒழுங்காகச் செய்து முடி.' என்று சொன்னார்டா.''

''சரி வா, போகலாம்'' என்றான் வரதன்.

இச்சமயம் வேலைக்காரப் பையன் வேலு அழுது சிவந்த முகத்துடன் சோர்வாக நடந்து வந்தான்...அங்கே.

''என்னடா வேலு...?'' என்று விசாரித்தான் சுரேஷ்.

''ரெண்டு நாட்களாகச் சாப்பாடு இல்லே. பசிக்குது...'' என்று கூறிய வேலு 'ஓ'வென்று அழுதான்.

''உள்ளே போய் அம்மாவிடம் கேட்பதுதானே?''

''கேட்டேன். பழைய சோறுகூட மிச்சம் இல்லேயாம். அட்வான்ஸாச்சும் ஒரு ரூபாய் கொடுங்க... சம்பளத்திலே பிடிச்சுக்குங்கன்னு கூடக்கேட்டுப் பார்த்துட்டேன். சில்லறை இல்லேயாம். நூறு ரூபாய் நோட்டாக இருக்காம்...'' திக்கித் திணறிச் சொன்னான் வேலு.

''நேரயாச்சுடா சுரேஷ். வா, போகலாம்...'' என்று அவசரப்படுத்தினான் வரதன்.

''சுரேஷ்! அங்கே வேலு இருந்தால் கூப்பிடு'' என்று உள்ளேயிருந்து குரல் கொடுத்தபடியே வந்தாள் அம்மா.



எருமையின் குழந்தைகள்!

உலகிலேயே மிகக் குறைவான எண்ணிக்கை உள்ளவர்கள் நீலகிரி மலையில் வாழும் தோடர்கள் இனமே யாகும்.

இவ்வினத்தவர் இன்று ஏறத்தாழ முந்நூறு பேர்களே இருக்கின்றனர். இவர்களுள் ஆண்களை விடப் பெண்களே அதிகமாக உள்ளனர்.

இத்தோடர் இன ஆதிவாசிகளுக்கு 'எருமையின் குழந்தைகள்' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

தோடர்களின் செல்வமே எருமை தான். தோடர் ஒருவர் எத்தனை எருமை வைத்திருக்கிறார் என்பதைப் பொருத்து, அவரது செல்வாக்கும் செல்வமும் மதிப்பிடப் படுகின்றது. தோடர்களின் வாழ்வே எருமையைச் சுற்றித்தான் அமைகின்றது. மணமக்களுக்குச் சீதனப் பொருளாக வழங்குவதும் எருமையையே!

தகவல்: இ.பொ. நடராஜ்

''வேலு! அம்மா கூப்பிடறாங்க'' என்றான் சுரேஷ்.

வேலு அம்மாவின் அருகில் வந்தான்.

''இந்தாடா வேலு! இதில் இரண்டு கிலோ சீயக்காய் இருக்குது. மிஷினுக்கு எடுத்துப் போய் அரைத்துக் கொண்டு வா. இந்தா அரைவைக் கூலிக்குப் பணம். கிலோவுக்கு இரண்டரைரூபாய். இரண்டுகிலோவுக்கு ஐந்து ரூபாய். இந்தா'' என்று கூறி ஒரு ஐந்து ரூபாய் நோட்டை வேலுவிடம் கொடுத்தாள் அம்மா.

பிளாஸ்டிக் பக்கெட்டைத் தூக்கிக் கொண்டு நடந்தான் வேலு.

வரதனுடன் சுரேஷும் சினிமாத் தியேட்டரை நோக்கி வேகமாக நடந்தான்.

தியேட்டருக்கு வெளியே 'க்யூ' ரொம்ப நீளமாக நின்று கொண்டிருந்தது. தெருவின் பிளாட்பாரத்திற்கே வந்து நின்று கொண்டிருந்த 'க்யூ'வின் கடைசியில் போய் நின்று கொண்டனர், சுரேஷும் வரதனும்.

வேலுவும் அவர்கள் பின்னால் வந்து கொண்டிருந்தான்.

''வேலு! நீயும் வரயா?'' என்று கிண்டலாகக் கேட்டான் வரதன். பதில் எதுவும் சொல்லாமல் நடந்தான் வேலு மிஷினை நோக்கி.

''பாவம்டா! அவனைப் போய்க் கேட்கிறாயே! அவனிடம் ஏதுடா காசு?'' என்றான் சுரேஷ்.

''நமக்கே டிக்கெட் கிடைக்குமான்னு சந்தேகமா இருக்குடா'' என்றான் வரதன் கவலையாக.

''போன தடவை இங்கே வந்திருந்த போது கொஞ்சதூரம் தள்ளிப் போய்த்தான் நான் 'க்யூ'விலே இருந்தேன். அப்பவே கிடைத்ததே..! இப்பக் கிடைக்காதா என்ன...?'' என்றான் சுரேஷ் நம்பிக்கையோடு.

''இந்தப் படத்துக்குக் கிடைக்காது தம்பி. முன்னாலே நிற்கிறவர்களில் கிட்டத்தட்டப் பாதிப் பேர் டிக்கட்டுகளை வாங்கி 'பிளாக்'கிலே விற்கப் போகிறவர்கள்தான்.'' க்யூவிலே சுரேஷுக்கு முன்னாலே நின்று கொண்டிருந்த ஓர் அனுபவசாலி உதிர்த்த பொன்மொழி இது.

''இப்ப என்னடா செய்கிறது...?'' கவலை வந்து விட்டது வரதனுக்கு.

''டிக்கட் வேணுமா ஸார் யாருக்காச்சும்?'' - ஒரு வாலிபன் சுரேஷுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தவரிடம் கிசுகிசுத்தான்.

''எனக்கு வேண்டாம்ப்பா! இதோ இந்தப் பசங்களுக்கு வேண்டுமானால் வாங்கிக் கொடு'' என்றார் அந்த ஆசாமி.

''என்ன தம்பி! வேணுமா?'' அந்த வாலிபன் சுரேஷிடம் வந்தான்.

''ஒண்ணு என்பது டிக்கட் என்ன விலை?''

''நான்கு ரூபாய் கூட விற்கும். உனக்கு வேணுமானால் மூன்று ரூபாய்க்குத் தருகிறேன். எத்தனை டிக்கெட் வேணும்? சொல்லு.''

''எங்க கிட்டே ரெண்டு ரூபாய் தான் இருக்கு'' என்றான் வரதன்.

''சாவு கிராக்கியா... சரி வுடு...'' வாலிபன் நகர்ந்தான்.

''அப்ப நாம் படம் பார்க்காமல் திரும்பி விட வேண்டியதுதானடா வரதா!'' — அழுகை வந்து விடும்போல் இருந்தது சுரேஷுக்கு.


''அதோ வேலு மிஷினுக்குப் போய் விட்டுத் திரும்பி வருகிறான். அவனிடம் ஏதாவது காசு இருக்கா என்று கேட்கலாமா?'' என்று அவசரமாகக் கேட்டான் வரதன்.

''இரண்டு கிலோவுக்கு ஐந்து ரூபாய் என்று கணக்குப் பார்த்துத்தான் எங்கம்மா அவனிடம்*கொடுத்திருக்காங்க. அவனிடம் எங்கே இருக்கப் போகிறது'' என்றான் சுரேஷ் அலட்சியமாக.

இதற்குள் வேலு அவர்கள் அருகில் வந்து விட்டான்.

''டேய் வேலு! உன்னிடம் காசு இருக்கிறதா?'' என்று கேட்டான் வரதன்.

''இரண்டு ரூபாய் இருக்கிறது. கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்திடுவேன்'' என்று சொன்னான் வேலு.



''கிலோவுக்கு இரண்டரை ரூபாய் தானே?''

''கரண்ட் கட்டுப்பாடு இருந்தப்போ கிலோவுக்கு இரண்டரை ரூபாய் இருந்துச்சாம். இப்போ கரெண்ட் கட்டுப்பாடு நீங்கிடுச்சாம். அதனாலே கிலோவுக்கு ஒண்ணரை ரூபாய்தான் மிஷின்கார அண்ணே வாங்கிக்கிச்சு. அதனாலே மீதி இரண்டு ரூபாய் திருப்பிக் கொடுத்திடுச்சு.'' என்றான் வேலு.

''இந்த இரண்டு ரூபாயை அம்மாவிடம்திருப்பிக்கொடுக்கப்போகிறாயா?'' ஆச்சரியமாகக் கேட்டான் சுரேஷ்.

''கண்டிப்பாகக் கொடுத்திடுவேன்'' என்றான் வேலு.

''உனக்குப் பசிக்குது என்று சொன்னாயே?''

''சொன்னேன். இப்பவும் பசிக்குது தான்.''

''அப்ப அம்மாவிடம் இந்த ரூபாயைக் கொண்டுபோய்க் கொடுக்காமல் நீ ஏதாச்சும் வாங்கிச் சாப்பிடலாமே... அம்மாவுக்கு எங்கே தெரியப் போகிறது, வேலு?'' என்றான் சுரேஷ்.

''பொய்யா சொல்லச் சொல்றீங்க?'' பதறினான் வேலு.



தங்கை சொன்னது...?

தந்தை: யார் நல்லாப் படிச்சு முதல் 'ராங்க்' வாங்கிறீங்களோ, அவங்களுக்குப் புதுசா ஒரு பேனா வாங்கித்தருவேன்.

மகன்: நான் நல்லாப் படிச்சு நிச்சயம் முதல் ராங்க் வாங்குவேனப்பா.

மகள்: அண்ணாவுக்கு நீங்க கொடுக்கப் போற புதுப் பேனாவையே இரவல் வாங்கி எழுதிக்கிறேனப்பா.

-ஆர். எஸ். சுப்பிரமணியன்

''பசிக்குது ஏதாச்சும் சாப்பிடணும் என்றால் பொய் சொல்லித்தான் ஆகணும். வேறு வழி?'' என்றான் வரதன்.

''மிஷின்கார அண்ணனிடமிருந்து இரண்டு குவளை தண்ணி வாங்கிக் குடிச்சேன். பசி அடங்கிடுச்சு. மறுபடியும் பசிச்சா, தண்ணி கெடைக்காதா என்ன?''

''அப்ப நீ பொய்யே சொல்ல மாட்டியா வேலு?'' வியப்புடன் கேட்டான் வரதன்.

''மாட்டேன்... போயும் போயும் இந்த வயித்துக்காகவா பொய் பேசணும்?''

''நீ பெரிய அரிச்சந்திரன் என்கிற எண்ணம் போலிருக்கிறது உனக்கு!'' கேலி செய்தான் சுரேஷ்.

''அவருக்கு வந்த மாதிரி பெரிய பெரிய கஷ்டமெல்லாம் வந்தால் பொய் பேசிடுவேனோ என்னவோ... எனக்கே தெரியாது. ஆனால், இந்த வயித்துப் பசியைப் போல் உள்ள சின்னச் சின்னக் கஷ்டங்களுக்காக நான் கண்டிப்பாகப் பொய் பேச மாட்டேன். நான் வரேன். நேரமாச்சுன்னு அம்மா திட்டுவாங்க...'' என்றுசொல்லிவிட்டு வேகமாக நடந்து சென்றான் வேலு.

சிலை மாதிரி நின்று கொண்டிருந்தான் சுரேஷ்.

''வேலுவுக்கு, தான் ரொம்பப் பெரிய மனுஷன் என்கிற எண்ணம்டா சுரேஷ்'' என்றான் வரதன் மிக அலட்சியமாக.

''சந்தேகமே இல்லைடா. வயித்துப் பசியைப் போக்கிக்கக்கூட வேலு பொய் பேசவில்லை. நாமோ போயும் போயும் சினிமாப் பார்ப்பதற்காக நம்ப அம்மா - அப்பாவிடம் பொய் சொல்லிக் காசு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறோம். நம்மை விட வேலு கண்டிப்பாக 'பெரிய மனுஷன்' தாண்டா!'' என்று கூறினான் சுரேஷ்.

''என்னடா சொல்கிறாய் சுரேஷ்?'' வரதன் குரல் தடுமாறியது.

''வாடா கடைக்குப் போகலாம்...'' க்யூவிலிருந்து விலகி நடந்தபடி வரதனையும் அழைத்தான் சுரேஷ்.

''கடைக்கா?... எதுக்குடா?''

''நோட் புக் வாங்கி 'ஹோம்' ஒர்க் கெல்லாம் ஒழுங்காகச் செய்யப் போகிறேன். நீயும் வருகிறாயா? இல்லாட்டிப் படம் பார்க்கப் போகிறாயா?'' என்று கேட்டான் சுரேஷ்.

''நானும் வருகிறேன்டா...'' என்று வரதனும் அவனைப் பின் தொடர்ந்து நடந்தான்.

இளமையில் இவர்கள்

பலூன் கேட்ட பையன்

நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கிய அறிஞர் அண்ணாவுக்கு அப்போது ஏழு வயது இருக்கும். சென்னையில் நடந்த பொருட்காட்சியைக் காண அவரை அழைத்துக் கொண்டு அவரது பெற்றோர் காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு ரயிலில் வந்தனர். சென்னை எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் வந்து இறங்கியதும் அங்கே ஒருவர் பலூன் விற்றுக் கொண்டிருந்ததைக் கண்டார் அண்ணாதுரை!

''அப்பா, அப்பா, அதோ பலூன்! எனக்குப் பலூன் வேணும்!'' என்று ஆசையாகக் கூறினார். ஆனால், அவருடைய அப்பா, ''அதெல்லாம் வேண்டாம். நேரமாகி விட்டது. பொருட்காட்சிக்குப் போகலாம், வா!'' என்று கூறினார்.

அண்ணாதுரை நகரவில்லை. அழுது அடம் பிடித்தார். ''பலூன் வேணும். பலூன்! பலூன்!'' என்று திரும்பத் திரும்பக் கூறினார்.



அச்சமயம் அங்கு வந்த ஒருவன், அவருடைய அப்பாவிடம், ''பாவம், பிள்ளை அழுகிறது. ஒரு பலூன் வாங்கித் தரக் கூடாதா? பிள்ளையைக் காட்டிலும் பணமா பெரிது?'' என்று கூறிவிட்டு,

''வாடா தம்பி, உனக்கு நான் பலூன் வாங்கித் தருகிறேன்'' என்று கூறி அண்ணாதுரையைத் தூக்கிக் கொண்டு பலூன்காரன் சென்ற திசையிலே சென்றான்.

அந்த ஆள் திருடன் என்பதும், அவன் அண்ணாதுரையின் கழுத்தில் மின்னிய தங்கச் சங்கிலியைத் திருடுவதற்காகவே அப்படி நடித்தான் என்பதும் அவரது பெற்றோருக்குத் தெரியவில்லை.

கூட்டத்தில் மறைந்த அந்த ஆள் குழந்தையைப் புகைவண்டி நிலையத்தில் இருந்த ஒரு மறைவான இடத்திற்குக் கொண்டு சென்று, சங்கிலியைக் கழற்ற முயன்றான். அண்ணாதுரை உடனே உரத்த குரலில், 'அப்பா! அம்மா!' என்று கூவி அழைத்தார். சப்தம் கேட்டுப் பக்கத்திலிருந்தவர்கள் திருடன் சங்கிலியைக் கழற்றுவதற்கு முன் ஓடி வந்தார்கள். திருடன் அண்ணாதுரையை அங்கே விட்டு விட்டுத் 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று ஓடிவிட்டான்!

சிறுவயதிலே அண்ணாதுரை குடுமி வைத்திருந்தார். பள்ளிக்குச் செல்லும் போது அவருடைய குடுமியை எண்ணெய் போட்டு நன்றாகச் சீவிமுடித்து அனுப்புவார்கள்.

பள்ளியில் அவருடன் படித்த மாணவர்கள் எல்லோருமே கிராப் வைத்திருந்தார்கள், அண்ணாதுரையைத் தவிர. அதனால் அவரை மற்ற மாணவர்கள் கேலி செய்து வந்தார்கள்..

அந்த ஆண்டு பள்ளியில் நடந்த பரீட்சையில் அவர் எல்லாப் பாடங்



அறிஞர் அண்ணா



பகத்சிங்



ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்

களிலும் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் வாங்கியிருந்தார். அவர் பெற்றிருந்த மதிப்பெண்களைக் கண்டு, அவருடைய சிற்றன்னை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். சிற்றன்னைக்கு எப்போதுமே அவரிடத்தில் மிகுந்த அன்பு உண்டு.

இதுதான் தக்க சமயம் என்று நினைத்த அண்ணாதுரை, ''நான் படிப்பிலே கெட்டிக்காரனாயிருந்தாலும் என்னை எல்லோரும் கேலி செய்கிறார்கள்'' என்றார் வருத்தத்தோடு.

''எதற்காகக் கேலி செய்கிறார்கள்?'' என்று கேட்டார் சிற்றன்னை.

''பள்ளிக்கூடத்திலே எல்லாரும் கிராப் வைத்திருக்கிறார்கள், நான் ஒருவன் தான் குடுமி. நானும் கிராப்பு வைத்துக் கொண்டால் என்ன?''

''அடடே, இதற்காகவா வருத்தப்படுகிறாய்? இதை நீ முன்பே சொல்லியிருக்கலாமே! ... சரி, இனி உனக்குக் குடுமி வேண்டாம். கிராப் வைத்துக் கொள்'' என்றார் சிற்றன்னை.

மறுநாளே அண்ணாதுரையின் குடுமித்தலை கிராப்புத் தலையாக மாறியது! மாணவர்களின் கேலிப் பேச்சும் மறைந்தது!


சிறிய வயதிலே தேசப்பற்று!

நம் தேச விடுதலைக்காகப் பாடுபட்டு, 24—வது வயதிலே தூக்கில் இடப்பட்டவர் பகத்சிங். அவர் பிறந்தபோது, அவருடைய தந்தையாகிய கிருஷ்ணசிம்மன் சிறையிலே இருந்தார்.

எதற்காக அவர் சிறைப்பட்டார்?

ஆங்கிலேயரை எதிர்த்துப் பஞ்சாபில் புரட்சி நடந்தது. அப்புரட்சியில் ஈடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்தான் பகத்சிங்கின் அப்பாவாகிய கிருஷ்ணசிம்மன். அவர் மட்டுமல்ல: அவருடைய சகோதரரான அஜித் சிம்மனும் அந்தப் புரட்சியிலே ஈடுபட்டு, நாடு கடத்தப்பட்டு, பர்மாவிலே இருந்தபோது, இறந்துபோனார்.

கிருஷ்ணசிம்மன் சிறையில் அடைக்கப்பட்டபோது, அவரது மனைவி பூரண கர்ப்பிணியாக இருந்தாள். சில நாட்களில் அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த செய்தியைக் கேள்விப்பட்ட கிருஷ்ணசிம்மன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அத்துடன், ''என் மகன் தன் மலர் போன்ற கைகளால் பாரத மாதாவின் கண்ணீரைத் துடைப்பானாக! பாரத மாதாவின் கால்களில் பூட்டப்பட்ட விலங்கைத் தகர்த்து எறிவானாக!'' என்று சொல்லியும் அனுப்பினார்.



குழந்தை பிறந்து பல மாதங்கள் சென்ற பிறகே அவர் விடுதலை அடைந்தார். மகனைக் கண்டு மகிழ்ந்தார். ஆயினும், அவர் குழந்தையுடன் கூடியிருந்த நாட்கள் மிகக் குறைவே. அடிக்கடி அவரை ஆங்கிலேயர் சிறையிலே அடைத்துத் துன்புறுத்தி வந்தார்கள்.

பகத்சிங் பள்ளியில் படிக்கும்போது மிக அடக்கமாக இருப்பார். 'பரம சாது' என்ற பெயரைப் பெற்றார். படிப்பிலே அதிகமாக அக்கறை செலுத்துவார். நம் நாட்டு வரலாற்றை மிகவும் ஆர்வமாகப் படிப்பார். அடிமைப்பட்டிருந்த சில நாடுகள் எவ்வாறு விடுதலை பெற்றன என்பதையெல்லாம் ஊன்றிப் படித்துத் தெரிந்து கொள்வார்.

பகத்சிங் 13 வயதுப் பையனாக இருந்தபோதே, அவருக்குத் தேச பக்தி அதிகமானது. தேச விடுதலைக்குத் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார். பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, விடுதலைப் போரில் குதித்தார். தேசத்தைப் பற்றியே எந்நேரமும் சிந்தித்தார்.

ஒருநாள் அவர் கோட்டையில் பறந்து கொண்டிருந்த ஆங்கிலேயரின் கொடியைப் பார்த்தார். உடனே அங்கே நின்று, ''ஏ, ஆங்கிலக் கொடியே, இது எங்களுடைய நாடு. இந்தக் கோட்டை எங்களுடைய கோட்டை. எங்களுடைய கோட்டையில் எங்கள் நாட்டுக் கொடிதான் பறக்க வேண்டும். அந்நியக் கொடி

யாகிய நீ பறக்கலாமா? இனியும் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். விரைவிலே நீ கீழே இறக்கப்படுவாய். நீ இருக்கும் இடத்தில் என் தாய் நாட்டுக் கொடி தலைநிமிர்ந்து பறக்கும்'' என்று வீரமுடன் கூறினார்.

அப்போது அவர் கூறியது 1947-ஆம் ஆண்டு பலித்துவிட்டது! ஆனால், அந்தக் காட்சியைக் காண்பதற்கு முன்பே வெள்ளையர்கள் அவரைத் தூக்கிலிட்டு விட்டனரே!

புகழ்தேடிப் புறப்பட்ட சிறுவன்!

குழந்தைகளுக்காக நூற்றுக்கணக்கான சிறுகதைகளை எழுதியவர் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன். அவர் எழுதிய கதைகள் இதுவரை சுமார் 120 உலக மொழிகளில் வெளிவந்திருக்கின்றன!

ஆண்டர்சன் பிறந்தது டென்மார்க் தேசத்திலுள்ள ஒடென்ஸ் என்ற ஊரில். அவருடைய அப்பா செருப்புத் தைத்தும், அம்மா துணி வெளுத்தும் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்கள். அவர்களுக்கு ஆண்டர்சனை நன்றாகப் படிக்க வைத்து, நல்ல வேலையில் அமர்த்த வேண்டும் என்ற ஆசை. ஆனால், ஆண்டர்சனுக்கோ, படிப்பிலே கவனம் செல்லவில்லை. அவருடைய அப்பா செய்து கொடுத்த ஒரு பொம்மை நாடக மேடையில் சில பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருப்பார்.


அந்தப் பொம்மை நாடக மேடையில் ஒரு நாடகம் நடப்பது போலவும், அந்த நாடகத்தில் பொம்மைகள் நடிப்பது போலவும் கற்பனை செய்து கொள்வார். நாடகத்திற்கு வேண்டிய வசனம், பாடல்கள் எல்லாவற்றையும் அவரே தயார் செய்வார். இப்படியே அவரது கற்பனை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்தது.

ஆண்டர்சனுக்குப் பதினான்கு வயதான போது அவருடைய அப்பா இறந்துவிட்டார். அப்பா இறந்த சில நாட்களில் ஆண்டர்சன் தன் அம்மாவிடம் சென்று, ''அம்மா, நான் நம் தலைநகரான கோபன்ஹேகனுக்குப் போகலாமென்று நினைக்கிறேன். அனுமதி கொடு அம்மா'' என்றார்.

''அங்கேபோய் நீ என்ன செய்வாய்?''

''புகழ் தேடி வருவேன்.''

''எல்லாரும் பொருள் தேடப் போவார்கள். நீ புகழ் தேடப்போகிறேன் என்கிறாயே!''



தாயாருக்கு அவரைத் தனியாக அனுப்ப மனமில்லை. தினமும் அம்மாவை நச்சரித்து, ஒருநாள் அனுமதி பெற்றுவிட்டார்.

தலைநகர் சென்றதும், அங்கிருந்த சில நாடகக் குழுக்களில் சேர்ந்து நடிக்க விரும்பினார். ஆனால், எவருமே அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு, அவரே சில நாடகங்கள் எழுதினார்; நாவல்கள் எழுதினார்; கவிதைகள் எழுதினார்.

ஓய்வு நேரத்தில் அக்கம்பக்கத்திலுள்ள குழந்தைகளைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர் கதைகள் சொல்லுவார். எல்லாம் அவரே இட்டுக்கட்டிய கதைகள். அப்படி அவர் கூறி வந்த கதைகளில் சில பத்திரிகைகளில் வெளிவந்தன. குழந்தைகள் அவற்றை விரும்பிப் படித்தார்கள். பெரியவர்களின்பாராட்டும்கிடைத்தது.

அந்தக் கதைகள் பிறகு புத்தகங்களாக வெளிவந்தன. வெளி வந்ததோடு, பல நாடுகளுக்கும் பரவின.

நாளுக்கு நாள் ஆண்டர்சனின் புகழ் பரவியது. ஐம்பது ஆண்டுகள் சென்று அவர் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தபோது அவருக்கு ஊர் மக்கள் அமோகமான வரவேற்புக் கொடுத்தார்கள். பள்ளிகளுக்கெல்லாம் அன்று விடுமுறை! இரவிலே அவருக்குப் பெரிய விருந்து கொடுத்தார்கள். அந்த இரவு முழுவதும், ஊர் முழுவதும் விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. பல நாடுகளிலிருந்து வாழ்த்துச் செய்திகளும், பரிசுப் பொருள்களும் வந்து குவிந்தன!

அம்மாவிடம் கூறியபடி அவர் புகழைச் சம்பாதித்து விட்டார்! அது என்ன, சாதாரணப் புகழா? உலகப் புகழ்!

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



GLC.6-2012 TM

காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றும் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன


வளரும் குழந்தைகளுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச்சத்துக்கள்—அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்: சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ மற்றும் ஸ்ட்ரபெர்ரி—மற்றும் சாதாரகத்திலும் கூட.

திட்டமிட்ட பரிபூரண உணவு

காம்ப்ளான்®

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப்புத்தகம். ''குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி'' 50 பைசா தபால் தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக: தபால் பை நம்பர் 19118, (Comp) பம்பாய் 400 025.



காய்கறிகளும் சட்டி பானைகளும்

மெர்வின்

ஓர் ஊரில் குயவனும் காய்கறி வியாபாரியும் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் கூட்டுச் சேர்ந்து ஓர் ஒட்டகத்தை வாங்கினார்கள்.

தங்களுடைய வியாபாரத்துக்கு ஒட்டகம் மிகவும் உதவியாக இருக்கும் என்று நினைத்தார்கள். தங்களுடைய சரக்குகளை அடுத்த ஊர்ச் சந்தைக்கு ஏற்றிச் செல்வதற்கு ஒட்டகம் மிகவும் பயன்பட்டது.

குயவன், தான் செய்த சட்டி பானைகளை ஒட்டகத்தின் ஒருபுறத்தில் சுமையாகக் கட்டி வைத்தான். காய்கறி வியாபாரி அதே அளவு எடையுள்ள காய்கறிகளை மற்றொரு புறத்தில் ஒரு கூடையில் கட்டி வைத்தான். ஒட்டகத்தை ஓட்டிக் கொண்டு இருபுறமும் அந்த இருவரும் நடந்து சென்றனர்.

வழியில் காய்கறி வியாபாரி ஓர் இடத்தில் நின்று தண்ணீர் குடித்தான். ஒட்டகம் தன் முகத்தைத் திருப்பிக் காய்கறிகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்னத் தொடங்கியது.

இதைக் கண்ட குயவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

'தின்னட்டும். இன்று நன்றாகக் கொழுக்கட்டும். காய்கறி வியாபாரி வந்து பார்த்து அழப் போகிறான்' என்று குயவன் மகிழ்ந்து கொண்டிருக்கையில் காய்கறி வியாபாரி வியர்க்க விறு விறுக்க ஓடிவந்தான்.


''உன் காய்கறி எல்லாம் ஒட்டகத்தின் பசிக்குப் போதவில்லையே!'' என்று குயவன் கூறிக் கை கொட்டிச் சிரித்தான்.

ஆனால் அவன் சிரிப்பு சிறிது நேரம் கூட நீடிக்கவில்லை!

காய்கறிக் கூடையையும் சட்டிப் பானைகளையும் ஒரே கயிற்றால் இணைத்து ஒட்டகத்தின் முதுகிலிருந்து இருபுறமும் தொங்க விட்டிருந்ததால் காய்கறி இருந்த பக்கம் பாரம் இல்லாமல் போய்விட்டது. அப்போது என்ன ஆகும்? ஒட்டகத்தின் மறுபுறத்திலிருந்த பானைகள் சரிந்து தரையில் விழுந்து தூள் தூளாயின!

''பிறருடைய கஷ்டத்தைக் கண்டு மகிழ்பவன், அடுத்தபடியாகத் தனக்கு வரப்போகும் நஷ்டத்திற்கு அழவும் தயாராக இருக்க வேண்டும்'' என்று காய்கறி வியாபாரி குயவனுக்கு எடுத்துச் சொன்னான்.

சரக்கு இல்லாததால் இருவரும் ஒட்டகத்தைத் திருப்பி ஓட்டிக் கொண்டு ஊர் சென்றார்கள்.



இதிகாசப் புதிர்கள்

(1) பாரதத்தில் வரும் கர்ணனைத் தெரியும். இராமாயணத்தில் வரும் கர்ணன் யார்?

(2) இராமயணத்தில் வரும் இரண்டு முக்கிய மான்களைத் தெரியுமா?

(3) இராமாயணத்தில் இரண்டு வரங்களைக் கேட்டவள் கைகேயி. பாரதத்தில் இரண்டு வரங்களைக் கேட்டது யார்?


(4) இராமாயணத்தில் முக்கியமான மூன்று 'கை'?

(5) இராமாயணத்தில் இராமர் வனவாசம் போனது 14 ஆண்டுகள். மகாபாரதத்தில் யார், எத்தனை ஆண்டுகள், என்ன வாசம் போனார்கள்?



விடை: (1) கும்பகர்ணன்; (2) மாயமான், அனுமான்: (3) குந்தி (4) கைகேயி, தாடகை, சூர்ப்பனகை: (5) பஞ்ச பாண்டவர்கள் 12 ஆண்டுகள் அஞ்ஞாத வாசம்

—எம். ஆர். ஸ்ரீப்ரியா (225)
சென்னை-33




வேடிக்கை விளம்பரங்கள்

பக்கத்தில் இருப்பவர்களுக்குக் கேட்காமல், தூரத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே கேட்கக் கூடிய ஒலிபெருக்கி தேவை.
—ஒரு கல்யாண வீட்டுக்காரர்

வகுப்பில் ஆசிரியர் பார்த்தவுடன் பாடப் புத்தகமாக மாறிக் கொள்ளக் கூடிய துப்பறியும் நாவல்கள் தேவை.
— ஒரு மாணவன்

எங்கள் வகுப்பு ஆசிரியருக்கு அன்பளிப்பாகக் கொடுக்க அதிக மார்க்குகளைத்தானாகவே போடும் பேனா தேவை.
—கடைசி 'ராங்க்' மாணவன்

—த. இதயன் (1434) பண்குடி



இனிஷியல் உள்ள ஊர்கள்!

நம் பெயருக்கு முன்னுல்தான் இனிஷியல் போடுகிறோம். சில ஊர்களுக்கு முன்னுலும் இனிஷியல் உண்டே தெரியுமா?

ஆ. முத்துப்பட்டணம்
கா. முத்துப்பட்டணம்
உ. சிறுவயல்
ஓ. சிறுவயல்
வி. களத்தூர்
கை. களத்தூர்
கே. சாத்தனூர்
கே. புதூர்
டி. கல்லுப்பட்டி
பி. கல்லுப்பட்டி
டபிள்யூ. புதுப்பட்டி

—ஆர். நாச்சியப்பன் (75)
திருச்சி-17



டில்லி போகிற மாமா


மாமா: சுப்பு, நான் இன்னிக்கு டில்லிக்கு ஏரோப்ளேனில் போகிறேன். உனக்கு என்ன வேணும்?
சுப்பு: காலையில் என் காத்தாடிக் கயிறு அறுந்து மேலே போயிடுச்சு. அதை எப்படியாவது பிடிச்சுக் கொண்டு வந்திடுங்க மாமா.

—வி. ரமேஷ் (196) சென்னை-18

எது? எது? எது?

(1) விலை கொடுத்து வாங்க முடியாத கார் எது?
(2) கடலில் குளித்தால் சிலருக்கு வரும் தோஷம் எது?
(3) பல் தேய்க்கப் பயன்படும் பல் எது?
(4) காய் கறிகளில் பலவகை உண்டு. நாம் அணியும் காய் எது?
(5) பிள்ளையாருக்குப் பிரியமான கட்டை எது?

விடை: (1) சர்க்கார், (2) ஜல தோஷம் (3) சாம்பல் (4) சொக்காய், (5) கொழுக்கட்டை.



—மு. கா. நெடுமாறன் (660)
காவேரிப்பட்டணம்

எந்தப் பக்கம் போடுவது?

ஆசிரியர்: ஒன்று முதல் பத்து வரை சரியாகத்தான் எழுதி யிருக்கிறாய். ஆனல் பதினென்றுக்கு மட்டும் ஏன் வெறும் 1 என்று போட்டிருக்கிறாய்?
மாணவன்: இன்னொரு ஒன்றை எந்தப் பக்கம் போடுறதுன்னு தெரியல்லே சார்.

சாய் வெங்கடேஷ் (464)
வேலூர்-6




பழைய விடுகதைகள்

(1) ஊசி நுழையாத கிணற்றில் ஒரு படி தண்ணீர். அது என்ன?
(2) ராஜா இல்லாத ராணிக்கு 32 காவலாளிகள். அவர்கள் யார்?
(3) குழிக்குள் விழுந்த குண்டன் சுற்றிக்கொண்டே இருக்கிறான்.
(4) வெள்ளைரோட்டிலே கறுப்புக்காரி அங்குமிங்கும் போகிறாள்.

விடைகள்: (1) இளநீர் (2) பற்கள் (3) ஆட்டுக்கல் (4) கருவிழிகள்

—சு. வெங்கடேஷ் (2953)
திருநெல்வேலி சந்திப்பு



நான்கு 'மை'கள்!

(1) நாம் தினமும் செய்ய வேண்டிய 'மை' எது?
(2) பிறருக்கு எப்பொழுதும் செய்ய வேண்டிய 'மை' எது?
(3) நாம் செய்யக் கூடாத 'மை' எது?
(4) நாம் படிப்பில் அடைய வேண்டிய 'மை' எது?

விடை: (1) கடமை, (2) நன்மை, (3) தீமை (4) முதன்மை.

—எம். வி. பிரகாஷ் (1711)
சென்னை-49





நான் செய்த நல்ல செயல்

நான் பள்ளியிலிருந்து வீடு திரும்பிய போது, எங்கள் வீட்டு வேலைக்காரியின் இரண்டு வயதுக் குழந்தை வராந்தாவில் விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தைக்குப் பின்புறம் ஒரு தேள் ஊர்ந்து கொண்டிருந்தது. குழந்தை ஓரடி பின்னால் நகர்ந்தாலும் தேள் கொட்டி விடும்!

தேளைக்கண்ட நான் உடனே பாய்ந்து சென்று குழந்தையைத் தூக்கி வேறு புறம் விட்டு, அம்மாவைக் கூப்பிட்டுத் தேளை அடிக்கச் சொன்னேன். வேலைக்காரிக்கு மிகவும் மகிழ்ச்சி.

—ரா மது (1121) கோவை-2

எஸ்கிமோ

'எஸ்கிமோ' என்றால் 'பச்சை மாமிசம்' என்று அர்த்தம். மீன், சீல், வால்ரஸ் ஆகிய கடற் பிராணிகளையும், மான்களையும், பறவைகளையும் இவர்கள் பச்சையாக உண்பார்கள். மரக்கறி உணவை அபூர்வமாகவே உண்பார்கள்.


—எஸ். ஜெயஸ்ரீ (1254) திருச்சி-14



ஏன் முடியாது?

பிரசாத்: உலகத்தை அழிக்கவே முடியாது.
கோபு: ஏன் முடியாது?
பிரசாத்: உலகத்தை அழிக்க அவ்வளவு பெரிய ரப்பருக்கு எங்கே போறது?

—யக்ஞராமன் (1433)
காட்டுப்புத்தூர்



அவர்கள் வயது—?

அண்ணன் முரளியும், தங்கை ரமாவும் 'கோகுலம்' சிறுவர் சங்கத்தில் சேர உறுப்பினர் மனுக்களை அனுப்பினார்கள். மனுக்களில் அவர்கள் தங்கள் வயதை நேரடியாகக் குறிப்பிடாமல், புதிர் மூலம் அறிவித்தார்கள்.

முரளிக்கும் ரமாவுக்கும் உள்ள வயது வித்தியாசம் 2. முரளியின் வயதை மூன்றால் பெருக்கினால் முரளியின் அம்மா வயது கிடைக்கும். முரளியின் அம்மா வயதை ஏழால் பெருக்கினாலும் அப்பாவின் வயதை ஆறால் பெருக்கினாலும் வரும் விடை ஒன்றுதான். ஆக நால்வரின் வயதைக் கூட்டினால் மொத்தமாக வரும் விடை 83.

'கோகுலம்' ஆசிரியர், முரளியின் வயதையும், ரமாவின் வயதையும் கண்டுபிடித்து உறுப்பினர் அட்டைகளை அனுப்பினார். நீங்களும் ஒவ்வொருவருடைய வயதையும் கண்டுபிடித்திருப்பீர்களே!

விடை: முரளி வயது 10, ரமா வயது 8, அம்மா வயது 30, அப்பா வயது 35

—பா. நடராஜன் (3218)
சென்னை-88.

பூச்சிக்கடி மருந்து

என் வயதுடைய குழந்தைகளில் சிலர் பூச்சிக் கடிக்கு ஆளாகின்றனர். அவர்களுக்கு என் அம்மா சொல்லித் தந்த மருந்துகளைச் சொல்கிறேன்.

கரப்பான்: கடிபட்ட இடத்தில்



மஞ்சளை அரைத்துச் சுண்ணாம்புடன் தடவுங்கள்.


தேனீ: கொட்டிய இடத்தில் மண்ணெண்ணெய் விட்டுத் தேய்த்தால் போதும்.

தேள்: கொட்டியதும் தேங்காய்ச் சில்லுடன் 2 அல்லது 3 மிளகைச் சேர்த்து மென்று தின்ன வேண்டும். இப்படி 20 மிளகுகள் தின்ன வேண்டும்.

கம்பளிப் பூச்சி: கடிபட்ட இடத்தில் வெற்றிலைச் சாற்றைத் தடவினால் போதும்.

பாச்சை: போரிக் பவுடரில் தேங்காய் எண்ணெய் விட்டுக் குழைத்துக் கடிவாயில் தடவுங்கள்.

—ஜெ. பாலாஜி (3408)) சென்னை-4



என்னடா அதிசயம்?

ராமு: எங்க தாத்தா சட்ட மன்ற உறுப்பினர்டா.

சோமு: ப்பூ. இது என்னடா அதிசயம்? நான் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்டா!

—த. பாபு (1207), காரைக்குடி.




குட்பை

'குட்பை' என்றால் என்ன?

'கடவுள் உன்னோடு இருக்கட்டும்'' (GOD BE WITH YOU) என்ற சொற்களின் சுருக்கம்தான்!

—த. அருள்சிவபாலன் (47)
செங்கல்பட்டு



கேள்வி நேரம்

கேள்வி கேட்பவர்:

டாக்டர் மா. சூடாமணி

பங்குகொள்வோர்:

குமார், சீதாராமன், ராஜேஸ்வரி சுப்பிரமணியம், ஆனந்த்

சூடாமணி: நாம் வசிக்கும் இந்த உலகத்திலே நிலப்பரப்பு அதிகமா? நீர்ப்பரப்பு அதிகமா?

குமார்: நிலப்பரப்புத்தான்.

சூடாமணி: தவறு.

ஆனந்த்: நீர்ப் பரப்புத்தான்.

சூடாமணி: நிலப் பரப்பு இல்லையென்றால் நீர்ப் பரப்புத்தானே! நிலப் பரப்பு சுமார் 5 கோடியே 73 லட்சம் சதுர மைல். நீர்ப்பரப்பு சுமார் 13 கோடியே 74 லட்சம் சதுர மைல். ... காட்மண்டு — இந்தப் பெயரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

சீதாராமன்: எனக்குத் தெரியும். செஞ்சிலுவைச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் பெயர்தான் காட்மண்டு.

ராஜேஸ்வரி: இல்லை. அவர் பெயர் காட்மண்டு இல்லை. ஹென்றி டுனன்ட்.

சூடாமணி: ஒரு குறிப்புத் தருகிறேன். காட்மண்டு ஒரு நாட்டின் தலைநகரம். இப்போதாவது சொல்ல முடியுமா?

சுப்பிரமணியம்: முடியும். நேபாள நாட்டின் தலைநகரம்தான் காட்மண்டு.

சூடாமணி: ரொம்பச் சரி... டில்லி எந்த மாநிலத்தில் இருக்கிறது?

ராஜேஸ்வரி: எந்த மாநிலத்திலும் இல்லை. அதுவே ஒரு மாநிலமாகத் தான் இருக்கிறது.

சூடாமணி: சரியான விடை. முன்பு அது பஞ்சாபின் ஒரு பகுதியாக இருந்தது. 1912ல் அது தனி மாநிலமாக அமைக்கப்பட்டது. இப்போது அது மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருக்கிறது. 'ஐரோப்பாவின் பால் பண்ணை' என்று எந்த நாட்டை அழைக்கிறார்கள்?

குமார்: டென்மார்க் நாட்டை.

சூடாமணி: ஆம். அங்கே தாது வளம் மிகக் குறைவு. ஆனாலும் நிலமும் நீரும் நிறைய உண்டு. கூட்டுறவு முறையில் பால் பண்ணைகளைத் துவக்கி, நிறையப்பால், வெண்ணெய், பாலடைக் கட்டிகளை ஏற்றுமதி செய்கிறார்கள்.... இந்தியாவில் முதல் முதலாகக் கிரிக்கெட் போட்டிப் பந்தயம் நடந்தது எந்த ஆண்டு என்று தெரியுமா?

எல்லோரும்: (மௌனம்)

சூடாமணி: 1907ஆம் ஆண்டு. அதில் ஆங்கிலேயர்கள், பார்சிகள், இந்

துக்கள் மூவரும்சேர்ந்து ஆடினுர்கள். ...'குகன்' என்ற பெயர் யாரைக் குறிக்கிறது?

ராஜேஸ்வரி: இராமர் வனவாசம் போனபோது அவருக்குத் தோழனுக வந்தானே, அவனைத்தான் குறிக்கும்.

சுப்பிரமணியன்: முருகக் கடவுளுக்கும் 'குகன்' என்று ஒரு பெயர் உண்டல்லவா?

சூடாமணி: ஆம். குகன் என்பது இருவரையுமே குறிக்கும் பெயர்தான். இராமர் தன் தம்பியாகக் குகனை ஏற்றுக் கொண்டதை இராமாயணத்தில் படித்திருப்பீர்கள். அடியார்களின் உள்ளம் என்னும் குகையில் முருகன் வசிப்பதால் 'குகன்' என்ற ஒரு பெயரும் அவருக்கு உண்டு... சுவாமி விவேகானந்தர் 39 ஆண்டுகளே வாழ்ந்தார். அவரைப் போல் 39 ஆண்டுகள் வாழ்ந்த ஒரு தமிழ்க் கவிஞரின் பெயர் தெரியுமா?

ஆனந்த்: மகா கவி பாரதியார்.

சூடாமணி: சரியான பதில். நமக்கு மூன்று விதமான பற்கள் இருக்கின்றன. என்ன என்ன வகைப் பற்கள்

சீதாராமன்: வெட்டுப் பற்கள், கோரைப் பற்கள், இன்னென்று... கடைவாய்ப் பற்கள்.

சூடாமணி: கரெக்ட். உணவுப்-பொருட்களை வெட்டுவதற்கு வெட்டும் பற்கள்; கிழிப்பதற்குக் கோரைப் பற்கள்; அரைப்பதற்குக் கடை-வாய்ப் பற்கள்... எல்லா மிருகங்களையும் விட உடம்பிலே கொழுப்பு அதிகமாக உள்ள மிருகம் எது?

ஆனந்த்: யானை.

சூடாமணி: தவறு.

குமார்: காண்டாமிருகம்.

சூடாமணி: அதுவும் இல்லை.

சீதாராமன்: பன்றி.

சூடாமணி: சரியான விடை. பன்றியின்எடையில்பாதிகொழுப்பாகஇருக்கும். அதை உருக்கிச் சுத்தம்செய்து நெய்போலப் பயன் படுத்துகிருர்கள். ...இயேசு கிறிஸ்துவுக்கு அவரது பெற்ருேர் வைத்த பெயர் தெரியுமா

சுப்பிரமணியம்: யோசுவா.

சூடாமணி: ரொம்பக் கரெக்ட். அதையே கிரேக்க மொழியில் ஏசு என்ருர்கள்.... நீர் யானைகள் இப்போது எந்த எந்தக் கண்டங்களில் வாழ்கின்றன?

சீதாராமன்: அமெரிக்கா, ஆஸ்திரேலியா.

சூடாமணி: தவறு. அது ஒரே ஒரு கண்டத்தில்தான் வாழ்கிறது. அது ஆப்பிரிக்காதான்.... நம் தேசத்தில் அதிகமான அளவில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் இடம் எது?

ராஜேஸ்வரி: நெய்வேலி.

சூடாமணி: சரியான் விடை. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில்தான் அதிகமான பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது..... எல்லாமிருகங்களுக்கும் குரல் உண்டு, ஒரே ஒரு மிருகத்தைத் தவிர. அது எந்த மிருகம்?

குமார்: ஒட்டகச்சிவிங்கி.

சூடாமணி: அடடே, குமார் சரியாகச் சொல்லி விட்டானே!... முதல் முதலாக உங்களுக்காகத் தமிழில் வெளி வந்த வாரப் பத்திரிகை எது? அதை நடத்தியவர் யார்?

சுப்பிரமணியன்: 'அணில்' அதை நடத்தியவர் தமிழ்வாணன்.

சூடாமணி: அதன் ஆசிரியரா யிருந்தவர்தான் தமிழ்வாணன் அவர்கள். நடத்தியவர்: 'அணில் அண்ணன்' என்ற பெயரில் எழுதி வந்த வை. கோவிந்தன் அவர்கள். 'வை.கோ.' என்ருல் அநேகமாக எல்லோருக்கும் தெரியும். புத்தகங்கள் வெளியிடுவதில் பல புதுமைகளைச் செய்தவர். பல எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் தோன்ற மிகவும் உதவியவர்... ஜோக் நீர் வீழ்ச்சிக்கு இன்ஞெரு பெயர் உண்டு. என்ன பெயர் தெரியுமா?

ஆனந்த்: ஜெர்சாப்பா நீர்வீழ்ச்சி

சூடாமணி: கரெக்ட். பாரதியார் பாரதத் தாயைப் பற்றிப் பாடும் போது 'முப்பது கோடி முகமுடையாள் எங்கள் தாய்' என்று பாடினுர். அவர் காலத்தில் 30 கோடி மக்கள்தான் நம் தேசத்தில் இருந்தார்கள். இப்போது இந்திய மக்கள் தொகை எவ்வளவு என்று தெரியுமா?


குமார்: 50 கோடி.

சீதாராமன்: இல்லை. நான் சொல்கிறேன். 60 கோடி.

சூடாமணி: 60 கோடியையும் தாண்டி விட்டது. சுமார் 68 கோடியே 30 லட்சம்!...இந்தியாவில் ஒரு மாநிலம் இருக்கிறது. அதில் 5ல் 2 பங்கு மணல் வெளியாகவே அதாவது, பாலைவனமாகவே இருக்கிறது. அது எந்த மாநிலம்?

ராஜேஸ்வரி: இராஜஸ்தான்.

சூடாமணி: சரியான விடை. நம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதல்



முதலாக பி. ஏ. பட்டம் பெற்றார் ஒரு தமிழறிஞர். அவர் யார்?

ஆனந்த்: உ.வே. சாமிநாதய்யர்.

சூடாமணி: இல்லை. வேறு யாருக்காவது தெரியுமா?

எல்லோரும்: (மௌனம்)

சூடாமணி: சரி, நானே சொல்கிறேன். அவர் பெயர் சி. வை. தாமோதரம் பிள்ளை. இலங்கையில் பிறந்தவர். பனை ஓலையிலிருந்து பல நூல்களைப் பதிப்பித்தார். பல நூல்களையும் எழுதித் தந்தார்.... சரி, நம் தமிழ் நாட்டுப்பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருக்கும் ஒருவர், சிறந்த கவிஞராகவும் திகழ்கிறாரே, அவர் பெயர் தெரியுமா?

சுப்பிரமணியன்: எனக்குத் தெரியும். சமீபத்தில் என் அப்பாவுக்குத் தெரிந்த ஒருவருக்கு ஓர் அழைப்புவந்திருந்தது. அதிலே இருந்தது அந்தப் பெயர். அவர்தான் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர். பெயர் வி. சி. குழந்தைசாமி. ஆனால், 'குலோத்துங்கன்' என்ற பெயரில் கவிதை எழுதுகிறார்.

சூடாமணி: அடேயப்பா! இவ்வளவு தூரம் பார்த்து வைத்திருக்கிறாயே! நம் தேசத்தின் தலைநகராகிய டில்லி எந்த ஆற்றங்கரையில் இருக்கிறது?

ஆனந்த்: யமுனை ஆற்றங்கரையில்.

சூடாமணி: தக்க பதில்... தீவு என்றால் என்ன?

குமார்: சுற்றிலும் கடல் இருக்கும்.

சூடாமணி: கடல் இருந்தால் மட்டும்தானா தீவு என்கிறோம்? நாலு பக்கமும் கடல், ஆறு, ஏரி போன்ற நீர்ப் பரப்புகளால் சூழப் பட்டிருப்பது தான் தீவு.... இருளர் என்று சொல்கிறார்களே ஒரு வகைப் பழங்குடிகள், அவர்கள் எங்கே அதிகமாக வசிக்கிறார்கள்?

சீதாராமன்: கோயமுத்தூரிலே.

சூடாமணி: கோயமுத்தூர் நகரிலா?

சீதாராமன்: இல்லை. கோயமுத்தூர் மாவட்டத்திலே.

சூடாமணி விடை சரிதான். இருந்தாலும், 'கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள அட்டப்பாடி மலையில்' என்று சொல்லியிருந்தால் இன்னும் சரியாக இருந்திருக்கும்... இந்தியாவிலே முதல் முதலாகப் பொது மருத்துவ மனை நிறுவப்பட்டது எந்த நகரில்?

ஆனந்த்: டில்லியில்.

சூடாமணி: இல்லை. வேறு யாருக்காவது தெரியுமா?

மற்றவர்கள்: (மௌனம்)

சூடாமணி: நான்தான் சொல்லவேண்டுமா? சென்னையில்தான் முதல் முதலாகப் பொது மருத்துவமனை நிறுவப்பட்டது. முதல் முதலாக நகராட்சி அமைக்கப்பட்டதும் சென்னை நகரில்தான்... சென்னையின் முதல் மேயர் யார் தெரியுமா?

குமார்: தெரியும். செட்டி நாட்டு அரசர் ராஜா சர் முத்தையா செட்டியார்.

சூடாமணி: கரெக்ட்... திருவருட்பா என்ற நூலை இயற்றியவர் யார்?

குமார்: சேக்கிழார்.

சூடாமணி: சேக்கிழார் இயற்றியது 'பெரிய புராணம்'.... வேறு யாருக்காவது தெரியுமா?

ஆனந்த்: நான் சொல்கிறேன். இராமலிங்க அடிகளார்.

சூடாமணி: சரியான பதில்... சமீபத்தில் உலகத்திலேயே மிகப் பெரிய பரிசாகிய நோபல் பரிசை நம் நாட்டு விஞ்ஞானி பெற்றிருக்கிறார். அவர் பெயர் தெரியுமா?

ராஜேஸ்வரி: தெரியும். எஸ். சந்திரசேகர்.

சூடாமணி: சரியாகச் சொன்னாய். இவருக்கு ஏற்கெனவே நோபல் பரிசுபெற்ற ஒருவர் உறவினர் அவர் யார்?

குமார்: சர். சி. வி. ராமன்தானே?

சூடாமணி: ஆம். இவருடைய தந்தையின் சகோதரர்தான் சர். சி. வி. ராமன். அவரும் இவரைப் போல் பௌதிகத் துறையில்தான் பரிசு பெற்றார்.... உலகின் பல்வேறு நாடுகளில் ஒலிம்பிக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன என்பதும் அதில் பல நாட்டைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், அது எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது என்பது தெரியுமா?

ஆனந்த்: ஒவ்வோராண்டும்தானே?

சூடாமணி: இல்லை.

சீதாராமன்: 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை.

சூடாமணி: ஆம். சரியான விடை... மீனும் பாம்பும் தூங்கும்போது கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தூங்குகின்றன. ஏன் அவை நம்மைப் போன்று கண்களை மூடிக் கொண்டு தூங்குவதில்லை?

ஆனந்த்: அவைகளுக்குத்தான் கண் இமைகள் இல்லையே! எப்படி மூடும்?

சூடாமணி: சபாஷ்! சரியான பதில்.

நாடோடிப் பாடல்கள்



கண்ணாடி வளையல்

வளையலோ வளையல்
வளையலோ வளையல்

கண்ணாடி வளையல்
காசுக்கு ரெண்டு
செல்லப் பொண்ணே வந்திடு
சிட்டுக் கையை நீட்டிடு

கைநுறைய அடுக்கிடு
'கலக'லென்னு ஆட்டிடு.

கண்ணு, கண்ணு கருப்பட்டி

கண்ணு, கண்ணு, கருப்பட்டி
கடைக்குப் போனால் தீப்பெட்டி

வீட்டுக்கு வந்தால் வெறும்பெட்டி
தோட்டத் திலே மண்வெட்டி

போத்திக்க வேணும் துப்பட்டி
போறேன் நானும் புதுப்பட்டி

ஏலேலோப் பாட்டு

மண்ணை நம்பி – ஏலேலோ
மரம் இருக்க – ஐலசா
மரத்தை நம்பி – ஏலேலோ
கிளை யிருக்க – ஐலசா
கிளையை நம்பி ஏலேலோ
இலை யிருக்க – ஐலசா
இலையை நம்பி – ஏலேலோ
பூவிருக்க – ஐலசா
பூவை நம்பி – ஏலேலோ
பிஞ்சிருக்க – ஐலசா
பிஞ்சை நம்பி – ஏலேலோ
காயிருக்க – ஐலசா
காயை நம்பி – ஏலேலோ
பழ மிருக்க – ஐலசா
பழத்தை நம்பி – ஏலேலோ
படகுக் காரன் நான் இருக்கேன்

சாயுது

ஆல மரம் சாயுது
அரச மரம் சாயுது
புங்க மரம் சாயுது
புளிய மரம் சாயுது
அடுத்த வீட்டு முருங்கை மரம்
அடியோடு சாயுது!



திருவிளக்குப் பூஜை

அந்தித் திருவிளக்கே,
அலங்கார நாயகியே,
வந்தித்து நின்றேன்நான்.
வந்திடுவாய் ஸ்ரீதேவி.

ஆதித் திருவிளக்கே,
அகிலாண்ட ஈஸ்வரியே,
சோதித் திருவிளக்கே,
சொல்லரிய லட்சுமியே.

கோலத் திருவிளக்கே
கும்பிட்டேன் உன்பாதம்.
பாரம்மா என்முகத்தை
பாராளும் நாயகியே.

தீரம்மா என்குறையை
தேவி தயாபரியே!



புறாவின் கண்ணீர்

மாடப் புறாவே,
மைக்கோழி வம்சமே
அடைக்கும் மழைக்கும்
அடைமழைக்கும் எங்கிருந்தாய்?
பேயும் மழைக்கும்
பெருமழைக்கும் எங்கிருந்தாய்?
கல்லைத் துளைச்சு
கடற்கரையில் முட்டையிட்டேன்
இட்டதெல்லாம் மூணு முட்டை
பொரிச்சதெல்லாம் ரெண்டுகுஞ்சு
இளைய குஞ்சுக்கு இரைதேட
இருகாதம் போய்வந்தேன்
மூத்த குஞ்சுக்கு இரைதேட
முக்காதம் போய்வந்தேன்
காலு ரெண்டும் கள்ளிபட்டு
சிறகு ரெண்டும் பின்னப்பட்டு,
அன்றழுத கண்ணீரே
ஆறாய்ப் பெருகிச்சே!

வாழைக்காய் பொரியல்

ஒரு சீப்பு வாழைக்காய்
உலையிலே போட்ட ரெண்டுகாய்..

சீவத் தெரியாமே
சீமைக்கு அனுப்பினேன்.
சீமையிலே இருக்கிற ராணியம்மா
சீவிக் கொடுத்தாளே!

அரியத் தெரியாமே
ஆரணிக்கு அனுப்பினேன்.
ஆரணியில் இருக்கிற அல்லியம்மா
அரிஞ்சு கொடுத்தாளே!

பொறிக்கத் தெரியாமே
பொன்னேரிக்கு அனுப்பினேன்
பொன்னேரியில் இருக்கிற
பொன்னியம்மா
பொறிச்சுக் கொடுத்தாளே!

தின்னத் தெரியாமே
தெரு ஓரம் கொட்டினேன்
தெருவிலே போற சொறிநாயும்
தின்னத் தயங்குதே!

வெள்ளைப் பசு

மலை ஏறி மேய்ந்துவரும்
மணிக் கழுத்து வெள்ளைப்பசு.

மாலை யிலே வீடுவரும்
மணிக் கழுத்து வெள்ளைப்பசு.


மணி யோசை முந்திவர
மந்தை யுடன் சேர்ந்துவரும்.

கழுத்து மணி ஓசைகேட்டு
கன்று துள்ளும் பால்குடிக்க.



படிக்காத மேதை

கே. ஸ்ரீராம்



புனித நகரமாகிய காசியில் கங்கை நதி அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. பலதரப்பட்ட மக்களின் வெள்ளம் அலைமோதுகிறது. கங்கை நதியின் கரையில் ஒரு வயதான துறவி. அவருடைய ஞானமும், தவமும் முகத்தில் ஜோதியாகச் சுடர் விடுகின்றன. அங்கு நடமாடும் மக்களைப் பார்த்து அவர் கூறிக் கொண்டு இருப்பது, ''அப்பனே! குழந்தைகளே! எல்லாரும் இந்தக் கங்கா நதியில் தலை முழுகிப் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் இதுவரை செய்த பாவங்கள் இன்றுடன் தொலைந்து போகும். இதில் குளித்து விட்டால் புதுப் பிறவி எடுத்தது போல் புனிதமடைவீர்கள்!'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்.

மக்களும் கங்கையில் தலை முழுகினார்கள். பல பெரியோர்களும், சாதாரண மனிதர்களும், நல்லவர்களும், தீயவர்களும், திருடர்களும், கொலை செய்பவர்களும் இப்படி வித விதமான மனிதர்கள் கூடும் இடம் அது.

திடீரென்று முழுகச் சென்ற ஒரு மனிதன் ஆழமான ஓர் இடம் வரை சென்று மீண்டுவர முடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டு தவித்தான்.

அதைப் பார்த்த துறவி, ''அடடா! இவனைக் காப்பாற்ற வேண்டுமே!'' என்று நினைத்தார்.

கூட்டத்தைப் பார்த்து, ''ஐயா! இதுவரை பாபமே செய்யாதவர்கள், தூய்மையானவர்கள் யாராவது இங்கே இருந்தால் உடனே நதியில் குதித்து அந்த மனிதரைக் காப்பாற்றுங்கள்'' என்று வேண்டினார்.

பலரும் யோசனை செய்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரிக் குற்றங்கள் செய்தவர்கள். 'அடடா! நாம் வாழ்க்கையில் இதுவரை எத்தனையோ தவறுகள் செய்து இருக்கிறோமே!' என்று மனம் வருந்தி வெட்கத்தால் தலைகுனிந்தார்கள்.

அச்சமயம் முரடன் போல் இருந்த ஒருவன், சடாரென்று நதியில் குதித்தான். மிகவும் கஷ்டத்துடன் நீந்திச் சென்று ஆபத்தில் இருந்த மனிதனைத் தூக்கி வந்து கரையில் போட்டான். யாவரும் வியப்புடன் அவனையே பார்த்தனர்.

துறவி அவனை நெருங்கி, ''ஏனப்பா! நீ உன் வாழ்க்கையில் இதுவரை எந்தப் பாவமுமே செய்ததில்லையா? உன்னைப் பார்த்தால் கொலைகாரன் போல் தோன்றுகிறதே! நீ ஒன்றும் குற்றம் செய்யாதவன் என்று சொன்னால் யார் நம்புவார்கள்?'' என்று கேட்டார்.


அதற்கு அந்த முரடன், ''சாமீ! நான் படிக்காதவன்தான். கொலை கொள்ளை எல்லாம் செய்தவன்தான். ஆனால் நீதானே சாமி இந்தத் தண்ணியிலே குளிச்சா எல்லாப் பாவமும் போயிடும்னு சொன்னே! இப்ப எங்கிட்ட ஏது சாமி பாவம்?'' என்றான்.

துறவி அவனைக் கட்டிக் கொண்டு ஆசீர்வதித்தார். அங்கிருந்த மக்கள் கூட்டம் தங்கள் அறியாமையை நினைத்து வருந்தியது. படிக்காதவனாக இருந்தாலும் அவனுடைய நம்பிக்கையைக் கண்டு வியந்தார்கள். கடவுள் நம்பிக்கை என்பது இது போல் உறுதியாக இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டார்கள்.

PHILIPS

This 60W lamp gives you as much light as a 100W bulb





Cuts electric bill by Rs. 24

PHILIPS ARGENTA SUPERLUX

The Argenta Superlux has a special frosted window to direct more light where you need it. This concentrated beam makes a 60W Argenta Superlux give as much light as an ordinary 100W bulb.

The Argenta Superlux cuts your electric bill by Rs.24 a year, and lasts longer. The lamp is ideal for studying, painting, sketching, knitting...

Available in 40W and 60W versions.

Philips Argenta Superlux — the 60W lamp with the light of a 100W bulb.

Philips — the trusted Indian household name for over fifty years

தரமும் நிறமும்

சீர்காழி வெங்கடேசன்




சிவப்பு நிறத்தில் ஆலம்பழமும் — நம்
சிந்தை தன்னைக் கவர்ந்தாலும்,
கறுப்புவண்ணத் திராட்சையெனும்-நற்
கனிபோல் உண்ண முடிகிறதோ?


அலரிச் செடிதான் அழகாகும் — அது
ஆளைக் கொல்லும் விஷமாகும்.
துளசிச்செடியில் கவர்ச்சியில்லை—அதன்
துணையால் நீங்கும் சளித்தொல்லை.

தங்கம் உலகில் உயர்வாகும்—அதைத்
தவிர்த்து மனிதர் வாழ்ந்திடலாம்.
எங்கும் இரும்பின் துணை வேண்டும்-அது
இல்லா மல்நம் வாழ்வுண் டா?

வெள்ளை நிறந்தான் சுண்ணாம்பு—நெடி
வீசும் காரம் அதற்குண்டு.
நல்ல கறுப்புக் கஸ்தூரி — எந்
நாளும் தருமே நலம்வாரி!


நிறத்தால் மேன்மை நிலையில்லை—மிக
நேர்த்தி யாலும் சிறப்பில்லை.
தரத்தால், பயனால் மதிப்புண்டு- உயர்
தன்மைக் குணத்தால் புகழுண்டு!





ஏமாந்த பூதம்!

—வி.ராதாகிருஷ்ணன்—



மாங்குடி என்ற கிராமத்தில் 'காபாலிகன்' என்ற சக்தி வாய்ந்த மந்திரவாதி இருந்தான். அவன் தன் மந்திர சக்தியால் கிராமத்து மக்களைப் பலவாறு துன்புறுத்தி வந்தான். அவன் பெயரைக் கேட்டாலே மக்கள் நடுங்குவார்கள்.

தன் மந்திர சக்தியால் எத்தனையோ விஷயங்களைச் சாதித்தாலும், காபாலிகனுக்கு ஒரு விஷயத்தில் மட்டும் திருப்தி ஏற்படவில்லை. அவனுடைய சக்திக்கு அடங்காமல் ஒரு பூதம்மட்டும் அவனைப் படாத பாடு படுத்தி வந்தது. அதை எப்படியாவது தன் சக்தியால் அடிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற வெறியிலிருந்தான் மந்திரவாதி.

பூஜை செய்து அந்தப் பூதத்தை அழைத்த மந்திரவாதி, அதைத் தனக்கு ஏவல் வேலை செய்யும் அடிமையாகும்படி கூறினான். அதற்கு அந்தப் பூதமும் ஏளனமாக, ''திமிர் பிடித்த மந்திரவாதியே! உன்னால் என்னைப் பணிய வைக்க முடியாது. இருந்தாலும் உன்னைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. நான் நிரந்தரமாக உனக்கு அடிமையாக வேண்டுமானால் ஒரு நிபந்தனை. ஒரு வார காலம் உன்னிடம் நான் அடிமையாகப் பணி செய்கிறேன். நீ எந்த வேலை கொடுத்தாலும் நிறைவேற்றுவேன். ஆனால் ஒன்றுமட்டும் நினைவில் வைத்துக் கொள். எனக்கு நீ தொடர்ந்து வேலை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும். எந்த நேரத்தில் எனக்கு வேலை இல்லை என்று நீ கூறுகிறாயோ, அதே கணம் உன் தலை சுக்கு நூறாகிவிடும். சம்மதமா?'' என்று கேட்டது.

மந்திரவாதி மிக அலட்சியமாக, ''பூ! இவ்வளவுதானே! உனக்கு என்னால் வேலை தொடர்ந்து கொடுக்க முடியும்.'' என்றான்.

அந்தப் பூதத்தை முதலில் பெரிய மாளிகை ஒன்றைக் கட்டச் சொன்னான். பிரமிக்கத் தக்க மிக அழகான மாளிகையைச் சில மணி நேரங்களில் உருவாக்கிவிட்டது அந்தப் பூதம். பின்னர், பெரிய சோலை ஒன்றை உருவாக்கச் சொன்னான். மிக விரைவிலேயே அந்த வேலையையும் முடித்து விட்டது.

மந்திரவாதி பிரமித்துப் போய்விட்டான். பல நாட்கள் பலர் கூடிச் செய்ய வேண்டிய வேலையை ஒரே நாளில் முடித்து விட்டது அந்த எமகாதகப் பூதம்.

மீதி ஆறு நாட்களுக்கு என்ன வேலை கொடுக்க முடியும்? என்று யோசித்த மந்திரவாதிக்கு, 'மரண கிலி' பிடித்து விட்டது. எப்படியும் தன் தலை சுக்கு நூறாகிவிடும் என்பதை உணர்ந்த காபாலிகன், லட்சுமணனின் உதவியை நாடத் தீர்மானித்தான்.

லட்சுமணன் அந்தக் கிராமத்தில் வசிக்கும் ஓர் ஏழை இளைஞன். அவன் மிகுந்த புத்திசாலி. தன் அறிவுத் திறனால், கிராமத்து மக்கள் அனைவரின் அபிமானத்தையும் பெற்றவன். ஊர் மக்கள் அனைவரும், தங்கள் பிரச்னைகளையெல்லாம் அவனிடம்தான் கொண்டு செல்வார்கள். புத்திசாலித்

தனமாக எல்லாப் பிரச்னைகளையும் லட்சுமணன் தீர்த்து வைப்பான்.

கிராம மக்களைக்காபாலிகன் தொல்லையிலிருந்து எப்படி மீட்பது என்று லட்சுமணன் யோசித்துக் கொண்டிருந்த போதுதான், காபாலிகன் அவனைத் தேடிப் பரபரப்பாக ஓடிவந்து, தன் கதை முழுவதையும் கூறினான்; பூதத்திடமிருந்து தன் உயிரைக் காப்பாற்றுமாறு வேண்டினான்.

லட்சுமணனும் மந்திரவாதி தானாகவே தன் வலையில் விழுந்தது குறித்து மகிழ்ச்சியடைந்தான்.

''காபாலிகா! உன் உயிரை நான் காப்பாற்றுகிறேன். ஆனால், நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும். இனிமேல் உன் மந்திர சக்தியைத் தீய விஷயத்துக்குப் பயன்படுத்தக் கூடாது. இந்தக் கிராமத்தை விட்டே வெளியேற வேண்டும். இதற்குக் கட்டுப்பட்டால் உன் உயிரை நான் காக்கிறேன்'' என்றான் லட்சுமணன்.

தன் உயிர் பிழைத்தால் போதும் என்றெண்ணிய மந்திரவாதியும் அதற்குச் சம்மதித்தான்.

உடனே லட்சுமணன் மந்திரவாதியின் காதில் ஒரு யுக்தியைக் கூறினான். அது கேட்ட மந்திரவாதி மிக மகிழ்ந்து லட்சுமணனின் அறிவுத் திறனைப் பாராட்டிவிட்டுப் பூதத்திடம் சென்றான்.

''ஓ புத்திசாலிப் பூதமே! உன்னுடைய திறமை என்னை வியக்க வைக்கிறது. ஆனாலும், நீ எனக்கு அடிமையாகப் போவது மட்டும் உறுதி. ஏன் என்றால், இதுவரை நான் கூறியவற்றையெல்லாம் நிறைவேற்றிய உன்னால், இனி நான் சொல்லப் போவதை மட்டும் நிறைவேற்ற முடியாது. அதோ தெரிகிறதே ஓர் உயர்ந்த பனை மரம், அதில் நீ ஏறி இறங்க வேண்டும். போதும் நிறுத்து என்று நான் சொல்லும் வரை உன்னால் இதைத் தொடர்ந்து செய்ய முடியுமா?'' என்று கேட்டான் காபாலிகன்.

அதைக் கேட்ட பூதம், வழக்கமான தன் ஏளனப் புன்னகையுடன், ''ஏய் முட்டாள் மந்திரவாதியே! என்னால் முடியாத காரியமே கிடையாது. இதையும் செய்துவிட்டு, உன்னை நான் அடிமைப் படுத்துகிறேன், பார்'' என்று கூறிவிட்டு மந்திரவாதி கூறியபடியே மரத்தில் ஏறி இறங்கிக்கொண்டிருந்தது. பல நாட்கள் ஓடிவிட்டன.

மந்திரவாதி, லட்சுமணனுக்குக் கொடுத்த வாக்கின்படி கிராமத்தை விட்டே ஓடிவிட்டான். தான் ஏமாந்துவிட்டோம் என்பதை உணராத அந்த முட்டாள் பூதம், என்றாவது ஒரு நாள் காபாலிகனே, ''போதும் நிறுத்து'' என்று சொல்வான் என்று நம்பிக் கொண்டு இன்னும் தொடர்ந்து மரத்தில் ஏறி, இறங்கிக் கொண்டிருக்கிறது!

மனப்பாடம் ஒரு விளையாட்டு


மனப்பாடம் செய்வதும் ஒரு விளையாட்டுப் போட்டிதானே! விளையாட்டாக விரும்பி மனப்பாடம் செய்தால் சுமையில்லை. அது வளர்ச்சியூட்டும் மகிழ்ச்சி.

எலுமிச்சம் பழத்தை விற்கிற காலத்தில் என்ன செய்கிறோம்? ஊறுகாய் போட்டு வைக்கிறோம். மாங்காய் கிடைக்கிற காலத்தில்...? அதுவும் அப்படித்தான். அதைப் போல் இளமைப் பருவத்தில் தேவையானவற்றை மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ளலாம். வயது வந்த பிறகு கேட்டு, சிந்தித்து, உணர்ந்து, அறிவை எல்லாம் தனதாக்கிக் கொள்ளலாம்.

டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு

(—'சுந்தர வடிவேலனாரின் மந்திர மொழிகள்' என்ற புத்தகத்திலிருந்து)





கடவுளைக் கண்ட முத்து

உமா

நெடுங்கதை

தாயும், மகனும்

முத்து விளையாடிவிட்டுப் பசியுடன் வீட்டுக்கு வந்தான். அவன் வீட்டிற்கு வந்த அதே நேரத்தில் எங்கிருந்தோ ஒரு சாமியாரும் வந்து சேர்ந்தார்.

''அம்மா, பரதேசிக்குச் சாப்பாடு தா தாயே...'' என்று கேட்டார்.

முத்துவின் அம்மா சுப்பம்மா தெய்வபக்தி உள்ளவள். சாமியார்களைக் கடவுளாக நினைப்பவள். 'இந்த ஊரில் இத்தனை வீடுகள் இருக்கும் போது நம் ஓலைக் குடிசையைத் தேடி வந்திருக்கிறாரே!' என்ற மகிழ்ச்சியில் சுப்பம்மா சோற்றை வடித்த கஞ்சியில், கொஞ்சம் சோற்றை அள்ளிப்போட்டுக்கொண்டு, மிருந்ததை சாமியாரை உட்கார வைத்துப் பரிமாறினாள்.

அவர் திருப்தியுடன் சாப்பிட்டுத் திரும்பிச் சென்றதும் கஞ்சியை மகனுடன் சேர்ந்து குடித்தாள் சுப்பம்மா. சாமியார் மறுநாளும் வந்தார். அடுத்த நாளும் வந்தார். அடிக்கடி அந்தச் சாமியார் வருவார்; சாப்பிடுவார். அவர்களை ஆசீர்வதித்து விட்டுத் திரும்பிச் செல்வார்.

''நம் அம்மா எவ்வளவு சிரமப்பட்டு உழைத்து, அரிசி வாங்கி வந்து சோறு சமைக்கிறாள்! அதை எவ்விதச் சிரமமும் படாமல் இந்தச் சாமியார் வந்து சாப்பிட்டு விட்டுச் செல்கிறாரே'' என்று முத்து நினைப்பான்.

இதுபற்றி அம்மாவிடம் கேட்க வேண்டுமென்று ஒருநாள் முடிவு செய்தான். சாமியார் அன்றும் வந்தார். அவர் சாப்பிட்டுச் சென்றதும் ''அம்மா...'' என்று தயங்கியபடி அழைத்தான்.

''என்னப்பா?''

''வந்து... எனக்கும் ஒருநாள் அரிசிச் சோறு தாயேம்மா...''

திடுக்கிட்ட சுப்பம்மா, ''என்ன முத்து இது?'' என்று கேட்டாள்.

''ஏம்மா, நீ சிரமப்பட்டு அரிசி கொண்டு வந்து சமைக்கிறாய். அதை அந்தச் சாமியார் வந்து சாப்பிட்டு விட்டுப் போறாரே! அவருக்கு ஏன் கொடுக்கணும்?'' என்று கேட்டான் முத்து.

''பெரியவர்களுக்குக் கொடுப்பது பற்றி இப்படியெல்லாம் அலட்சியமாகப் பேசக் கூடாது முத்து. இவங்களுக்குச் சோறு கொடுத்தால் கடவுளுக்குக் கொடுக்கிற மாதிரி...'' என்றாள் சுப்பம்மா மகனைச் சமாதானப் படுத்துவதற்காக.

''போம்மா. பொய் சொல்றே..''

''இல்லைப்பா... நாம இந்தச் சாமியாருக்குக் கொடுக்கிற சோறு எல்லாம் கடவுள் முன்னாலே பொன்னாக் குவியும்'' என்றாள்.

''பொன்னுன்னா என்னது அம்மா? அதைச் சாப்பிடலாமா?''

''ஐயே... பொன்னுன்னா....'' மகனுக்கு எதைச் சொல்லிப் புரிய வைக்கிறது என்று புரியாமல் தவித்தவள், ''ஆங்... பொன்னுன்னா அதைக் கொண்டு நம்ம பெரிய வீட்டுப் பையன் சுந்தர் காதுலே, கையிலே போட்டிருக்கிறானே, அது மாதிரி செய்யலாம். வித்து நிறையப் பணம் சம்பாதிக்கலாம்'' என்றாள் தாய், மகனைச் சமாதானப்படுத்துவதற்காக.

''அப்படியா?'' என்று கேட்ட முத்து மௌனமானான். அவன் மனத்தில் என்னென்னவோ தோன்றின.

''ஏம்மா, கடவுள் எங்கே இருப்பார்?''

மகனின் கேள்வியில் திகைத்தவள், ''கடவுள் எல்லா இடத்துலேயும் இருப்பார்'' என்றாள்.

''போம்மா... கடவுள் எல்லா இடத்துலேயும் இருந்தால், நாம சாமியாருக்குக் கொடுத்த சோறு கூடத்தான் எல்லா இடத்துலேயும் இருக்கும். உள்ளதைச் சொல்லும்மா. கடவுள் எங்கே இருப்பார்?''

சுப்பம்மாவுக்குக் கோபம் வந்தது. ஆனாலும், விவரம் தெரியாத படிப்பறிவில்லாத மகன் கேட்கிறானே! உண்மை தெரிய அவனுக்கு வயது போதாது. எனவே எதையாவது சொல்லிச் சமாளிக்க வேண்டியதுதான்!

''இங்கேயிருந்து பத்துக் காத தொலைவுலே ஒரு மலை இருக்கு. அந்த மலை மேலே கடவுள் இருக்கிறார்'' என்றாள்.

''கடவுளை நாம பார்க்க முடியுமா அம்மா?''

ஓடிய காரணம்?

கண்ணன்: ஏண்டா முரளி டி.வி. பார்க்கறப்போ பாதியிலே எழுந்து ஓடிட்டாய்?

முரளி: அப்போ டி.வியிலே வந்தவர் என் அப்பாவுடைய நண்பர். நான் பாடம் படிக்காம உங்க வீட்டிலே டி. வி. பார்த்ததாய் அவர் என் அப்பாகிட்டே சொன்னால், அப்பா அடிப்பாரே!

—லலிதா செல்லப்பா



''ஓ பார்க்கலாமே!'' என்று மகனின் வாயை அடைக்கக் கூறிவிட்டு, அவள் வேலைக்காகச் சென்றாள்.

தாய் சொன்ன சொற்களை முத்துவினால் மறக்க முடியவில்லை. 'கடவுள் அந்தப் பொன்னை எல்லாம் ஏன் அவரிடமே வைத்திருக்கிறார்? சுந்தரரோட அப்பாவுக்குக் கடவுள் பொன் கொடுத்ததனால்தானே அவர் பணக்காரராக இருக்கிறார். அதுபோல் எங்களுக்கும் ஏன் தரவில்லை? அவர் தரலேன்னா, நாம கேட்டு வாங்க வேண்டியது தானே? சரி, நானே போய்க் கேட்கப் போகிறேன்.'

மனத்தில் தீர்மானித்த மறுநாள் முத்து தாயிடம் தன் முடிவைத் தெரிவித்தபோது அவள் திடுக்கிட்டாள். அவனிடம் தான் சொன்னது பொய் என்று எவ்வளவோ மறுத்துக் கூறியும், முத்து தன் உறுதியில் பிறழவில்லை. இறுதியில் அழுதபடி கூறினாள்.

''முத்து, என் கண்ணே, நீ போனால் நான் தனியாக எப்படியடா வாழ்வேன்?''

''அம்மா, கொஞ்ச நாளிலே நான் திரும்பி வந்துடுவேனம்மா. என்னைத் தடுக்காமல் ஆசீர்வாதம் செய்யம்மா...''

''கடவுளைப்பார்க்க முடியாதுடா..''

''பொய் சொல்றே... கடவுள் உண்டுன்னு அவரு எங்கேயாவது இருந்துதானே ஆகணும்? நான் தேடிப் போறேன்.''

சுப்பம்மா சிந்தித்தாள். 'சரி, அவன் விருப்பப்படியே செய்யட்டும்' என்ற முடிவு அவளுள் ஏற்பட்டது.

''சரி முத்து. ஆனால், இன்று புறப்பட வேண்டாம். நாளைக் காலையில் உனக்கு நான் சோறு கட்டித் தருகிறேன். அதைக் கொண்டு போ'' என்றாள்.

அவன் சம்மதித்தான். வேலை செய்யும் வீடுகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் அரிசி அதிகமாக வாங்கி வந்து, மறுநாள் அதிகாலையிலே சமைத்து மகனுக்குச் சோற்று மூட்டை கட்டிக் கொடுத்தாள். பொழுது புலர்வதற்கு முன் கடவுளைத் தேடி முத்து பயணமானான்.

தேவதையின் குறை

முத்து நடந்து கொண்டேயிருந்தான். அன்று மாலை வரை நடந்த பின், களைத்துப் போய்க் கீழே அமர்ந்து சோற்று மூட்டையை அவிழ்த்தான்.



வயிறு பசித்த பசியில் வாய்மட்டும் அகலமாக இருந்திருந்தால் அப்படியே விழுங்கியிருப்பான். ஆனால், பிடி சோறுதானே வாய்க்குள் இப்பொழுது நுழையும்!

ஒரு பிடி அள்ளி வாயில் போடப் போனவன், ''ஐயோ... அப்பா.... அம்மா...'' என்ற முனகல் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு அப்படியே வைத்துவிட்டுச் சுற்றிலும் நோக்கினான். அவன் அமர்ந்திருந்த மரத்தடியிலிருந்து சற்றுத் தள்ளி ஒரு வயதான மனிதர் விழுந்து கிடந்தார். அவர்தான் முனகிக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் ஓடிச் சென்று, ''ஐயா... ஐயா...'' என்று அழைத்தான்.

அந்த மனிதர் மெல்லக் கண்களைத் திறந்து, ''யாரப்பா நீ?'' என்று ஈன சுரத்தில் கேட்டார்.

''நீங்கள் ஏன் ஐயா முனகுகிறீர்கள்?'' என்று முத்து கேட்டான்.

''பசி... பசி... உயிர் போகிறது..'' என்றார் திணறியபடி. முத்துவுக்கும் பசியினால் உயிர்போவது போலிருந்தது. கையிலுள்ள சோற்றை மத்தியானம் சாப்பிட்டால், இரவு என்ன செய்வது என்ற யோசனையில்தான் மாலை வரை நேரத்தைக் கடத்தி இப்பொழுது உண்ண அமர்ந்தான்.

இந்தப் பெரியவருக்கும் பசிக்கிறதாமே!...

''ஐயோ, பாவம்'' என்று இரக்கப்பட்ட முத்து, தான் அவிழ்த்து வைத்த சோற்று மூட்டையை எடுத்துக் கொண்டு வந்து அவர் முன் வைத்துவிட்டு, ''சாப்பிடுங்கள் ஐயா...'' என்றான்.

ஒரு கவளம் விண்டு வாயில் போட்டவருக்கு விக்கியது. 'தண்ணீர்' என்று கைகாட்டினார்.

முத்து கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்வையால் துழாவினான். எங்கு நோக்கினாலும் ஓரிரு மரத்தைத் தவிர பொட்டல் வெளியாகவே இருந்தது.

தயங்கியபடிஅவரைப்பார்த்தாலோ.. விக்கல் நிற்கவே இல்லை. திணறினார்.

கால் போன போக்கில் பசியுடன் தண்ணீருக்காக நடந்தவன், ஓரிடத்தில் ஒரு சிறு பொய்கை இருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான். அதில் படர்ந்திருந்த தாமரை இலைகளில் ஒன்றைக் கிள்ளி அதைக் கிண்ணம் போல் மடித்து அதில் நீர் எடுத்துச் செல்ல முயன்றான். அதற்குமுன் நெருப்பெரியும் தன் வயிறு குளிர ஒரு மிடறு தண்ணீர் பருகலாம் என்று எண்ணினான். கையிலிருந்த தாமரை இலையைக் கீழே வைத்துவிட்டு, இரு கைகளினாலும் நீரை ஆவலுடன் அள்ளி வாயருகில் கொண்டு சென்றபோது...

''ஏய், யாரது தண்ணீர் குடிப்பது?'' என்று கரகரத்த குரல் கேட்டது.

திடுக்கிட்டு நோக்கினால்....

எதிரே, அழகான ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்.

''நீ யார்?'' என்று அதே கரகரத்த குரலில் கேட்டாள் அவள்.

அவனுக்கு வியப்பாக இருந்தது. 'ஆண் பிள்ளை குரல்கூட நன்றாக இருக்குமே! இரண்டு பாறைகளை உரசினால் கேட்கும் கரகர சப்தம் போலிருக்கிறதே இந்தக் குரல்!' என்று நினைத்துக் கொண்டே, ''என் பெயர் முத்து. கடவுளைத் தேடிப் போகிறேன்...'' என்றான்.

''கடவுளைத் தேடிப் போகிறாயா?'' அவள் கடகடவென்று சிரித்தாள். பிறகு சிரிப்பை நிறுத்திவிட்டு, ''சரி, இங்கே ஏன் வந்தாய்?'' என்று கேட்டாள்.

''அங்கே ஒரு பெரியவர் குடிக்கத் தண்ணீர் கேட்டார்...''

''நீ எனக்கு ஒரு உதவி செய்தால் நான் உன்னை நீர் குடிக்க அனுமதிக்

கிறேன். நான் சொல்வதைக் கேட்கிறாயா?''

''நீங்க யார்? ஏன் என்னைத் தடுக்கிறீர்கள்? நான் என்ன செய்ய வேண்டும்?''

''நான் இந்தப் பொய்கையின் காவல் தேவதை. இங்கே யாரும் நீர் குடிக்கக் கூடாது. ஆனால், நீ பிறருக்கு உதவி செய்ய நினைத்து வந்திருக்கிறாய். எனவே, ஒன்று சொல்வேன். அதைச் செய்வதாக உறுதி அளிக்க வேண்டும். அப்போது தான் நீர் எடுக்க அனுமதிப்பேன்'' என்றாள்.

அவனுக்குப் பெரியவரின் விக்கல் கண்முன் தெரிந்தது.

''நான் என்ன செய்யணுங்க?'' என்று கேட்டான்.

''நீ கடவுளைத் தேடிக் கண்டுபிடித்தால் அவரிடம் கேள். இந்தப் பொய்கையின் பெயர் வல்லித் தீர்த்தம். என் பெயர் சுந்தரவல்லி. 'வல்லித்தீர்த்தத்தின் காவல் தேவதையான சுந்தரவல்லிக்கு அழகான வடிவைக் கொடுத்த கடவுளான நீர், ஏன் அவளது நல்ல குரலை எடுத்துக் கொண்டு அருவருப்பான பிறர் பழிக்கும் குரலைக் கொடுத்தீர்?' என்று கேள். இந்தக் குரல் மாறிப் பழைய என் இனிமையான குரலைப் பெற நான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் கேட்டு வந்து சொல்வாயா?''



ரசங்கள்

"சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள முடியாத ரசம் எது?"

"பாதரசம்"

"சிறுவர்கள் விரும்பும் ரசம் எது?"

"அதிரசம்"

"அவசரத்தில் தப்பு செய்தால்...?

"அவரசம்"

—கீழை அ. கதிர்வேல்

''சரி...'' என்றான்.

''தாராளமாக நீ நீர் எடுத்துக் கொள்...''

அவன் குடிக்காமல் நீரை எடுத்து வந்து அந்தப் பெரியவருக்குக் கொடுத்தான். அவர் நீரைக் குடித்தபின், சோற்றில் ஒரு கவளத்தை மட்டும் அவனுக்காக வைத்துவிட்டு, முழுவதையும் தின்று ஏப்பம் விட்டார்.

முத்து அந்த மிகுந்த ஒரு கவளத்தைச் சாப்பிட்டுவிட்டு, பெரியவர் குடித்தது போக மீதமிருந்த கொஞ்ச நீரையும் குடித்துவிட்டு, ''ஐயா, நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

''என் கதை பெரிய கதையப்பா...'' என்றார் சோர்வுடன்.

''ஐயா, காலை வரை நான் இங்கு தான் நேரத்தைப் போக்க வேண்டும். நீங்கள் உங்கள் கதையைச் சொல்லுங்களேன்...'' என்று கேட்டான் முத்து.

கிழவர் பெருமூச்சு விட்டபடி தம்மைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

கிழவரின் கதை

மாடக்குளம் என்னும் ஊரில் தர்மலிங்கம் என்றொரு பெரியமனிதர் வாழ்ந்து வந்தார். தர்மலிங்கம் என்ற அவர் பெயருக்கும், தர்மத்துக்கும் எந்த விதத் தொடர்புமில்லை. தர்மலிங்கம் எச்சிற் கையால் காக்கை ஓட்ட மாட்டார். அவ்வளவு கருமி! தர்மலிங்கத்திற்கு மூன்று மகன்கள் உண்டு; மனைவி இறந்து விட்டாள். சிறு வயதிலிருந்தே அப்பாவுடன் பழகி வந்ததால் அவர் மகன்களுக்கும் கஞ்சப்புத்தி என்பது இரத்தத்தில் ஊறிப் போயிருந்தது.

மூவரும் வளர்ந்து வந்தனர். மூவரும் தங்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்திருந்தனர்.

மூத்தவன் முதல் நாள் பள்ளிக்கூடம் சென்றால், இரண்டாமவன் மாடு மேய்க்கச் செல்வான். மூன்றாவது பையன் வயல் வேலைக்குச் செல்வான். இரண்டாவது நாள் இரண்டாமவன் மூத்தவனின் புத்தகம், மற்றும் பொருட்களுடன் பள்ளி செல்ல, அவன் விட்ட வேலையை அண்ணன் பார்ப்பான். மூன்றாவது நாள் மூன்றாமவன் பள்ளிக்குச் செல்ல... மற்றவர்கள் வேலைக்குச் சென்றனர். மூவரும் ஒரே வகுப்பில்,நான் படித்தனர். இப்படியே வாரம் இரண்டு

நாள் வீதம் பள்ளிக்கூடம் சென்றனர்.

மூவரும் இனமும் பள்ளிக்குச் சென்றால், மூன்று பேருக்கும் தனித்தனியாகப் புத்தகங்கள் வாங்க வேண்டுமே! இப்பொழுது பள்ளிக்கூடம் சென்றது போலவும் ஆச்சு; வேலை பார்த்தது மாதிரியும் ஆச்சு!

மூவரும் ஒரே வகுப்பிலேயே பல ஆண்டுகள் படித்து வளர்ந்தனர். மூவரும் சாப்பிடுவதும் இப்படியே தான். ஒரே தட்டில் ஒருவர் மாற்றி ஒருவர் உண்பார்.

'கஞ்சப் பிரபுக்கள்' என்று ஊரார் தம் மக்களைப் புகழ்வதைக் கேட்டு மகிழவும் செய்தார், தர்மலிங்கம்.

கஞ்சப்பிரபுக்கள் வளர்ந்தனர்.

தகப்பனார் மூவருக்கும் திருமணம் செய்யப் பெண் பார்த்தார்.

மூவருக்கும் உடனே கவலை வந்து விட்டது. தனித்தனியே கல்யாணம் செய்தால், கல்யாணச் செலவு அதிகமாகுமே! மேலும் அந்தப் பெண்களுக்குச் சாப்பாடு வேறு போட வேண்டுமே! எனவே மூன்று பேரும் ஒரே பெண்ணுக்கு ஒரே தாலியைக் கட்டினால் என்ன? தந்தையிடம் கூறினர். அவர் பெண் பார்க்கச் செல்லும் இடமெல்லாம் அடிபட்டுத் திரும்பினார்.

பிள்ளைகளின் பிடிவாதத்தை மாற்றவும் அவரால் முடியவில்லை. இப்படி இருக்கும் போது கஞ்சப்பிரபுக்கள் மூவரும் கலந்து ஆலோசித்தனர்.


'அப்பா எதற்காக நம்முடன் வாழ வேண்டும்? அவருக்கென்று தனிச் செலவு, தூங்கத் தனிக் கட்டில், சாப்பிடத் தனியாகப் பாத்திரம்?' ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

ஒருநாள் மூவரும் சேர்ந்து தங்கள் தந்தையை அடித்து விரட்டினர். அவர் உடுத்தியிருந்த துணிகளோடு மீள்வதே பெரும் சிரமமாகி விட்டது!

தர்மலிங்கத்தின் பாடு தர்மசங்கடமாகி விட்டது.

ஏற்கெனவே ஊர் மக்களைத் தம் கஞ்சத்தனத்தினால் பகைத்துக்கொண்டவராதலால், ஊரில் பிச்சையெடுத்தும் வாழ முடியவில்லை. கால் போன போக்கில் நடந்து...

இறுதியில் நடக்க முடியாமல் மயங்கி விழுந்து விட்டார். ''நீ கொடுத்த உணவால் மயக்கம்தெளிந்து உன் முன்னால் இப்போது உட்கார்ந்திருக்கிறார்'' என்று கூறி அவர் விம்மி விம்மி அழுதார்.



கண்களை மூடும் காரணம்

ஆசிரியர்: டேய் சுப்பு, கேள்வி கேட்டால் ஏண்டா கண்களை மூடிக்கிறே?

சுப்பு: நீங்கதானே சார் கேள்வி கேட்டால் திரு திருன்னு முழிக்கக் கூடாதுன்னு சொன்னீங்க?

-கீழை அ. கதிர்வேல்

''அழாதீர்கள் ஐயா'' என்று தேற்றினான் முத்து.

''நீ யாரப்பா? சிறுவனாக இருக்கிறாய். ஆனாலும் பெரிய இதயம் உள்ளவனாக இருக்கிறாயே!''

''நான் கடவுளைக் காணப் புறப்பட்டேன் ஐயா...''

''கடவுளை...! நீ எப்படிப் பார்ப்பாய்?''

''முடியும் என்று அம்மா சொன்னாள் ஐயா.''

''கடவுள் நம் கண்ணுக்குப் புலப்பட மாட்டார் குழந்தாய். நீ வீட்டிற்குத் திரும்பிப் போ'' என்றார்.

''இல்லை ஐயா. நான் கடவுளைப் பார்க்காமல் திரும்பவே மாட்டேன்''. என்று உறுதியுடன் கூறினான் முத்து.

''உன் உறுதியைப் பாராட்டுகிறேன். நீ எனக்காக ஓர் உதவி செய்வாயா?''

''என்ன ஐயா?''

''நான் சென்ற பிறவியில் என்ன தவறு செய்து, இப்படிக் கஞ்சத்தனத்துடன் பிறந்தேன் என்று கடவுளை நீ கண்டால் கேட்டு, என்னிடம் வந்து சொல்வாயா?''

''சரி ஐயா...''

அவரிடமிருந்து மறுநாள் அதிகாலை விடைபெற்றுப் புறப்பட்டான் முத்து.

பேசும் பலாமரம்

இரண்டு நாள் பயணத்திலேயே முத்து சோர்ந்து விட்டான். அவன் கால்களில் கொப்புளங்கள் கிளம்பின. வேதனை பொறுக்க முடியாததாக இருந்தது. ஆனால், அவன் மனத்தி லிருந்த 'கடவுளைக் காண வேண்டும்; தன் தாய் படும் துன்பம்தீர வேண் டும்' என்னும் வைராக்கிய எண்ணம் அகலவில்லை. அந்த உறுதியே அவன் கால் வலியைத் தாங்கப் புதுசக்தியைக் கொடுத்தது.

கால்கள் துவளத் துவள, நிழல் பார்த்து நடந்தான்.

பகல் நேரங்களில் வழியில் எதிர்ப் படும் மரங்களிலிருந்து ஏதாவது சாப்பிடக்கூடிய கனிகளைப் பறித்து உண்பான். கிழங்கு வகைகளைப் பிடுங்கித் தின்பான். அடுத்தவேளைக்குக் கையில் சில பழங்களையும் கிழங்குகளை யும் எடுத்துக் கொண்டு... பய ணத்தைத் தொடர்ந்தான். இரவு நேரமானதும் ஓர் இடத்தில் ஒதுங்கிப் படுத்துக் கொண்டான். அவன் உடுத்தி யிருந்த ஒரே உடையும் கந்தல்தான் என்றாலும் அதைத் தினமும் ஏதாவது ஒரு குட்டையில் நீராடியபின், துவைத்து உடுத்திக் கொண்டு நடந் தான். நடந்...தான்!

ஏழாவது நாள் மாலையில் ஆல் போல் தழைத்திருந்த ஒரு பெரிய பலாமரத்தின் அடியில் சென்று ஓய் வெடுக்க அமர்ந்தான் முத்து.

அந்த மரத்தில் நூற்றுக்கணக்கான பலாக்காய்களும், பழங்களும் தொங்கி, அதன் மணமே 'கம, கம' வென்று மூக்கைத் துளைத்தது!

முத்துவிற்கு ஆசை பிறந்தது. ஒரு பழம் பறித்துச் சாப்பிட்டால் என்ன? என்று எண்ணியவன், ஒன்றைக் கவனித்தான். இத்தனை பழங்கள் தொங்கியும், கீழே பல பழங்கள் விழுந்து கிடந்தும் அவற்றை உண்ணப் பறவைகளோ, மனிதர்களோ வர வில்லை! பழமரத்தை நாடிப் பற வைகள் வருமென்பார்களே! இங்கு நேர் எதிராக இருக்கிறதே! பலா மரத்தின் எதிரில் இருந்த மரங்களில் அமர்ந்திருந்த சில பறவைகள் ஏக்கத் துடன் பார்த்தன.

அவனுக்கு எதுவும் புரியவில்லை. என்றாலும் இளஞ்சிறுவன் எனவே அதிகம் சிந்திக்காமல், மரத்தின் தாழ்ந்த கிளை ஒன்றின் வழியாக மேலேறி ஒரு பலாப்பழத்தைப் பறித்து உண்டான்.

மரத்தின் கிளையின் பரப்பு கட்டில் போல் விரிவாக இருந்தது. பகல் முழுவதும் நடந்த களைப்பும், உண்ட மயக்கமும் சேர, அந்தக் கிளையின் மேலேயே படுத்துத் தூங்கிவிட்டான். மறுநாள் காலையில் சூரியனின் செங்



கதிர்கள் அவன்மேல் 'சுளீர்' என்று பட்டு எழுந்தான்.

ஒரு பலாப்பழத்தைப் பறித்துத் தின்றுவிட்டுக் கீழே இறங்கியவனை, ''தம்பி...'' என்ற புதுக்குரல் தடுத்து நிறுத்தியது. திரும்பிச் சுற்றிலும்பார்த்தான். யாரையும் காணவில்லை! மீண்டும் நடக்க முயன்றவனை, ' ''நான்தான் தம்பி. இங்கே பார்...'' என்ற குரல் தடுத்து நிறுத்தியது. குரல் வந்த திசையில் பார்த்தான்.

''நான்தான் தம்பி பலாமரம் பேசுகிறேன்'' என்ற குரல் கேட்டது

''பலாமரம் எங்காவது பேசுமா?'' என்று கேட்டான் முத்து.

''என்னால் பேச முடிகிறதே தம்பி...''

''உம்... என்ன விஷயம்.?''

''நீ யார் தம்பி? என் கனியைச் சாப்பிட்ட உனக்கு நன்றி'' என்றது மரம்.

''நானல்லவா உனக்கு நன்றி சொல்ல வேண்டும்? பசித்து வந்த எனக்கு உணவு தந்து, உறங்க இடமும் தந்து உதவினாய். நன்றி நானல்லவா சொல்ல வேண்டும்...?''

''நீ அப்படி நினைக்கிறாய் தம்பி. ஆனால், என் வாழ்விலேயே பிறந்த பலனை நான் நேற்றும் இன்றுமாகத்தான் உணர்ந்தேன் தம்பி...''

''ஏன்?''

''என்னிடம் பழங்கள் தின்ன எந்தப் பறவையுமே வருவதில்லை. நீ அதைக் கவனித்தாயா?'' என்று கேட்டது பலாமரம்.


''கவனித்தேன். ஆனால், யாருக்கும் பசிக்கவில்லையோ என்று நினைத்தேன்...'' என்றான் முத்து.

''அப்படியல்ல முத்து. ஏனோ தெரியவில்லை. எனக்கும் கிட்டத்தட்ட நூறு வயதாகிறது. ஆனால், பிரயோசனம் என்ன? பசித்தாலும் பட்டினி கிடந்தாலும் மனிதர்களோ, பறவைகளோ, மிருகங்களோ என்னை நெருங்குவதில்லை. என் நிழலைக்கூடத் தீண்டுவதில்லை. என் கனிகள் எல்லாம் மண்ணில் வீணாக விழுந்து நாசமாகின்றன. எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது'' என்றது மரம்.

''அப்படியா.'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் முத்து.

''சரி, அது எல்லாம் இருக்கட்டும் தம்பி. நீ யார்? எங்கே போகிறாய்?''

''என் பெயர் முத்து. எங்கம்மா என்னை ரொம்பச் சிரமப்பட்டு வீடு வீடாக வேலை செய்து வளர்க்கிறாள். ஆனால், தினம் அம்மா சம்பாதிக்கிற



அரிசியில் கிடைக்கிற சோறு எல்லாவற்றையும் ஒரு சாமியாருக்குக் கொடுத்துவிட்டு, எனக்குக் கஞ்சியைத் தந்து, தானும் அதையே குடிப்பாள். அதுதான் கடவுளைப் பார்த்து ''ஏன் நீ எங்களை இப்படித் துன்பப்படுத்துகிறாய்?'' என்று கேட்கப்போகிறேன்.''

''கடவுளை உன்னால் பார்க்க முடியுமா தம்பி?''

''ஓ...!''

''உன் உறுதியைப் பார்த்தால் எனக்கு உன்னைத் தடுக்கத் தோன்றவில்லை. ஆனால், தம்பி, நீ கடவுளைப் பார்த்தால் என்னைப் பற்றி நான் சொல்லியனுப்புவது போல் கேட்பாயா?''

''ஓ... கேட்கிறேனே, என்ன கேட்க வேண்டும்?''

''நான் ஏன் பழுத்தும், பயனில்லாமல் இருக்கிறேன் என்று கடவுளிடம் கேட்டு வந்து என்னிடம் சொல்கிறாயா?''

முத்துவுக்குப் பாவமாக இருந்தது. ''சரி,'' என்று கூறி விடைபெற்றுப் புறப்பட்டான்.

முத்து இப்படி மன உறுதியுடன் புறப்பட்டு வந்து கொண்டிருப்பதைக் கண்ட ஒரு தேவதைக்கு அவன் மீது பரிதாபமாக இருந்தது. அதேநேரம், அவன் மன உறுதியையும் சோதித்துப் பார்க்கக் கருதியது.

முத்து நடந்து கொண்டேயிருக்க, தேவதை ஒரு பெரிய ராட்சதனாக மாறியது!

தேவதையும் முத்துவும்

ஓங்கி வளர்ந்த பெரிய பனைமர அளவு உயரம். யானையின் கால்களைப் போன்று திரண்ட நெடிய கரங்கள். பனைமரப் பருமனுக்குக் கால்கள். யானைத் தந்தம் போல் தலையின் இருபுறங்களிலும் இரண்டு பெரிய கொம்புகள். அரிவாள் போன்ற தோற்றத்தில் வளைந்து வளைந்து கோரமாகக் காட்சியளித்த இரண்டு பற்கள். பூனையின் முகத்தைப் போல், ஆனால் அதை விடப் பல மடங்கு பெரிய முகம். பெரிய பீப்பாய் போன்ற வயிறு. கைவிரல்களில் வளர்ந்திருந்த நகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஈட்டிபோல் தோற்றமளித்தது.

ராட்சதன் முத்துவின் எதிரே வந்தான். தரையைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்த முத்து, ராட்சதனின் கால்களில் மோதி விழித்து, நிமிர்ந்து பார்த்தான். அவனுக்கு வியப்பாக இருந்தது. பாறைக்குக் கைகால் முளைத்து, நிமிர்ந்தும் நிற்கிறதே! சுற்றிச் சுற்றி வியப்புடன் பார்த்தவன், பிறகு நடக்கத் தொடங்கினான்.

''டேய் பொடியா...!'' என்ற குரல் ஒன்று கேட்டது. கோடைக் காலத்தில் மழை பெய்யும்போது, இடிஇடிப்பதை முத்து கேட்டிருக்கிறான். அதைவிடப் பயங்கரமாக இருந்தது இந்தக் குரல்.

நின்று சுற்றிலும் பார்த்தான். ஆ...! இதென்ன பாறை அவனை நோக்கி நடந்து வருகிறதே! முத்து வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ராட்சதன் அவனைத் தன் இடது கையில் தூக்கினான். முத்து நடுங்கினான்.

''டேய் பொடியா... எங்கே போகிறாய்?''

''கடவுளைத் தேடிப் போகிறேன்..'' 'கடவுள்' என்று சொன்னதும், முத்துவின் மனத்தில் துணிச்சல் வந்து விட்டது!

இடிஇடிப்பது போல் அட்டகாசமாகச் சிரித்தான் ராட்சதன்.

''நீ கடவுளைக் காணப் போகிறாயா? ஹா... ஹா... ஹா... நான் யார் தெரியுமா?''

''ஓ... தெரியுமே...'' உற்சாகமாகக் கூறினான் முத்து.

ராட்சதன் திகைத்து, ''தெரியுமா?'' என்று கேட்டான்.



மோதிரப் பரிசு!

"உங்க பையனுடைய வாத்தியாருக்கு மோதிரம் வாங்கிக் கொடுத்தீங்களாமே? என்ன விசேஷம்?"

"என் பையன் அடிக்கடி அந்த வாத்தியார் கையாலே குட்டு வாங்குகிறான். குட்டுப்பட்டாலும் மோதிரக் கையாலே குட்டுவாங்கட்டும்னுதான்."

—எடையூர் சிவமதி

''ஆமாம், நீதான் புலி, சிங்கம், கரடி, காண்டாமிருகம் எல்லாம்...'' என்றான் முத்து.

''ஆமாம், இப்போது உன்னை நான் கொன்று தின்னப் போகிறேன்'' என்றான் ராட்சதன்.

ஒருகணம் யோசித்தான் முத்து. அவன் முகம் மலர்ந்தது.

''கொல்லப் போகிறாயா? என் அம்மாவிடம், அப்பா எங்கேம்மா என்று கேட்டால் 'செத்துப் போனாங்கடா கண்ணு'ன்னு சொல்லுவாங்க. அப்பா செத்துப் போனது போல, நானும் செத்துப் போனால், அப்பாகிட்டத்தானே போவேன்? சரி, என்னையும் அங்கே அனுப்பு'' என்றான் முத்து.

ராட்சதன் வடிவிலிருந்த தேவதைக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. அதை வெளிக்காட்டாமல், ''பொடிப்பயலே, நீ செத்தால் உன் அப்பாவிடம் போக முடியாது. என் வயிற்றுக்குள்ளேதான் போவாய்'' என்றது.

''சரி, நான் செத்தப்புறம் கடவுள் கிட்டப் போவேனா?''

''ஆமாம்...''

''அப்ப சீக்கிரம் என்னைக் கொல்லு. நான் கடவுள் கிட்டப் போகிறேன்.

கடவுள்கிட்ட உன்னைப் பத்தியும் சொல்லுவேன்'' என்றான் முத்து.

''நீ கடவுளிடம் போக மாட்டாய். செத்துப் போனால் அதன்பின் ஒன்றுமே தெரியாது. அதனால் நான் சொல்கிற மாதிரி கேட்கிறாயா?''


''என்ன சொல்லப் போறே?''

''இப்படியே உங்கம்மாகிட்டே போயிடு. கடவுளை எல்லாம் உன்னால் பார்க்க முடியாது.''

முத்து உதட்டைப் பிதுக்கினான். ''இவ்வளவுதானா சொல்லத் தெரியும்? நான் நீ சொல்வதையெல்லாம் கேட்க மாட்டேன் போ'' என்றான்.

''அப்படியென்றால் நீ சாகத் தயாராகிக் கொள்'' என்றான் ராட்சதன்.

''என்னைக் கொஞ்ச நேரம் கீழே விடறியா?''



பழமொழிப் புத்தகங்கள்

ஆறாயிரம் தமிழ்ப் பழமொழிகளை ஆங்கில மொழியாக்கத்துடன் முதன் முதலில் 1874—ல் பெர்சிவல் வெளியிட்டார். பிறகு 1887—ல் ஜென்சர் ஹர்மன் 3644 தமிழ்ப் பழமொழிகளை ஆங்கில மொழியாக்கத்துடன் பாகுபடுத்தி வெளியிட்டார். அதன்பின் தமிழ்ப்பழமொழிகள் பெருந்தொகுப்பு ஒன்றை 1894—ல் டாக்டர் லாசரஸ் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தினார். தென் மொழிப் புத்தக நிறுவனம், 'தென்மொழிகளில் பழமொழிகள்', என்ற தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டது. அதில் தமிழிலே பழமொழிகளை அச்சிட்டு, அதே கருத்துக் கொண்ட பழமொழிகள் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்றும் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது.

ஆதாரம்: தமிழ்க் கலைக்களஞ்சியம்.

''எதுக்கு?''

''எங்கம்மாவுக்கு நான் செத்துப் போனது தெரியக் கூடாது. அம்மா கஷ்டம் இல்லாம வாழணும்னு கடவுளைக் கும்பிட்டுட்டு வரேன்'' என்றான் முத்து.

''அவ்வளவுதானா?''

''மனுசன் சாகிற போது கடவுளை நெனைச்சிக்கிட்டு செத்தா புண்ணியம்னு அம்மா சொல்லுவாங்க.''

அவன் துணிச்சலும், தன் கொள்கையை நிறைவேற்ற அவன் மனத்தில் உள்ள உறுதியும் தேவதையை மிகவும் கவர்ந்தன. சிறுவனாக, படிப்பறிவு இல்லாதவனாக, அப்பாவியாக இருந்தாலும் முத்து நல்லொழுக்கம் நிறைந்தவன் என்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தது.

முத்துவைக் கீழே இறக்கி விட்டு விட்டு அந்த ராட்சதன் தேவதைப் பெண்ணாக மாறினான்.

கண்களை மூடிக் கடவுளை வேண்டிக் கொண்டிருந்த முத்துவை, ''முத்து'' என்று அன்புடன் அழைத்தாள், தேவதை.

கண் திறந்து பார்த்தான். அவன் கண்கள் வியப்பினால் அகன்றன.

''நீங்கள் யார்?''

''நான் ஒரு பெண். நீ கடவுளைத் தானே பார்க்கப் போகிறாய்?''

''ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''தெரியும். ஆமாம். உனக்கு நடக்கச் சிரமமாக இல்லையா? உனக்கு எங்கே போக வேண்டும் என்று சொல். நான் உன்னை அங்கே கொண்டு போய் விடுகிறேன்'' என்றாள்.

''அந்தப் பூதம் எங்கே?''

''என்னைக் கண்டதும் ஓடிவிட்டது.''

முத்து யோசித்தான். பிறகு, ''கடவுள் இப்பொழுது எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?'' என்று கேட்டான்.

''காற்று இப்பொழுது எங்கே இருக்கிறதென்று உனக்குத் தெரியுமா?''

''காற்று எல்லா இடமும் இருக்கிறதே!''

அதேபோல்தான் கடவுள் எங்கும், காற்றுப் புகாத இடத்தில் கூட இருக்கிறார்.''

''அப்படியா? கடவுள் எவ்வளவு பெரிசா இருப்பார்?''

''வானம் எவ்வளவு பெரிசுன்னு உனக்குத் தெரியுமோ?''

''அடேயப்பா... அவ்வளவு பெரியவராகவா இருப்பார்?''

''ஆமாம்.''

''கடவுள் கருணை உள்ளவர்னு அம்மா சொல்லுவாங்க. அப்படியா?''

''சந்தேகமென்ன? நாம் நிலத்தில் ஒரு நெல்லை விதைத்தால் பல நெல்களைத் தருகிறதல்லவா? அது நிலமகள் கருணையுடன் தந்ததுதானே! அதுபோல் நல்ல செயல் ஒன்றை நாம் செய்தால், அந்தச் செயலே இறைவன் நம் மேல் அன்பு கொள்ளச் செய்கிறது. அவர் தன் மேலான அருளைப் பூமியைப் போல் அள்ளித்தரவும் செய்கிறார்.''

''அப்படியா! சரி, என்னை விடுங்கள்.''

''என் உதவி உனக்கு வேண்டாமா?''

''நீங்கள் இவ்வளவு நேரம் என்னுடன் பேசியதே பெரிய உதவி போல இருக்கிறது. வேறு உதவி வேண்டாம். நான் கடவுளை எப்படியும் பார்க்க நினைக்கிறேன்.''

''இனியும் அலைந்து திரியப் போகிறாயா?''

''மாட்டேன். நீங்கள்தான் கடவுள் காற்றைப் போல் எல்லா இடத்திலும் இருப்பதாகச் சொன்னீர்களே! நான் இங்கேயே நின்று கடவுளைக் கும்பிட்டுக் கூப்பிடுகிறேன்'' என்றான் முத்து.

''புத்திசாலிப் பையன்'' என்று வியந்தபடி அவனிடம் விடைபெற்று மறைந்தது தேவதை.

யானையும் முத்துவும்

அந்த இடத்தில் ஒரு பாறை இருந்தது. அதன் வழியாக ஓர் அருவி பாய்ந்து பாறைக்குக் கீழே பள்ளமாக இருந்த பகுதியை நோக்கி 'கலகல' வென்று சிரித்துக்கொண்டே விழுந்து சிதறி... மீண்டும் ஒன்று சேர்ந்தது.

மதிய வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்தது. சாப்பிட ஏதாவது கிடைக்குமா என்று சுற்றிலும் பார்த்தான் முத்து. சாப்பிடும்படியாக உள்ள காய், கனிகள், கிழங்குகள் எதுவும் கண்ணில் படவில்லை. சற்றுத் தூரம் நடந்தான். வழியிலே சில மாமரங்களைக் கண்டான். அவற்றில் நிறையப் பழங்கள் பழுத்துத் தொங்கின. நல்ல பழுத்த பழங்களாக நான்கைப் பறித்து ஒன்றைக் கடிக்கப் போனவன் சிந்தித்தான். மாம்பழமும் தின்றதும் தண்ணீர்த் தாகம் எடுத்தால் என்ன செய்வது? எனவே, அருவி வழியும் பாறையில் வந்து சாப்பிட்டுச் சற்றுநேரம் ஓய்வெடுத்து அதன்பின் இறைவனை அழைக்கலாம் என்று நினைத்துப் பாறைக்கு வந்தான்.

பாறையின் மீது வந்து அமர்ந்தவன், ஒரு மாம்பழத்தைத் தின்றான். மிகவும் சுவையாக இருந்தது. வயிறு 'தா... தா...' என்று இரைந்தது. அடுத்ததை எடுத்தவன் திரும்பவும் யோசித்தான். 'கடவுளைக் கூப்பிட்டதும் வருவார். வந்ததும், அவருக்கு என்ன கொடுப்பது?' ஊரில் கோவிலில் பூசாரி விளக்கு வைத்து, நைவேத்தியங்கள் படைத்து மணி அடித்துப் பூசை செய்வது நினைவுக்கு வந்தது. கடவுள் வந்ததும், ''எனக்கு என்னடா முத்து வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டால் என்ன செய்வது?

அதுதான் சரி...! 'கடவுள் வந்ததும் இந்த மூன்று மாம்பழங்களையும் அவரிடம் கொடுத்து அவரைச் சாப்பிடச் சொல்ல வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டு, அருகே படர்ந்து



வாழைப்பழத்தில் ஊசி

''உங்க பையன் வாழைப்பழத்திலே ஊசியை இறக்கிப் பார்க்கிறானே, ஏன்?''

''என் வீட்டிற்கு நேற்று வந்த விருந்தினர் ஒருவரிடம் இவனை நல்லாப் படிக்கவச்சு எப்படியும் டாக்டராக்கிவிடணும்னு சொன்னேன். அதை இவன் கேட்டுத் தொலைச்சிருப்பான்னு நினைக்கிறேன்.

டி. எல். ரெட்டி

நின்ற பூசணிச் செடியின் இலை ஒன்றைப் பறித்து மூன்று கனிகளையும் அதன் மேல் வைத்தான். பூசாரி தண்ணீரைச் சொம்பில் கொண்டு வைப்பாரே! ஒரு இலையைப் பறித்து அதை மண்ணிலே உண்டாக்கிய பள்ளத்தின் நடுவிலே வைத்தான். தண்ணீர் ஊற்றினான்..

விளக்குக்கு என்ன செய்வது?


''சாமி ஆண்டவனே... எனக்கு விளக்கு வைக்க வசதியில்லை. மணி அடிக்கவும் என்னிடம் மணி இல்லை. குறையெல்லாம் பொறுத்துக்கோ''.. என்று வேண்டிக் கொண்டு, சம்மணமிட்டு அமர்ந்து, ''கடவுளே வா, கடவுளே வா...'' என்று அழைக்கத் தொடங்கினான் முத்து.

அப்படி வெகுநேரம் தன்னை மறந்த நிலையிலே இருந்தான். அப்பொழுது தான் உடம்பைத் தூக்கி வாரிப் போடும் அந்த ஓசை கேட்டது.

முத்து விழித்துப் பார்த்தான். ஒரு பெரிய யானை அவனை நோக்கித் துதிக்கையைச் சுழற்றியபடி வந்து கொண்டிருந்தது. அவனுக்கு அதைப் பார்க்கவே பயமாக இருந்தது. முன்னாலிருந்த மாங்கனிகளைக் கையில் எடுத்துக்கொண்டு ஓடத் தொடங்கினான். யானை விடாமல் அவனைத் துரத்தியது. வெகுதூரம் ஓடியபின் முத்துவுக்குக் களைப்பாக இருந்தது. மாங்கனிகள்வேறு சுவையாக இருந்தன. அதைவிட்டு விட்டு ஓடவும் மனம் வரவில்லை. வயிற்றுப் பசியினால் ஏற்பட்ட மயக்கமும், சோர்வும் சேர்ந்து கொண்டு அவனை ஓட விடாமல் தடுத்தன.

இதற்கு மேலும் தன்னால் ஓடமுடியாது என்று தீர்மானித்த முத்து, திரும்பி யானையைப் பார்த்தபடி பின் வாங்க... எதன் மேலோ இடித்துக் கொண்டு கீழே விழுந்தான்...

அவன் கைகளிலிருந்த மாங்கனிகள் சிதறின. அப்படியே மயக்கமானான் முத்து!



முத்துவுக்கு விழிப்பு வந்தபோது அப்படியே கிடந்தவாறு பார்த்தான். வானத்தில் நட்சத்திரங்கள் பளிச்சிட்டன. தான் ஏதோ ஒரு மிருகத்தைக் கண்டு பயந்து ஓடியதையும், கீழே விழுந்ததையும் நினைத்துப் பார்த்தான்.

தன் தலை மிருதுவான எதன் மீதோ இருப்பதை எண்ணியபடி எழுந்தான். எதிரே பார்த்தால்.... ஒரு சிறு பையன் அமர்ந்திருந்தான். அவன் மடியில் தான், தலையை வைத்துப் படுத்திருந்ததை உணர்ந்தான்.

''யார் நீ?'' என்று கேட்டான் முத்து.

அந்தச் சிறுவன் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகச் சிரித்துக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் ஒரு வெளிச்சம் தெரிந்தது. சிரித்தபடியே அச்சிறுவன், கடவுளுக்காக முத்து வைத்திருந்த மாம்பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்!

''டேய், யார் நீ? கடவுளுக்காக நான் வைத்திருந்த மாம்பழங்களை நீ ஏன் சாப்பிடுகிறாய்?'' என்று கேட்டான்.

''எனக்குத்தானே நீ கொண்டு வந்தாய்?'' என்று கேட்டான்சிறுவன்.

''உனக்காகவா நான் கொண்டு வந்தேன்? கடவுளுக்கல்லவா கொண்டு வந்தேன்?''

''கடவுளுக்கா!'' என்று கேட்டு அந்தச் சிறுவன் நகைத்தான்.

''ஓ! உனக்கு ரொம்பப் பசித்ததா? சரி, தின்னது போக மீதமிருக்கும் மாம்பழத்தையாவது என்னிடம் கொடு'' என்று கேட்டான்.

''அடப் போப்பா.. நல்ல பசி. மூன்றையும் நானே சாப்பிட்டுவிட்டேன்'' என்றான் சிறுவன்.

'பசிக்கும் ஒருவனுக்கு உணவளிப்பது இறைவனுக்குக் கொடுப்பதுபோல' என்று அடிக்கடி அம்மா சொல்வது முத்துவின் நினைவுக்கு வர மௌனமானான்.



மாம்பழங்கள் மூன்றையும் தின்ற அந்தச் சிறுவன் 'ஏவ்...வ்...' என்று ஏப்பமிட, முத்துவின் வயிறு பசியினால் நெருப்பை வாரியிறைத்தது போலிருந்தது.

''உனக்கும் பசிக்குதா?'' என்று அச்சிறுவன் முத்துவிடம் கேட்க முத்து மௌனமாக இருந்தான்.

''ஐயோ பாவம்... சரி, நீ இதைச் சாப்பிடு'' என்று கூறிப் பின்புறமிருந்து இரண்டு மாம்பழங்களை எடுத்துக் கொடுத்தான்.

அவற்றைப் பார்த்துத் திடுக்கிட்டான் முத்து. அவன் முன்பு வைத்திருந்ததைப் போலவே அவை இருந்தன!

''நீ சாப்பிடவில்லையா?'' என்று கேட்டான் முத்து.

''சாப்பிட்டேனே! வேறு இரண்டு இருக்கிறது பார்க்கிறாயா?''

''எங்கே?''

''இந்தா...''

'மீண்டும் இரண்டு! மூன்று கனிகளுக்கு நான்கு இருக்கிறதே! அப்படியானால் அவன் சாப்பிட்டது என்ன?'

''நீ என்ன சாப்பிட்டாய்?''

''உன் அன்பை!''

''என்....?''

''இந்தா இன்னும் இரண்டு'' மீண்டும் இரண்டு நீட்டினான்.

''நீ யார்?''

''என்னை நன்றாகப் பார்.''

''எங்கேயிருந்து நீ இங்கே வந்தாய்?''

''நான் உறங்கிக் கொண்டிருந்தேன். நீ கூப்பிட்டது காதில் விழுந்தது. வந்தேன்.''

''பொய் சொல்லுகிறாய்... நான் உன்னைக் கூப்பிடவில்லையே!...''

''கூப்பிட்டாய்.''

''கடவுளைத்தான் நான் கூப்பிட்டேன்.''

''அதுதான் வந்தேன். எதற்கு அழைத்தாய்?''

''நீதான் கடவுளா?''

''ஆமாம்.''

''இல்லையே...! நீ பொய் சொல்லுகிறாய். பெரிய பூதத்தை விரட்டிய பெண் சொன்னாளே, கடவுள் வானத்தைப் போல் இருப்பார்ன்னு. நீ என்னைப் போல் இருக்கிறாயே... கடவுள் இல்லை நீ....''

''அப்போ நான் சொல்வதை நீ நம்ப மாட்டாய் இல்லையா?''

''நம்பும்படியாகவா நீ சொல்லுகிறாய்?''

''சரி, உன்னை நான் எப்படி நம்ப வைக்கணும்?''

''நான் ஓடிவந்தப்போ என்னைத் துரத்தி வந்திச்சே.. ஒரு பெரிய யானை, அது எப்படி என்னை உயிரோடு விட்டுது?''

''அதுவா... நான்தான் அதனிடம் உன்னைத் துரத்தி இங்கே கொண்டு வரும்படி செய்தேன். நீ என் மேல் மோதித்தான் கீழே விழுந்து மூர்ச்சையானாய்.''

''ஏன் பெரிய பொய்யாகச் சொல்கிறாய்? நீ ஏன் என் மேல் யானையை ஏவி விடணும்?''

''நீ என்னை அந்தப் பாறையருகில் அழைத்தாய். என்றாலும் உன்னைச் சற்று சோதிக்க விரும்பினேன்...''

முத்து சிறிது நேரம் யோசித்தான். 'உண்மையாக இருக்குமோ?' என்று நினைத்தான். ''நீ வானம் போல் இருப்பாய் என்று அந்த அம்மா சொன்னார்களே?''

''இதோ, நான் உன் முன் நீ காண முடியாத அளவு பெரிசாகிடறேன் பார்.''

இராவணன் மீசை

இராவணன் மீசையை நீங்கள் பார்த்ததுண்டோ?

இராவணனைத்தான் இராமர் கொன்று விட்டாரே! கொன்ற பிறகு அவனது மீசையை எடுத்துப் பத்திரப்படுத்தி எங்கேனும் பொருட்காட்சியில் வைத்திருக்கிறார்களோ?

அதெல்லாம் இல்லை. கடற்கரை ஓரமாக உள்ள மணல்வெளிகளில் புதர் போல வளர்ந்திருக்கும் ஒருவகைச் செடியைத்தான் இராவணன் மீசை என்கிறார்கள். இதன் கிளைகள் கொடி போல் இருக்கும். இந்தக் கிளைகளில் உள்ள இலைகள் இராவணன் மீசையைப் போல் விறைப்பாகவும், கூராகவும் இருப்பதால் அந்தச் செடிக்கு 'இராவணன் மீசை' என்று பெயரிட்டு விட்டார்கள்.



கண் இமைக்கும் நேரத்தில் அந்தச் சிறுவன் மறைந்தான். அங்கு தொடக்கம் எது, முடிவு எது என்று தெரியாத தெரிந்து கொள்ள முடியாத அளவில் நின்றது ஓர் உருவம்! முத்து வியந்து இரு கைகளையும் தலைமேல் வைத்து வணங்கியபடி ''போதும் கடவுளே'' என்று கும்பிட்டான். மறு கணம் சிரித்தபடி அந்தச் சிறுவன் வந்தான்.

''சரி, எதற்கு என்னை அழைத்தாய் முத்து?''

''நான் உன்னைத் தேடித்தானே வந்தேன்? உன்கிட்ட நிறையக் கேட்கணும்.''

''முத்து, உன் தாய் செய்த தர்மங்களும், உன் முயற்சியும், அன்பும், துணிச்சலும்தான் என்னை இங்கே வரவழைத்தன. உனக்கு நான் மூன்று வரங்கள் தருகிறேன். நீ விரும்பியதைக் கேள்'' என்றார் கடவுள்.

முத்து முதலில் வல்லித் தீர்த்தம் தேவதையைப் பற்றி நினைத்தான்.

''ஏன் சாமி, வல்லித்தீர்த்தம் தேவதையின் குரல் அப்படி இருக்குது? என் முதல் வரம் இதுதான்; அந்தத் தேவதையின் குரல் சரியாயிடணும்'' என்றான்.

''முத்து, அந்தத் தேவதை அந்தப் பொய்கையில் நீரருந்த முடியாதபடி அங்கு வருபவர்களையெல்லாம் விரட்டுகிறது. தாகத்தோடு வருபவர்கள் நீரருந்த முடியாமல் திரும்புகின்றனர். அது செய்த பாபம்தான் அதன் குரலை இப்படிச் செய்தது. அதற்குப் பரிகாரமாக அந்தப் பொய்கையைச் சுத்தமானதாக வைத்து, தாகத்துடன் நீரருந்த வருபவர்களுக்குத் தாராளமாக நீர் கொடுக்கச் சொல்.''

''இரண்டாவது அந்தக் கிழவரின் கதை...''

''அதுவா, அவர் செய்தது பெரும் பாவம். சென்ற பிறவியிலும் அவர் கஞ்சத்தனமாக இருந்தார். தன் நண்பர் ஒருவர் தானம் செய்ய முயன்றபோது இவர் அதையும் தடுத்தார். தானம் செய்யாமலிருப்பதைவிட, தானம் செய்பவர்களைச் செய்ய விடாமல் தடுப்பது பெரும் பாவம். அந்தப் பாவத்தின் பலன்தான் அவர் இந்தப் பிறவியில் துன்பப்பட்டது. இன்னும் காலம் கடந்துவிடவில்லை. அவரை நன்றாக உழைத்துச் சம்பாதித்துச் சாகும்வரை ஏழை எளியவர்களிடம் இரக்கம் காட்டி அன்னமிடச் சொல். வரும் பிறவிகளில் மேலான குணங்கள் அவருக்குக் கிடைக்கும். இன்னும் ஒரே ஒரு வரம். அதை உன்

லைப் பற்றிக் கேட்கப் போகிருயா? பலா மரத்தைப் பற்றிக் கேட்கப்போகிருயா?''

முத்து சிரித்தான். தான் கடவுளைப் பார்த்ததும், தன் தாயின் வறுமையைப் பற்றிக் கேட்க முடியவில்லை. ஆனால் என்ன? இனி, நானும் போய் வேலை செய்து அம்மாவைக் காப்பாற்றலாம். பாவம், அந்த மரம்... அது என்ன செய்யும்? ''கடவுளே மரத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''நல்லது. அந்த மரத்தின் அடியில் ஒரு பெரும் புதையல் இருக்கிறது. அதை ஒரு பூதம் காவல் காத்து வருகிறது. அந்தப் பூதம் பறவைகளையோ, மிருகங்களையோ, மனிதர்களையோ அண்ட விடுவதில்லை''''

''நான் பலாமரத்தில் ஏறினேன். பலாப் பழத்தைத் தின்றேன். என்னை. அந்தப் பூதம் ஒன்றும் செய்யவில்லையே!''

''நீ என்னையே நினைத்துக் கொண்டு வந்ததால், அது உன்னைச் சும்மா விட்டு விட்டது. அதன் குறை தீர வழி என்னவென்றால், இன்னும் ஒரே வாரத்தில் நீ அங்கு சென்றடையும்போது அந்தப் பூதம் தன் இறுதிக் காலம் சமீபித்து விட்டதாக எண்ணி, அந்தப் புதையலைவிருப்பமானவர்களுக்குக் கொடுத்து விடும். அதன் பின் பலாமரத்தை நாடி உயிரினங்கள் வரும். சரி, மூன்று கேள்விகளும் பூர்த்தியாகி விட்டன. இனி நான் போகலாமா?''

''என்னை ஆசிர்வதித்துவிட்டுச் செல்லுங்கள் கடவுளே!''

கடவுள் ஒரு மனிதனைப் போல் வளர்ந்து, முத்துவைப் பார்த்துக் கூறினார்:

''முத்து, நீ உன் நலனையும்கூட மறந்து, பிறர் நலனைப் பற்றிச் சிந்தித்தாய். உன்னை நான் வாழ்த்துகிறேன். நீ வாழ்வில் எந்தக் குறையுமின்றிப் பல்லாண்டு சுக வாழ்வு வாழ்வாய். ஏழு பிறவிகள் நீ பிறந்தாலும் அப்படியே வாழ்வாய். இறுதியில் நீ என்னையடைவாய்'' என்றார்.

முத்து துதித்துக் கொண்டிருக்கும் போதே கடவுள் மறைந்தார்.

முத்துவுக்குத் தான் கண்டது கனவா, நனவா என்று புரியவில்லை. அவன் திகைத்து நின்றான்.

நல்லதே நடந்தது!

மறுநாள் காலை முத்து கண் விழித்த போது, வெகு நேரமாகிவிட்டது. மரத்தின் நிழலில் படுத்துக் கிடந்தவன் எழுந்தான். தன் தாயை நாடிப் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் செல்ல வேண்டியிருப்பதை எண்ணி, அந்தத் திசையை மனத்திற்குள் கணித்துக் கொண்டு நடந்தான்.

ஏழு நாட்கள் பயணம் செய்த முத்து, அந்தப் பலாமரத்தை அடைந்தான். அவன் மனத்தில் கடவுளைப் பார்த்துப் பேசி ஆசிர்வாதம் பெற்ற மகிழ்வு நிறைந்திருந்தது. தன் வறுமையைப் பற்றிக் கேளாதது உறுத்தவில்லை.

மற்ற மூன்று உயிர்களின் துன்பத்தைத் துடைக்கத் தன்னால் முடிந்ததே என்று மகிழ்ந்தான். அந்தப் பலா மரம் அவனை ஆவலோடு எதிர்பார்த்திருந்தது.

அவன் வருவதைக் கண்டதும், ''அப்பனே, போன காரியம் என்ன ஆனது?'' என்று கேட்டது.

முத்து அதற்கு ஏற்பட்டுள்ள கேடு அதன் மரத்தடியில் பூதம் வைத்துள்ள புதையலினால்தான் என்பதைத் தெரிவித்து, இனி நடக்கப் போவது பற்றிக் கடவுள் கூறியதையும் தெரிவித்தான்.

''அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி தம்பி. அன்று ஓய்வெடுத்தது போல் இன்றும் என் கையில் நீ ஓய்வெடுத்துச்



எதற்குக் கூட்டம்?

''இன்னிக்கு மியூசியத்திலே ஒரே கூட்டமா இருக்கே, என்னடா விசேஷம்?''

''ஒரு பைசா இரண்டு பைசா நாணயங்களைப் பார்வைக்காக வச்சிருக்காங்களாம்.''

—டி. எல். ரெட்டி

செல்'' என்றது பலாமரம். அப்படியே பலாப் பழத்தைச் சாப்பிட்டு விட்டு மரக் கிளையில் படுத்தான் முத்து.

அந்த மரத்தில் உள்ள பூதம் அன்று காலை வெளியே சென்று மாலையில் திரும்பி வரும்போது, இரு கிளிகள் மாறி மாறிப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டது.

''இதோ பார், அந்தப் பூதம் இன்னும் ஒரே வாரத்தில் செத்துவிடும்'' என்றது ஆண் கிளி.

''எப்படிச் சொல்கிறாய்?'' என்று பெண் கிளி கேட்டது.

''ஏதோ என் மனத்தில் பட்டதைச் சொன்னேன். பாவம், அது முடியாத இந்தக் காலத்திலும் பெரும் புதையல் ஒன்றை வைத்துப் பாதுகாக்கிறது. அதை யாருக்காவது கொடுத்து, அந்த ஆள் வாங்கிய பின், 'நீ நன்றாக இருப்பாய்' என்று நல்ல மனத்தோடு வாழ்த்தினால்தான் இது இன்னும் பல காலம் வாழ முடியும்'' என்றது ஆண் கிளி.

பூதம் சோர்ந்து விட்டது. அதற்கும் அப்படியே தோன்றியது. தன் எதிரே வரும் யாரையேனும் பார்த்தால் புதையலைக் கொடுத்து விடலாம் என்று நினைத்துக் கொண்டே வந்த போது, துரதிர்ஷ்ட வசமாக இருட்டி விட்டதால் யாரையும் காணவே முடியவில்லை. வருத்தத்துடன் பலா மரத்திற்கு வந்த பூதத்தின் கண்களில் கிளையில் படுத்திருந்த முத்து தென்பட்டான்.

''டேய், பையா... எழுந்திரு'' என்று அவனை எழுப்பியது. அலறியடித்தபடி எழுந்தான் முத்து.

''நீ யார்?''

''நான்தான் முத்து.''

''நீ முத்தோ, பொன்னோ எனக்குத் தெரியாது. என்னுடன் வா'' என்று அழைத்தது பூதம்.

தூக்கக் கலக்கத்தில் அதன் பின் நடந்தான் முத்து.

மரத்தின் அடியில் ஒரு சுரங்கம்போல் இருந்தது. அதனுள் அழைத்துச் சென்றது. உள்ளே கிடந்த பெரும் புதையலை முத்துவிடம் சுட்டிக் காட்டி, ''இதை எடுத்துக்கொள்'' என்றது பூதம்.


''இதை நான் எப்படி எடுத்துக் கொண்டு செல்வது?'' என்று குழம்பியபடி முத்து கேட்டான். பூதம் இந்தப் புதையலை விரும்பியவருக்குக் கொடுக்கும் என்று கடவுள் சொன்னது நினைவில் வந்தது.

''சரி, நான் மனித உருவம் எடுத்து இந்தப் புதையலைச் சுமந்து வருகிறேன். புறப்படு'' என்றது பூதம்.

வேறு வழியின்றி முத்து அப்பொழுதே அதனுடன் புறப்பட்டான். வழியில் தர்மலிங்கத்தைத் தேடிப் பிடித்து அவரிடம் கடவுள் சொன்ன விவரத்தைக் கூறினான். அவர் அதைக் கேட்டு, ''அப்படியா, சரி, நான் எங்கேயாவது வேலை கிடைத்தால் பார்க்கிறேன்'' என்று புறப்பட்டார்.

''ஐயா, தாங்கள் என்னுடன் வாருங்கள்'' என்று அழைத்தான் முத்து.

''வேண்டாமப்பா. நான் உழைத்து அன்ன தானம் செய்தால்தான் பலன் உண்டு'' என்று மறுத்தார்.



திருவள்ளுவர் திகைப்பார்!

திருவள்ளுவர் எழுதிய பழைய தமிழ் எழுத்து வேறே. இப்போது நாம் எழுதும் எழுத்து வேறே.

திடீரென்று அந்தத் திருவள்ளுவர் இப்போது நம்மிடையே வருவாரானால் நாம் எழுதும் தமிழ் எழுத்துக்கள் சிலவற்றைப் படிக்கத் தெரியாமல், இது ஒரு புது மொழி என்று எண்ணினாலும் எண்ணுவார்.

நாம் மரம் என்று எழுதும்போது எப்படி எழுதுகிறோம்? முதல் எழுத்தாகிய 'ம' எப்படி எழுதுகிறோம்?

'ட' போல எழுதிப் பிறகு வளைத்து மடக்குகிறோம். திருவள்ளுவர் காலத்தில் 'ப' போல் எழுதி, அதனுள்ளே நடுவில் ஒரு புள்ளி இட்டார்கள். நாம் அதை 'ப்' என்று படிப்போம். திருவள்ளுவர் நம் எழுத்தைப் பார்த்தால் 'ம' எழுத்தைப் புது எழுத்து என்று எண்ணிப் படிக்கத் தெரியாமல் நிற்பார். அவர் மரம் என்று எழுதினால் நாம் 'ப்ரப்' என்று படிப்போம். நாம் மரம் என்று எழுதினால் அவரால் படிக்கவே முடியாது. எண்ணிப் பார்த்தால் இது வேடிக்கையாக இருக்கிறது.

—டாக்டர் மு. வரதராசனார்
('எழுத்தின் கதை' என்ற புத்தகத்திலிருந்து)

அவர் விருப்பப்படியே விட்டு விட்டுப் பூதத்துடன் புறப்பட்டான்.

வல்லித் தீர்த்தத்திற்குச் சென்ற போது, அவனுக்கும் பூதத்துக்குமே தாகமாக இருந்தது. அதே நேரம் காவல் தேவதையிடம் அனுமதி பெறாமல் நீர் குடிக்கவும் அவன் விரும்பவில்லை. அழைத்துப் பார்த்தான் தேவதையை. அவள் வரவில்லை. அவளை வரவழைப்பதற்காகவாவது நீர் அருந்துவது என்று நினைத்துப் பொய்கையிலிருந்து ஒரு கை நீர் அள்ளியபோது அவள் வந்தாள்.

''தேவதையே நீ சொல்லியது போல் கடவுளிடம் கேட்டேன்.''

முத்துவிடம் என்ன சொன்னோம் என்பதையே அந்தத் தேவதை மறந்து விட்டிருந்தாள். அவன் கடவுளைக் காண்பான் என்ற நம்பிக்கையிலா அவள் சொன்னாள்?

''எதைக் கேட்டாய்?'' என்றாள்.

''உன் குரல் பற்றி நீ கேட்கச் சொன்னாயே...''

''ஓ அதுவா!'' அவளுக்கு நினைவு வந்து பரபரப்புடன், ''என்ன சொன்னார்?'' என்று கேட்டாள்.

''நீ தாகத்துடன் வருபவருக்குத் தண்ணீர் கொடுக்காமல் மிகவும் துன்புறுத்துகிறாயாம். அதனால்தான் இப்படி உன் குரல் போயிற்றாம். இன்னும் இப்படியே இருந்தால் உன் குரல் கழுதையின் குரலை விட மோசமாகிப் போய்விடும்'' என்றான்.

''நான் என்ன செய்யவேண்டுமாம்?'' என்று பயத்துடன் கேட்டாள்.

''இந்தப் பொய்கையை நீ சுத்தமாக வைத்திருந்து வருபவர்க்கெல்லாம் நல்ல நீர் கொடுக்க வேண்டும். அவர்கள் தாகத்தைத் தீர்க்கத் தீர்க்க உன் குரல் சரியாகி விடும்''


அவள் நினைத்துப் பார்த்தாள். தான் நீர் அருந்த வருபவர்களைத் தடுத்ததன் பின்தான் தொண்டை இந்த நிலைக்கு வந்தது என்பதை உணர்ந்தாள்.

''அப்படியே செய்கிறேன். முதலில் நீயே உன் விருப்பப்படி நீரருந்தி ஆரம்பித்து வை'' என்றாள்.

அவன் குடித்த பின், மனித உருவில் இருந்த பூதமும் குடித்தது.

அவள் முத்துவுக்கு நன்றி கூறி ஆசிர்வதிக்க... முத்து தன் ஊரை அடைந்தான்.

சுப்பம்மா மகனை அனுப்பிவிட்டு அந்தக் கவலையிலேயே வீட்டில் கிடந்தாள். சதா கண்ணீரும் கம்பலையும்தான்! மகனைக் கண்டதும் அவளுக்குச் சொல்ல முடியாத ஆனந்தம்.



ஏன் வருத்தம்

ஒருவர்: 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவர் குறள் உங்களுக்குத் தெரியாதா? ஏன், இப்படி ரொம்பவும் வருந்துறீங்க?

புலவர்: அது சரிதான்யா! இடுக்கண் எனக்கல்லவா வந்திருக்கு! உமக்கு இல்லையே, நான் சிரிப்பதற்கு!

- சிவசக்தி

அப்படியே அவனை அணைத்துக்கொண்டு அழுதாள். அம்மாவைப் பிரிந்த துயரம் முத்துவுக்கு இருக்காதா? அவனும் அழுதான்.

பூதம் அவன் முன் அந்தப் புதையலை வைத்துவிட்டு, ''தம்பி, என்னை ஆசிர்வதியுங்கள்'' என்று கேட்டது.

''நீ நன்றாகப் பல்லாண்டு வாழ்க'' என்றான் முத்து.

''தம்பி, நான் உங்களுக்கே அடிமையாக உங்களிடமே இருக்கிறேன்'' என்றது பூதம்.

''இது யார் முத்து?''

''அந்தக் கதையெல்லாம் பிறகு அம்மா. இதோ பாருங்கள் அது கொண்டு வந்த பெரும் புதையல்!''

அந்தப் புதையல் அவர்கள் குடிசை வீடு நிறைய இருந்தது.

''உன் விருப்பப்படி நீ எங்கு வேண்டுமானாலும் இரு'' என்றான் முத்து பூதத்திடம்.

பூதம் மகிழ்ந்தது. முத்து தன் தாயிடம் நடந்த கதையைக் கூற, தாய் மகனை அன்போடு அணைத்துக் கொண்டாள். அவன் முயற்சி, உறுதி, அன்புள்ளம் யாவும் அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின.

அதன் பின்...

முத்து அந்தப் புதையலைக் கொண்டு எவ்விதக் குறையுமின்றிப் பல்லாண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். அவன் வாரி வழங்கி வழங்கியே அந்த ஊரும் பொன் கொழிக்கும் பூமியானது!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



பேராசிரியர் **கல்கி**

நினைவு நாள் — டிசம்பர் 5

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka